குண்டூசி

ஆகஸ்ட் '54.. எட்டு அணா

1064

"ஸ்நானத்திற்கு ரெமி சோப்,
ஸ்நானத்திற்குப் பின் ரெமி ஸ்னோ, பவுடர்,
முக கவர்ச்சிக்குக் கேட்பானேன்!"
என்று பிரபல தென்னிந்திய நடிகை
மிஸ். மீனாக்ஷி கூறுகிறார்.

A. V. R. A. & CO. MADRAS I BOMBAY

398

ராலிண்ட்

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

ஸென்-ராலே சைகிள்களுக்குப் பொருத்தப்படும் அசல் ராலே உறுப்புகளில் ராலிண்ட் என்ற இந்தப் பெயர் இருக்கின்றதா என்று கவனியுங்கள்.

REGISTRAR OF BOOKS
2 SEP 1954
MADRAS

இவ்வுறுப்புகள் எல்லாம் ஸென்-ராலே தொழிற்சாலையில் ராலே விவரணத் திட்டத்திற்கு சற்றும் வழுவாமல் தயாரிக்கப்பட்டு ராலே, ராபின்ஹூட், ரட்ஜ், மற்றும் ஹம்பர் சைகிள்களுக்கு பொருத்தமான அசல் உறுப்புகளாக இணைக்கப்படுகின்றன, எல்லா உறுப்புகளிலும் **RALIND**(ராலிண்ட்) என்ற பெயர் காணப்படும்.

ஸென்-ராலே

இண்டஸ்ட்ரீஸ்
ஆப்-இந்தியா
லிமிடெட்

ராலிண்ட்

இந்த அடையாளமுள்ள அசல் ராலே உறுப்புகளை கவனித்து வாங்கினால், போலிகளினின்றும் பாதுகாப்படைவீர்

SRX-22 TM.

விரைவில்
வருகிறது!
134149
... ஜம்பணு & நந்தி ...
குடும்பம்
டைரக்ஷன் : ஜம்பணு M.A., B.Ed.
ஸ்டுடியோ
வாஹினி
SPS
பூரண உரிமையாளர் : M/s நந்தி பிக்சர்ஸ் சர்க்யூட் பெங்களூர் ஸிடி.

மற்றும் ஒரு சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா...

Glaxo

கிளாக்ஸோ பிஸ்கோத்துகள்

இவை உலகப்பிரசித்தி பெற்ற பாலுணவான கிளாக்ஸோ வின் புஷ்டியான போஷாக்கு சத்து முழுவதும் அடங்கி யிருக்கும்படி தயாரிக்கப்பட்டு, உபரிவிட மின்களும் சேர்க்கப் பட்டவை.

சிறந்த பிஸ்கோத்துகள்

பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX-11 TM

குண்டூசி

ஆசிரியர்:
பி.ஆர்.எஸ்.கோபால்

கதைப் பஞ்சம்

உணவுப் பஞ்சம், துணிப் பஞ்சம், வீட்டுப் பஞ்சம், போன்ற பல பஞ்சங்கள் ஒவ்வொன்றாகக் குறைந்துகொண்டே வருகின்றன. ஆனால், சினிமா உலகில் முன்னைவிட இப்பொழுது கற்பனைப் பஞ்சம், கதைப் பஞ்சம், பணப் பஞ்சம் போன்றவை அதிகமாகி இருக்கின்றன.

புராணக் கதைகளையே—அதுவும் ஒரே கதையைப் பன்முறை—திரும்பத் திரும்பப் படமாக்கி சலிப்பை உண்டுபண்ணி வந்த காரணத்தினால் "சமூகப் படங்களைத் தயாரியுங்கள்" என்ற கூக்குரல் கிளம்பியது. ஆனால். "சமூகப் படங்களைக் கூட நாங்கள் ஒரே மாதிரியாக தயாரித்துக் காட்ட முடியும்" என்று கூறுவதேபோல இருக்கின்றன தற்கால சமூகப் படங்கள்.

பல படங்களின் கதைகள் ஒரே மாதிரி; அவற்றில் வரும் சம்பவங்கள் ஒரே மாதிரி; நடிக நடிகைகள் ஒரே மாதிரி: இன்னும் பாட்டு, நடனம், வசனம் எல்லாம் ஒரே மாதிரிதான்! இப்படங்களின் வசூலும் ஒரே மாதிரி இருந்து விட்டால் கவலையில்லை. ஆனால், ஒரு படம் நல்ல வசூலைப் பெற்றால் ஒன்பது படங்கள் படுதோல்வி அடைந்து விடுகின்றனவே.

சமூகப் படங்கள்கூடத் தோல்வியுறத் தொடங்கிவிட்டனவே என்ற கவலையுடன் சில படமுதலாளிகள் மறுபடியும் புராணப் படங்களைத் தயாரிக்க முற்பட்டிருக்கிறார்கள். மீண்டும் படங்களுக்கு வசூல் ஏற்படுவதற்குப் புராணக் கதைகளின் பக்கம் திரும்ப வேண்டிய அவசியமில்லை. சமூகக் கதைகளே நூதன முறையில் இருந்தால் படம் நல்ல வெற்றி பெறும் என்பது நிச்சயம்.

"அது சரிதான்; நல்ல சமூகக் கதைகளுக்கு எங்கே போவது சொல்லுங்கள்" என்றார்கள் சில படமுதலாளிகள் என்னிடம். "கதையை அனுப்பினால் அதைஒரு நகல் எடுத்துக்கொண்டு திருப்பி அனுப்பி விடுகிறார்கள்" என்று முறையிடுகிறார்கள் சில கதாசிரியர்கள். "நான் ஒரு நல்ல கதையை எழுதி யிருக்கிறேன் அதை சினிமாப் படமாக்க யாருக்கு அனுப்பலாம்?" என்று பல கதாசிரியர்கள் என்னிடம் கேட்கிறார்கள்.

இவற்றிலிருந்து என்ன தெரிகிறது? "தமிழ் நாட்டில் கதை எழுதக் கூடியவர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். படமுதலாளிகளுக்கோ நிறைய நல்ல கதைகள் தேவை. ஆனால் சில படமுதலாளிகள் செய்த கதைத் திருட்டின்

பட்டை-7 ஊசி-11 பிரதி-83

ஆகஸ்டு – 1954

காரணமாக கதாசிரியர்கள் கதைகளை பட முதலாளிகளிடம் அனுப்ப பயப்படுகிறார்கள் என்பது தான். இந்த அவநம்பிக்கையான நிலைமையை உடனே மாற்றி நல்ல கதைகளை அடைவதற்கு படமுதலாளிகள் ஏதேனும் வழி செய்தே ஆக வேண்டும்.

நல்ல கதைகளை பெறுவதற்காக பத்திரிகைகளும், அகில இந்திய ரேடியோவும் செய்வதேபோல் படமுதலாளிகள் ஒவ்வொருவரும் கதைப் போட்டி ஒன்றை நடத்தலாம். இது சாத்தியமில்லையென்றால் படமுதலாளிகள் பலர் ஒன்று சேர்ந்து பிலிம் சேம்பர் மூலம் ஒரு பொது (கதைப்) போட்டியை நடத்தலாம். தேர்ந்தெடுக்கப்படும் கதைகளை, மற்றவர்களைவிட அதிக விலை கொடுக்கும் பட முதலாளி விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். சிறந்த கதைக்குப் பிரத்தியேகப் பரிசும் வழங்கலாம்.

சினிமாப் படங்களுக்குக் கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இவ்விதம் ஒரு ஏற்பாடு நிரந்தரமாகச் செய்யப்பட்டால், படமுதலாளிகளுக்கு நல்ல நல்ல கதைகள் கிடைக்கும். அதோடு எழுத்தாளர்களுக்கும் இந்த ஏற்பாடு நிச்சயமாக மிக செளகரியமாகவும் லாபகரமாகவும் இருக்கும்.

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா
இலங்கை ... ... 50 சதம்
வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

'குண்டூசி'யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.

"மலைக்கள்ளன்"—பக்ஷிராஜாவின் வெற்றி

ஜனரஞ்சகமான காட்சிகள் நிறைந்த படம்

"தொட்டதை யெல்லாம் பொன்னாக்கும் திறன்" படைத்த டைரெக்டர் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு சென்ற மாதம் "மலைக் கள்ளனை" வெளியில் அனுப்பி பெரும் பொற் குவியலைப் பெற்று வருகிறார்!

பணக்காரர்கள் என்ற போர்வையில் கொள்ளை யடிக்கும் ஒரு கூட்டம்; "கொள்ளைக்காரன்" "கொலைகாரன்" என்று கருதப்படும் மலைக் கள்ளனின் பரோபகார தீரச் செயல்கள்; அவனைப் பிடிப்பதையே கடமையாகக் கொண்ட இன்ஸ்பெக்டர்; கவைக்குதவாத "ஐடியா"க்களின் பிறப்பிடமான ஹெட் கான்ஸ்டேபிள்-இவர்களைப் பற்றியதே இப் படக் கதை. இது நாமக்கல் கவிஞரால் எழுதப்பட்டதாகும்.

இக்கதை விறுவிறுப்பான முறையில் படமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால், மலைக்கள்ளனின் விருத்தாந்தங்களை வெளியிடும் கட்டத்தை இன்னும் சற்று விளக்கமாகவே செய்திருக்கலாம்.

மு. கருணாநிதி தம் வழக்கப்படி 'அதிகப் பிரசங்கங்களை' வசனத்தில் புகுத்தாமல் பொருத்தமாய் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

இந்தப் படத்தில் எட்டே பாட்டுகள் தாம் உள்ளன. அவையும் கதைப் போக்கைத் தடைப்படுத்தாமல் அமைந்துள்ளன. பானுமதி, பெரிய நாயகி, சௌந்தர ராஜன் ஆகியோர் இவைகளைப் பாடியுள்ளனர்; பாட்டுகள் இனிமையாயுள்ளன.

ஆனால், பாட்டைவிட நடிப்பே படத்தில் விசேஷமாக கவனத்தைக் கவருகிறது. எம். ஜி. ராமச்சந்திரன் மூன்று வேஷங்களில் தோன்றி நன்கு நடித்திருக்கிறார். மூன்றிலும் சாயபு நடிப்பு தான் பிரமாதம். ஸ்ரீராமின் நடிப்பு சப்பென்றிருக்கிறது. ஆனால் மலைக் கள்வனுடன் சண்டையிடும் காட்சி நன்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எம்.ஜி. சக்ரபாணி இன்ஸ்பெக்டராகவும், டி. எஸ். துரைராஜ் 'ஏட்'டாகவும் நடித்துள்ளனர். துரைராஜ் அபாரமாக நடித்து, அடிக்கடி நம்மை சிரிக்கச் செய்கிறார். அவர் பல 'ஐடியா'க்களை முத்தாக உதிர்த்து முட்டாள் பட்டம் கட்டிக் கொள்ளும்போது சிரிக்காதவர்களுக்கு சிரிக்கவே தெரியாது என்று சொல்லி விடலாம். டி. பாலசுப்ரமண்யத்திற்கு படத்தில் அதிக வேலையில்லை. கே. துரைசாமி வழக்கம்போல இப் படத்திலும் "உயிரை விட்டு"(!) நடித்திருக்கிறார். சஹாதேவனின் நடிப்பும் பரவாயில்லை.

பானுமதியின் நடிப்பு நன்கு அமைந்திருக்கிறது; சுமாராகப் பாடியிருக்கிறார். சுரபி பாலசரஸ்வதி நன்கு நடிக்க முயன்றிருக்கிறார். பி. எஸ். ஞானத்தின் நடிப்பு பரவாயில்லை. மற்றவர்களின் நடிப்பு சாதாரணம்.

இப்படத்தில், விரைவில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் சாயி. சுப்புலக்ஷ்மி இருவரின் நடனங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவர்களின் ஆட்டம கலைத் திறன் நிறைந்ததாக இருக்கிறது; ஆனால், இவர்களது நடிப்பு சாதாரணம் தான்.

கத்திச் சண்டை, குத்துச் சண்டை, மல்யுத்தம், ஸ்டன்ட் முதலியவை இப்படத்தில் விறுவிறுப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்கு ஆகாய மார்க்கமாய் (கம்பிகளில் தொங்கும் பெட்டி மூலம்) மலைக் கள்ளன் செல்லும் காட்சி தத்ரூபமாக இருக்கிறது. ஆனால் காடு மலைகளுக்கிடையில் உள்ள அந்த மலைக் கள்ளன் பங்களாவை அமைப்பது எப்படி சாத்தியமாயிற்றோ ?

அப்துல் ரஹிமை இரண்டாம் முறை இன்ஸ்பெக்டர் சந்திக்கும் போதே, 'சாயபுதான் மலைக் கள்ளன்' என்று தெரிந்து விடுகிறது. சாயபு யார் என்பதை கடைசிவரையில் சந்தேகம் தோன்றாத வண்ணம் கொண்டு போயிருக்க வேண்டும்.

காட்டு மிருகங்களின் சண்டைக் காட்சிகள் மயிர்க்கூச்செரிவதாக உள்ளன. படத்தில் உள்ள இதுபோன்ற விஷயங்களை ரஸிகர்கள் பெரிதும் ரஸிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பொதுஜன ரஸனைக்கேற்ற அம்சங்கள் படத்தில் நிறைய இருப்பதால் இப்படம் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதில் ஆச்சரியமில்லை. —"நிழல்"

அலுபபு மனிதனை வெல்கிறது
தேநீர்
அலுப்பை
வெல்கிறது
PSTB 125
தேயிலை போர்டு வெளியிடடது

புதுப் படங்கள்

நேஷனல் புரொடக்ஷன்ஸார், "அம்மையப்பன்" என்ற சமூகப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தின் கதை-வசனங்களை மு. கருணாநிதி சமீபத்தில் அவர் சிறைச்சாலையில் இருந்த சமயம் எழுதியுள்ளாராம். ராஜேந்திரன், ஜி. சகுந்தலா, எஸ். வரலக்ஷ்மி ஆகியோர் படத்தில் நடிக்கக் கூடுமென்று தெரிகிறது. படம் பீம்ஸிங் டைரெக்ஷனில் நியூடோன் ஸ்டுடியோவில் தயாராகும்.

கோவையில், பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ் என்ற படக் கம்பெனி ஒன்று தோன்றியுள்ளது. நடிகர் எஸ். ஏ. நடராஜன், ஒளிப் பதிவாளர் ஜே. ஜி. விஜயம் மற்றும் ஒன்றிரண்டு பேர்களை பாகஸ்தர்களாகக் கொண்ட கம்பெனியாம் இது. இவர்கள் ஜூன் மாதம் 30-ம் தேதி "நல்ல தங்கை" என்ற தங்கள் முதல் படத்திற்கு பூஜைபோட்டார்கள். இப்படத்தின் கதை-வசனத்தை ஏ. பி. நாகராஜன் எழுதியிருக்கிறார். எம். என். நம்பியார், மாதுரிதேவி, பி. ஆர். சுலோசனா, எஸ். ஏ. நடராஜன், ஏ. கருணாநிதி, எம். எஸ். எஸ். பாக்கியம், வி. எம். ஏழுமலை ஆகியோர் முக்கிய பாகங்களில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளனர். படம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரிக்கப்படும்.

ஏற்கெனவே ஒரு முறை படமாக வெளி வந்துள்ள "அம்பிகாபதி" மீண்டும் ஒரு முறை படமாக வெளிவரப் போகிறது. தமிழகத்தின் தலை சிறந்த இக்காவியத்தை சரவணபவா, யூனிட்டி பிச்சர்ஸார் ஆகிய இரு கம்பெனிகளும் கூட்டாகச்சேர்ந்து தயாரிக்கப்போகின்றன. சிவாஜி கணேசனும்—பத்மினியும் காதல் ஜோடியாக இப்படத்தில் நடிப்பார்கள்.

பத்மினி பிக்சர்ஸார் அடுத்தபடி, "முதல் தேதி" என்ற முழு நீள ஹாஸ்யப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். ஒரு மராத்திக் கதையைத் தழுவியதாம் இப்படக் கதை. படத்தை ப. நீலகண்டன் டைரெக்ட் செய்கிறார்.

மதுரை சித்ரகலா ஸ்டுடியோவில், அஜந்தா பிக்சர்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியார் "நாடோடி" என்ற படத்தைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம்.

கோவை, பக்ஷிராஜா ஸ்டுடியோ முதலாளி ஸ்ரீராமுலு நாயுடு "சாவித்திரி" புராணக் கதையை தெலுங்குப் படமாகத் தயாரிக்கப் போகிறாராம். சாவித்திரியாக ஜி. வரலக்ஷ்மி, சத்தியவானாக என். டி. ராவ், யமனாக ரங்காராவ், நாரதராக ஒரு நடிகை ஆகியோர் நடிக்கப் போகிறார்களாம்.

மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ் என்ற புதிய படத் தயாரிப்புக் கம்பெனியார் "ராமதாஸ்" தெலுங்குப் படத்தையும், "குச-லவா" தமிழ்ப் படத்தையும் தயாரிக்கப் போகிறார்கள். "ராமதாஸி"ன் வசனங்களை சமுத்ராலு ராகவாச்சாரியாரும், "குச-லவா"வின் வசனங்களை "சாண்டில்ய"னும் எழுதுகின்றனர். "ராமதாஸி"ல், ராமதாஸாகவும், "குச-லவா"வில் வால்மீகியாகவும் நடிக்கும் நாகய்யாவே மேற்படி படங்களை டைரெக்ட் செய்வார்.

கோவையில் புதிதாகத் தோன்றியுள்ள கலைமணி பிக்சர்ஸார் "நான் யார்?" என்ற படத்தை பல நக்ஷத்திர நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப் போகிறார்களாம். படம் கோவை. சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாராகுமாம். கதை, வசனத்தை "அன்புதாஸன்" என்பவர் எழுதியிருக்கிறார்.

புதிதாகத் தோன்றியுள்ள பத்மா புரொடக்ஷன்ஸார் தங்களது முதல் படமாக "பாலநாகம்மா"வைத் தமிழில் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். பத்மினியை பிரதம நடிகையாகக் கொண்ட இப்படம் ஏவி. எம். ஸ்டுடியோவில் உருவாகும்.

சிவகாமி பிக்சர்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனி ஒன்று புதிதாக ஆரம்பமாகியுள்ளது. இவர்கள் "பூம்புகார்" என்ற படத்தை முதலில் தயாரிக்கப் போகின்றனர். இப்படத்தின் ஆரம்ப பூஜை விழா, சென்ற மாதம் 10-ம்தேதி கோடம்பாக்கம் பிரகாஷ் ஸ்டுடியோவில் நடைபெற்றது. "பூம்புகார்" என்பது பழைய "கண்ணகி" கதைதான். இதன் வசனங்களை மு. கருணாநிதி எழுதுகிறார். படம் ராமண்ணா டைரெக்ஷனில் தயாரிக்கப்படுமாம்.

வாழ்க்கை வர்ணனை

"கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை?"—இது ஒரு பிரசித்தமான பழங் காலப் பழமொழி. தற்போது சினிமாப் படங்களில் புகழ் பெற்று வரும் காமெடியன் பி. டி. சம்பந்தம் ஒரு காலத்தில் ஒரு வெள்ளிப் பட்டறையில் வேலை செய்து வந்தாராம். இது ஈ விஷயத்தைவிட மிக மிக வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இதுபோலத் தான் நம் நடிகர்களுள் அநேகர், நாம் கனவிலும் கருத முடியாத—தங்களுக்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாத தொழில்களில் ஈடுபட்டிருந்து விட்டுப் பிறகு நாடக, சினிமா நடிகர்களாக ஆகியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கையில், ஈக்கு மட்டுமல்ல; எறும்புக்கும் கொல்லன் பட்டறையில் வேலையிருந்தால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே, இந்தக் காலத்தில் மேற்படி பழமொழியை உபயோகிப்பதற்கு நமக்கு அச்சமாகத்தான் இருக்கிறது. தங்கள் "தனி நபர் சுதந்திரம்" வாங்

காமெடியன் சம்பந்தம்

கண்சே

மேலே: ''அந்த நாள்.'' வலது புறம் 'சங்கம்' படத்தில்.

கப்பட்டுவிட்டதாக ஈக்களும் எறும்புகளும் ஒரு மஹா நாட்டைக் கூட்டி, நம்மை சுப்ரீம் கோர்ட்டிற்கு இழுத்தாலும் இழுக்கலாம்!

"அது போகட்டும்; காமெடியன் சம்பந்தத்திற்கு கன்னரைப்பட்டறையில் என்ன வேலை?" என்று கேட்கிறீர்கள். அடடா. திரும்பவும் அதே கேள்விதானா! ஓஹோ, வேறு அர்த்தத்தில் கேட்கிறீர்களா? இதோ சொல்லுகிறேன்:

சம்பந்தம் சென்னை கோமளீஸ்வரன் பேட்டையில் இருந்த தர்மப் பள்ளிக்கூடத்தில் முதலில் சேர்ந்து ஏழு வருஷகாலத்தில் மிக சிரமப்பட்டு நான்கு வகுப்புக்களைக் கடந்தார்! பையன் பட்ட சிரமத்தைப் பார்த்து பெற்றோர் மனம் வெதும்பி விட்டனர் போலும்! "படிப்பு வராவிட்டால் பரவாயில்லை; பையன் பிழைக்கும் வழியையாவது தேடிக் கொள்ளட்டும்" என்ற எண்ணத்துடன் அவரை அவர்கள் கோமளீஸ்வரன் பேட்டையில் இருந்த ஒரு வெள்ளிப் பட்டறையில்

வேலைக்கு அமர்த்திவைத்தனர். அந்தப் பட்டறையில் சம்பந்தம் செய்துவந்த வேலைக்கு "எடுபிடி வேலை" என்று பெயர். அதாவது, இந்தக் காலத்திய ஆபீஸ் பையன் மாதிரி அவர் ஒரு "பட்டறைப் பையனாக" விளங்கி வந்தார். கூப்பிட்ட குரலுக்கு ஓடுவது, யார் எதைச் சொன்னாலும் செய்வது—இதுவே அவரது வேலை. இந்த வேலை அவருக்குப் பிடிக்கவில்லை; இருந்த போதிலும் அவர் 'தலைவிதியே' என்று செய்து வந்தார். இப்படியிருக்கையில், சம்பந்தத்திற்கு கத்தி விளையாட்டு; பாணா, செடிக்குச்சி முதலியவைகளில் கவனம் சென்றது. அதன் விளைவாக, அவர் பட்டறையில் வேலை செய்தபடியே திருவட்டீஸ்வரன்பேட்டையிலிருந்த ஒரு கறடிக் கொட்டடியில் சேர்ந்து பயிற்சி பெறலானார்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு—அதாவது பட்டறையில் சேர்ந்த பின் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு சம்பந்தம் பட்டறை வேலையை "ராஜிநாமா"ச் செய்து விட்டார்! அப்பொழுது அவருக்கு வயது பதினைந்தே.

சம்பந்தத்திற்கு சிறு வயது முதலே தெருக்கூத்துப் பார்ப்பதில் ரொமபவும் இஷ்டம். அவர் ஒரு நாடகத்தைப் பார்த்துவிட்டு வந்தாரானால், அப்புறம் கொஞ்ச நாளைக்கு அவர்கள் வீடு பாட்டும், பேச்சுமாய் அமர்க்களப்படும். எல்லாம் நம் சம்பந்தத்தின் நாடக ஒத்திகை காரணமாகத் தான். இளம் வயதில் மனதில் ஆணித்தரமாய் பதிந்து விட்ட நடிப்பு உணர்ச்சி நாளடைவில் வளர்ந்து வந்து வெள்ளிப் பட்டறையை விட்ட சமயத்தில், தலைதூக்கி நின்றது.



வலது புறம்: "பெண்" தமிழ்ப் படத்தில்

மேலே: "செல்லப் பிள்ளை" தமிழ்ப் படத்தில்

அச்சமயத்தில், சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் ஆலந்தூர் டிராமாட்டிக் கம்

பெனியினர் நாடகங்களை நடத்திவந்தனர். சம்பந்தமும், மற்றும் ஒரு டஜன் பேர்களும் இக் கம்பெனியில் சேரும் நோக்கத்துடன் சென்றனராம். இவர்கள் அனைவரிலும் சம்பந்தமே முதன்மையாகக் கருதப்பட்டுக் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளப் பட்டார். மற்றும் கம்பெனியார் சம்பந்தத்தைப் பாடச் சொன்னார்கள். ஒரு பாட்டு ஆவதற்குள்ளேயே "போதும்" என்று

கீழே : "செல்லப் பிள்ளை"யில்

மேலே : "பொன்வயல்" படத்தில்.

விட்டு, சம்பாஷணைகளைப் பேசச் சொன்னார்கள். அதில் அவர்கள் ஓரளவு திருப்தி அடைந்தனர். பிறகு கத்தி, பாணா, செடிக்குச்சி முதலியவைகளில் தமக்குள்ள திறமையை வெளிப்படுத்தினார். கம்பெனியார் இதைப் பார்த்து மிகப் போற்றி சம்பந்தத்தை ஒரு நடிகராகச் சேர்த்துக் கொண்டனர்.

சம்பந்தம் கம்பெனியில் சேர்ந்த போது அரந்தாங்கி ஆத்மலிங்கம் பிள்ளை என்பவர் ஹாஸ்ய நடிகராய் இருந்தார். அவர் தான் இவருக்கு நடிப்பில் பயிர்சி அளித்தவர். முதன் முதவாக "மஹாபாரதம்" நாடகத்தில் சம்பந்தம் அபிமன்யு வேஷம் தாங்கி மேடைக்குச் சென்றார். முதல் நாடகத்திலேயே அவர் வெற்றியுடன் திரும்பியதால், அன்று முதல் பால கிருஷ்ணன், பிரஹலாதா போன்ற பால பார்ட்டுகள் எல்லாம் அவருக்கு ஒதுக்கப்

பட்டு விட்டன. "புல்புலையான்" நாடகத்தில் ஆத்மலிங்கம் பிள்ளை படைத் தலைவனாகவும் சம்பந்தம் குட்டி சிப்பாயாகவும் தோன்றுவார்கள். வழக்கம்போல் ஒரு நாள் ஆத்மலிங்கம் சம்பந்தத்திடம், "இதோ பார்! உன்னை பீரங்கியில் வைத்து சுட்டு, எதிர்க் கட்சிக்கு அனுப்புகிறேன். நீ அவர்களை துவம்சம் செய்து விட்டு வந்துவிடு. என்ன, சரிதானே?" என்று கூறினார். ஆனால் வழக்கம் போல் சம்பந்தம் பதில் அளிக்கவில்லை; அதற்குப் பதில் தம் கோட்டைக் கழற்றினார். உள்ளே இருந்து ஒரு தேள் வெளி வந்தது. சம்பந்தம் கோட்டை எறிந்து விட்டுத் துள்ளிக் குதித்தார். எதிர்பாராத இந்த சம்பவத்தை சபையோர் சிறந்த ஹாஸ்யமாகக் கருதி சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

அக்காலத்தில் பிரஹலாதன் வேஷத்தில் சம்பந்தம் பிரமாதமான பெயர் பெற்றிருந்தார். எனவே,

தொடர்ச்சி 70ம் பக்கம்.

"கவியின் கனவு" நாடகத்தில்.

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதில் அளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

எஸ். லக்ஷ்மணன் (திருநெல்வேலி)

நான் ஒரு கதை எழுதியிருக்கிறேன். அதற்கு வசனமும் தயாராயிருக்கிறது. அது சினிமாப் படமாக வெளிவருவதற்கு நீங்கள் உதவ முடியுமா?

மன்னிக்கவும். பல அன்பர்கள் கதை எழுதுகிறார்கள்; அநேக அன்பர்கள் சினிமாவில் நடிக்க விரும்புகிறார்கள். இவர்கள் எல்லோரும் தவறாக நினைக்கிறார்கள். சினிமா உலகின் திறவுகோல் என்னிடம் இருப்பதாக! தாங்களாகவே முயற்சித்து, சினிமா உலகில் இடம் பெற்றால், பிறகு அவர்களைத் தக்க தருணத்தில் பாராட்டி, துரிதமாக முன்னுக்கு வரச் செய்வது தான் என்போன்ற பத்திரிகாசிரியர்கள் செய்யக் கூடிய காரியமாகும்.

பி. சுப்ரமண்யம் (கொழும்பு)

எம். வி. ராஜம்மாவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நெ. 5, கோபாலகிருஷ்ண ஐயர் தெரு, தியாகராய நகர், சென்னை-17 என்று எழுதும்.

கே. எஸ். பொன்னுசாமி (காட்டு முன்னூர்)

ரஞ்சன் இப்பொழுது எங்கே இருக்கிறார்? என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ரஞ்சன் ஹிந்திப் படங்களில் நடித்தவுடன் அவருக்கு வடநாட்டில் அதிக கிராக்கி ஏற்பட்டுவிட்டது. எனவே, அவர் வடநாடு சென்று சில படங்களில் நடித்துவிட்டு மீண்டும் தென்னாட்டிற்கே திரும்பிவிட்டார். இப்பொழுது அவர் அசோகாவின் "என் மகள்" படத்தில் நடித்து வருகிறார்.

ஏ. ராமலிங்கம் (மல்லாகம், இலங்கை)

புராணத்தை எதிர்க்கும் கருணாநிதி மாயஜாலங்கள் நிறைந்த "மனோகரா"வுக்கு வசனம் எழுதியதேன்?

புராணங்களை ஒழிப்பதற்கு இது ஒரு புது வழி! புராணத்தின் மூலம் பிழைத்து

அசோகா பிக்சர்ஸ் தயாரித்துவரும் "என் மகள்" தமிழ்ப்படத்தில் எம். என். நம்பியாரும், மைனாவதியும்.

வரும் கதை வசனகர்த்தாக்களை முதலில் விரட்டிவிட்டால் பிறகு புராணங்களை ஒழிப்பது சுலபம் அல்லவா!

கே. எஸ். ராமன் (அறந்தாங்கி)

பூ. ஆர். ஜீவரத்தினம் ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார்?

ஜீவரத்தினம் படஉலகில் பிரசித்தி பெற்றது சங்கீதத்தின் மூலமாக. பிறகு சினிமாப் படங்களில் சங்கீதம் வகித்த ஸ்தானத்தை "இனக்கவர்ச்சி" பற்றிக் கொண்டதால், அவர் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். அவர் இப்பொழுது சங்கீதக் கச்சேரிகள் செய்வதில் முனைந்திருக்கிறார். சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற எண்ணத்தை அவர் விட்டுவிட்டார் போலிருக்கிறது.

ல. சாவித்திரி (காங்கயம்)

டி. ஆர். ராஜகுமாரி, பத்மினி இருவருள் அழகிலும், குணத்திலும் சிறந்தவர் யார்?

அழகில் பத்மினியை முதன்மையாய் கூறவேண்டும். இருவரது குணங்களும் எனக்குப் பிடிக்கவில்லை. காரணம், அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை எனக்குக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்!

என். பால்ராஜ் (வடகரை)

கண்ணம்பாவின் விலாஸத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மலோனி ரோடு, தியாகராய நகர், சென்னை-17.

"அன்பு" (செருவாமணி)

நான் திரைக்கதை வசனம் தேன் ததும்பும்படியாக ஒரு திரைக் காவியத்தை வரைந்துள்ளேன், அதைப் படத் தயாரிப்பாளர்களுக்கு அனுப்பலாமா?

உமது காவியத்தில் சில பொன் மாத்திரைகளையும் சேர்த்து அனுப்பினீரானால் நம் படமுதலாளிகள் மிக வரவேற்பார்கள்!

என். ராமகிருஷ்ணன் (சுழிபுரம், இலங்கை)

சங்கீத வாணி வஸந்த குமாரிக்கு என் நண்பர் ஒருவர் "தென்னாட்டுக் குயில்" என்ற பட்டத்தை அளிக்க விரும்புகிறார். அதை வஸந்தகுமாரி ஏற்றுக் கொள்ளுவாரா?

வஸந்தகுமாரி ஏற்றுக்கொள்ளுவார்; ஆனால் அந்தக் குயில்தான் ஒருவேளை ஆட்சேபிக்கக்கூடும்! ஏனென்றால், முன்பே எவ்வளவு சங்கீத மணிகள் அதைப் 'பட்டத்திற்கு' இழுத்திருக்கிறார்கள்!

ஜே. அப்பாஸ் (வழுத்தூர்)

படப்பிடிப்பின் போதே பாட்டுகளும் வசனங்களும் பதிவாக்கப்பட்டு விடுமா?

பாட்டுகள் மட்டும் தனியாக முதலிலேயே பதிவு செய்யப்பட்டுவிடும். வசனப் பதிவும் படப்பிடிப்பும் சேர்ந்தாற் போல் நடைபெறும்.

கே. கே. ராம் (ஸ்ரீரங்கம்)

எந்த ஸ்டுடியோக்காரர்கள் புது முகங்களை அதிகமாகச் சேர்க்கிறார்கள்?

அதிகமாவது, மண்ணாவது! நம் பட முதலாளிகளுக்கு புது முகங்களைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும்போது அவர்கள் ஆந்திர தேசத்தை நோக்குவார்கள். தெலுங்குப் படங்களில் கொஞ்சம் பழக்கப்பட்ட பழைய முகங்களை தமிழ் நாட்டிற்குப் புது முகங்களாய் அளிப்பார்கள், அவ்வளவுதான்.

எஸ். ராமநாதன் (இலங்கை)

நான் நடனம் பயில விரும்புகிறேன். சென்னையில் நடனப் பயிற்சி சாலைகள் இருக்கின்றனவா? எனின் தெரிவிக்கவும்.

சென்னையில் பல நடன ஆசிரியர்கள் நடன வகுப்புகளை நடத்தி வருகின்றனர். அடையாறு கலாக்ஷேத்திரத்தில் நீங்கள் சேரலாம். விலாஸம்: "கலாக்ஷேத்திரம், அடையாறு சென்னை."

டி. ஸ்ரீனிவாஸலு (பங்களூர்)

எம். ஜி. ராமச்சந்திரன் தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

அவர் நடித்த "மலைக் கள்ளன்" சில தினங்களுக்கு முன் வெளிவந்திருக்கிறது. இப்பொழுது ஆர். ஆர். பிக்சர்ஸின் "கூண்டுக் கிளி" யிலும், திருவனந்தபுரத்தில தயாராகும் ஒரு படத்திலும் நடித்து வருகிறார்.

கே. ஆர். ரகுபதி (புகளூர்)

பழைய நடிகை டி. பி. ராஜலக்ஷ்மி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்.

முன்பு 'சினிமா உலக ராணி'யாக விளங்கிய அவர், முன்பு "சென்னை ஹாலிவுட்டாக" விளங்கிய கீழ்ப்பாக்கத்தில் தமது சொந்த இல்லத்தில் சுகமாக வாழ்ந்து வருகிறார்.

[தொடர்ச்சி 19-ம் பக்கம் பார்க்கவும்]

நரசு ஸ்டூடியோஸ்
துளி விஷம்
Parthan

சுவாரஸ்யமான கதையமைப்பு உடைய "துளி
விஷ"த்தில் மயிர்க்கூச்செரியும் கத்திச் சண்டை
களும், பிரம்மாண்டமான காட்சியமைப்புகளும்,
நேர்த்தியான நடனங்களும் நிறைந்துள்ளன.
தந்தைக்கும் மகனுக்கும் வாள் போர்! தாயை
விபசாரி என்கிறான் தனயன்! விரோதியின் மக
ளையே காதலிக்கிறான் தளபதி! படத்தின் வச
னங்களை எழுதி, டைரெக்ஷனையும் கவனித்திருக்
கிறார் ஏ. எஸ். ஏ. சாமி. இப்படம் ஜூலை 30-ந்
தேதி தமிழ் நாட்டில் வெளியாகியுள்ளது.

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏ. எம். தாமோதரன் (புதுடில்லி)

"பாதாள பைரவி" படத்தில் நடித்த மாலதி தற்போது எந்தப் படத்தில் நடிக்கிருர்?

என்ன காரணத்தாலோ அவர் எந்தப் படத்திலுமே நடிக்கவில்லை.

கே. ரகுபதி (கும்பகோணம்)

ஜெமினி "ஒளவையார்" படப் பாட்டுகள் ஏன் இசைத் தட்டுகளில் வெளியிடப்படவில்லை?

அநேக படங்கள் திரையில் ஓடுவது நின்றுவிடும்; ஆனல் அதன் பாட்டுகள் மட்டும் கிராமபோனில் ஓடிக்கொண்டிருக்கும்! "ஒளவையார்" திரையில் ஓடுகிறது கிராமபோனில் ஓடவில்லையே என்கிறீர். "ஒளவையாரி"ன் முக்கிய அம்சமான பாட்டுகளை ஆரம்பத்திலேயே வெளியிடுவது படத்தின் வசூலைப் பாதிக்கக்கூடும். எல்லோரும் போய்க்கொண்டிருக்கும் பாதைக்குப் பதில் புதிய பாதையில் திடீரென்று திரும்புவதுதான் வாஸனின் வழக்கமாயிற்றே!

எம். முகம்மது காசிம் (பூசலாவை)

பத்மினிக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

அவர் 'மருமகளாக' நடித்திருக்கிருரே தவிர நிஜ மருமகள் ஆகவில்லை இன்னும். இவர்கள் வீட்டில் கல்யாணம் நடந்தால் அது த்ரீ (மூன்று) மணமாக இருக்கக்கூடும்.

எஸ். குருமூர்த்தி (பங்களூர்)

டி. கே. எஸ். சகோதரர்களின் விலாசத்தைத் தெரிவிக்கவும்.

C/o ஒளவை புரடக்ஷன்ஸ், லாயிட்ஸ் ரோடு, கோபாலபுரம், சென்னை.

கே. ரகுபதி (கும்பகோணம்)

முருஸ் வெளியிட்ட "உலகம்" படம் சம்பந்தமான பரிசுத் திட்டம் என்னவாயிற்று?

இப் போட்டியின் முடிவு தேதியை இவ்வருஷம் டிஸம்பர் மாதம் 31ம் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிருர்கள்.

சி. கே. டேவிட் (மதுரை)

"மனோகரா"வில் மூலக் கதையில் இல்லாததை திரைக்கதையில் புகுத்தியிருக்கும் கருணாநிதி ஏன் மாயம், மந்திரம், அருபம் இவைகளையும் நீக்கியிருக்கக் கூடாது?

"மனோகரா"வின் மூலக்கதை ஒரேயடியாய் நிர்மூலம் ஆகிவிடக் கூடாதே என்ற நியதியால்தான்!

பெரிய
G.E.C.
ரேடியோ

ஆச்சரியமான குறைந்த விலையில்!



B. C. 6342 எஸியில்
5 "வால்வ்—3" பாண்ட்

ரூ. 275
(NETT)

12–மாத உத்தரவாதத்துடன் மற்றும், பல மாடல்கள் மிக குறைந்த விலையில் கிடைக்கும்

உடனே வரவும் :

வயர்லஸ் ஸேல்ஸ் & சர்விஸ் கம்பெனி

1/11A, மவுண்ட் ரோட்
சென்னை—2

போன் : 86506 தந்தி : **RADSALES**

கிளை :—சேரி ரோடு, சேலம்.
Govt. ஆஸ்பத்திரி ரோடு, வேலூர்.

எமது மாத தவணை விவரங்களுக்கு எழுதவும்.

எஸ். குருந்தாபலம்
(உருமாண்டன் பாளையம்)

வைஜயந்திமாலா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவரது கணவரின் பெயரைத் தெரிவிக்கவும்.

வைஜயந்தி தற்போது ஜம்பு புரடக்ஷன்ஸின் "மனைவியின் மகள்" படத்திலும், பம்பாயில் தயாராகும் சில ஹிந்திப் படங்களிலும் நடித்து வருகிறார். அவருக்கு விவாஹம் ஆனதும் கட்டாயம் கணவன் பெயரைத் தெரிவிக்கிறேன்.

ஏ. சுப்பராயலு (ஒரத்தூர்)

சிவாஜி கணேசன் இதுவரை எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்? இப்பொழுது எப்படங்களில் நடிக்கிறார்.

"பராசக்தி", "பணம்", "பூங்கோதை", "அன்பு", "மனிதனும் மிருகமும்", "கண்கள்", "திரும்பிப்பார்", "மனோகரா", "துளிவிஷம்" ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். "பெற்ற மனம்," "கூண்டுக்கிளி", "காவேரி", "கள்வனின் காதலி", "சேற்றில் செந்தாமரை", "அம்பிகாபதி", "முதல் தேதி" ஆகிய படங்களில் இனி அவரைச் சந்திக்கலாம்.

கே. எம். பரமசிவம் (தாதம்பட்டி)

சினிமா நடிகைகள் ஏன் பெரும்பாலும் மணமாகாதவர்களாகவே இருக்கிறார்கள்?

தம்முடன் நடிக்கும் கதாநாயகர்களின் நடிப்பில் இயற்கை அம்சம் கெட்டுவிடாமலிருக்க வேண்டும் என்பதற்காக இருக்கலாம்!

ரா. சுவாமிநாதன் (திருச்செங்கோடு)

சினிமா என்றாலே சீறி விழுந்துவந்த என் நண்பர் ஒருவர் "ஜாதகம்" படத்தை முதன் முதலாகப் பார்த்தார். பிறகு அவர் அபிப்பிராயம் மாறிவிட்டது. சூர்யகலா நடிக்கும் படம் எப்பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார். இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன?

நண்பர் ஜாதகம் பார்த்தது இருக்கட்டும். நீர் அவருடைய ஜாதகத்தைப் பாரும். அவருக்கு ஏதோ நல்ல காலம் ஆரம்பமாகியிருப்பதை உணர்வீர்.

வெ. பா. சீனிவாசன்
(திருவல்லிக்கேணி)

ஜெயா புரடக்ஷன்ஸின் "பேப்பர் பாய்" என்ன ஆனான்?

காகிதப் பையன் அல்லவா? காற்றில் பறந்துபோய் விட்டான்!

வி. ஏ. முருகேசன் (போத்தனூர்)

வஸுந்தரா தேவி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார்?

தாய் எட்டடி என்றால் (அவரது) குட்டி (வைஜயந்தி) பதினாறடியாகத் தாண்டி வருகிறாரல்லவா. அதுவே போதும் என்று நினைத்து சும்மா இருக்கிறார் போலிருக்கிறது.

பி. வி. வெங்கடேசன் (எறையூர்)

பிரபல பின்னணி பாடகி "ஜிக்கி"யின் சொந்தப் பெயர் கிருஷ்ணவேணி என்பதை அறிவேன். ஆனால், அவர் எதற்காக "ஜிக்கி" என்ற பெயரை வைத்துக்கொண்டார்.

அவரது பெற்றோர்கள் அழைக்கும் செல்லப் பெயரான "ஜிக்கி"யை அவர் படங்களுக்கும் பயன்படுத்தினர். பிறகு இப்பெயர் மிகப் பிரபலமடைந்து சொந்தப் பெயரையும் வெளிப்படுத்திவிட்டது.

வெ. ரங்கநாதன் (மீனம்பாக்கம்)

சென்னையில் பெண்கள் நடத்தை மோசமாகி வருகிறது. இதற்குக் காரணம், ஆந்திர நடிகைகள்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இது சரியா?

சென்னைப் பெண்களின் நடத்தையைக் கூர்ந்து கவனிக்க எனக்கு அவகாசமில்லை. ஆனால், தமிழ்ப் படங்களில் காமவிகாரக் காட்சிகள் அதிகரித்துப் போனதற்கு முக்கியமாக நம் ஆந்திர சகோதரிகள்தான் காரணம் என்று நான் கூறமுடியும். சினிமா நக்ஷத்திரங்கள் ஜ்வலிப்பதற்கு மா(வா)னம் அவசியமில்லை என்பது அவர்கள் கருத்துப் போலும்!

ஆர். சஞ்சீவிராவ் (கிரிகி)

சங்கீத வித்வான்—நாடக—சினிமா நடிகர் எஸ். வி. சுப்பய்யா பாகவதர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

இந்த பாகவதர் சில நாட்களுக்கு முன்பு காலமாகிவிட்ட விஷயம் தெரியாதா?

கே. நடராஜன் (சிதம்பரம்)

சிவாஜி கணேசனின் சொந்த ஊர் எது?

சொந்த ஊர் விழுப்புரம்; ஆனால் வளர்ந்ததெல்லாம் திருச்சியில்.

பக்ஷிராஜாவின் "மலைக் கள்ளன்"
தமிழ்ப் படத்தில் பி. பானுமதி
பிரமாதமாய் நடித்திருக்கிருர்.



"போன மச்சான் திரும்பி வந்தான்"
தமிழ்ப் படத்தில்
குசலகுமாரி, ஸ்ரீராம்



நீங்கள்

இன்று



உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?

ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவருமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இரு வேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும், நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

"... இவ்வாச்
சரிய காரமான
பற்பசையை
எமக்களித்த
தற்கு எனது
நன்றியைத்
தெரிவித்தே
யாகவேண்டும்."



க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-37-TAM.

துணிப்புல்

வெட்டுக்கிளி

"பெண்கள் ஆண் வேஷத்தில் நடிக்கலாமா?" — இப்படி ஒரு பிரச்னை பட உலகில் நடந்தது பல வருஷங்களுக்கு முன்பு. இந்தப் பிரச்னையை ஆதரித்தும், எதிர்த்தும் விவாதம் நடைபெற்றது பத்திரிகைகள் மூலம். முடிவு இல்லாமலே தீர்ந்துபோன விவகாரம் இது. இந்தப் பிரச்னை கிளம்பக் காரணமாக இருந்தவர் கே. பி. சுந்தராம்பாள்—இல்லை, அவர் நடித்து வெளிவந்த அஸந்தாஸின் "நந்தனார்" ஆகும். படத்தில் அவரைப் பார்த்தவர்கள் "சேச்சே கூடவே கூடாது" என்றுதான் முடிவுக்கு வந்திருப்பார்கள்.

* * *

ஆனால், பெண்கள் ஆண் வேடத்தில் தோன்றி வெற்றியும் பெறக்கூடும் என்று காட்டினர் எஸ். டி. சுப்புலக்ஷ்மி. மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட் கார்ப்பரேஷன் தயாரித்து வெளியிட்ட "பக்த குசேலா" படத்தில் அவர் கிருஷ்ணனாகை நடித்து, ரஸிகர்களின் உள்ளத்தில் இடம் பெற்றூர். அந்தக் காலத்தில் அவரது கிருஷ்ணன் வேஷப் படத்தை பிரேம் பண்ணி மாட்டாத வீடே கிடையாது என்று சொல்லலாம்.

* * *

இது இப்படி யிருக்க, அந்தக் காலத்தில் நாம் எப்படிப்பட்ட காட்சிகளை யெல்லாம் கண்டு களித்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது. பெண்கள் ஆண் வேடம் போடுவது ஒரு பக்கம் இருக்க, ஆண்கள் பெண் வேடத்தில் தோன்றியதை நாம் ரஸித்தோமே, அதை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். நவாப் ராஜமாணிக்கம் நவாபாக நடித்து வெளிவந்த "பக்த ராம்தாஸ்" படம் பலருக்கு ஞாபகம் கூட இருக்காது. அந்தப் படத்தில் நாம் பொடிப் பயல்களை பெண்களாகப் பார்த்து ரஸிக்கத்தானே செய்தோம். ஆனால், அது ரஸிகர்கள் 'க்ரிடிக்'குகளாக இல்லாத சமயம்.

* * *

"அல்லி-அர்ஜுனா" என்று ஒரு படம் வெளிவந்தது. அந்தக் காலத்தில் நாடகங்களில் அயன் ஸ்திரீ பார்ட்டாக நடித்து வந்த அனந்தநாராயண அய்யர் அப்படத்தில் அல்லியாக வந்தார். அதையும் தான் ரஸித்தோம். ஏன், "மேனகா"வில் டி. கே. முத்துசாமி விதவை பெருந்தேவியாக வந்து ரஸிகர்களிடம் 'சபாஷ்' பெறவில்லையா?

* * *

எஸ். டி. சுப்புலக்ஷ்மி கிருஷ்ணனாக வந்தாலும் வந்தார், நம் பட முதலாளிகளுக்கு நக்ஷத்திர நடிகைகளை கிருஷ்ணனாக்கிப் பார்க்கும் ஆபூர்வ யோசனை ஓடி விட்டது. எம். ஆர். சந்தானலக்ஷ்மிக்கு "சதி முரளி" படத்தில் அந்த சான்ஸ் விழுந்தது. டி. ஆர். ராஜகுமாரிக்கு, சில நிமிஷங்களேயானாலும், மாடர்ன் தியேட்டர்ஸின் "சதி சுகன்யா" படத்தில் அந்த பாக்கியம் கிட்டிற்று. பத்மினி "கோகுல தாஸி"யிலும் வேறு பல படங்களிலும் கிருஷ்ணனாக ஆடியிருக்கிறார். மற்றும் பல நடிகைகளுக்கும் இந்த சந்தர்ப்பம் கிட்டி யிருக்கிறது.

* * *

இதே மாதிரித்தான் பெண்களை நாரதர் வேஷத்தில் நடிக்கவைக்கும் மோகமும் ஒரு சமயம் இருந்தது. முதன் முதலாக "சாவித்திரி"யில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி நாரதராக வந்து சங்கீத மழை பொழிந்தார். என். ஸி. வஸந்த கோகிலம் ஜுபிடரின் "வால்மீகி" யிலும், யு. ஆர். ஜீவரத்னம் ஜுபிடரின் "ஸ்ரீமுருகனி"லும் நாரதராக வந்தார்கள். ஸ்ரீராமுலு நாயுடு அடுத்தபடி தயாரிக்கப் போகும் "சாவித்திரி"

தெலுங்குப் படத்தில்கூட ஒரு நடிகை தான் நாரதராக நடிக்கப் போவதாக செய்தி ஒன்று உலாவுகிறது.

* * *

சமீபத்தில் ஒரு ரஸமான செய்தி கேட்டேன். இப்பொழுது பல படங்களில் நடித்து வருகிற நக்ஷத்திரம் செய்யும் தர்பாரைத்தான் குறிப்பிடுகிறேன். ஒரு படத்தில் நடிக்க அவரை அழைத்துப் பேசினார் பட முதலாளி. அந்தப் படத்திற்கு வசனம் எழுத ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நபரின் பெயரைக் கேட்டதும் நக்ஷத்திரம் துள்ளிக் குதித்தாராம். "அவர் வசனம் எழுதினால் நான் நடிக்க மாட்டேன்" என்று கண்டிஷன் போட்டாராம். இதற்குக் காரணம், ஏற்கெனவே வெளியாகியுள்ள ஒரு படத்தில் நடிகரை கேலி செய்வது போல ஒரு இடத்தில் வசனம் எழுதியிருந்தாராம் அந்த வசனகர்த்தா.

* * *

இதோடு நின்றுவிடவில்லை அந்த நக்ஷத்திரம். அந்த வசனங்களைப் பேசிய, இப்பொழுது ரஸிகர்களின் ஆதரவைப் பெற்று வரும், ஹாஸ்ய நடிகர் மீதும் அவர் கோபம் திரும்பி விடடது. ஒரு பட முதலாளியிடம் சொன்னாராம், "அந்த ஹாஸ்ய நடிகர் உங்கள் படத்தில் நடிப்பதானால் நான் நடிக்க மாட்டேன்" என்று. எப்படி இருக்கிறது இந்த நியாயம். தமக்கு இருக்கும் கிராக்கியில் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடும் அவரது இந்தச் செய்கை சிறு பிள்ளைத்தனமாக இருக்கிறது என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்வது?

* * *

மற்றொரு தமாஷான விஷயம். பிரபல நடன சகோதரிகளை ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய வந்தார் ஒரு ஆந்திரக்காரர். நடன சகோதரிகளின் தாயார் தொகையைச் சொன்னதும் மலைத்து விட்டார் வந்த ஆசாமி. "அவ்வளவு தொகையா?" என்று கேட்டுப் பெருமூச்சு விட்டார் அவர். அதற்கு அந்தத் தாயார் "ஏன், ஆயிரம் ரூபாய் கொடுங்கள் போதும்; நான் வந்து ஆடிவிடுகிறேன்" என்று பதிலளித்ததும் கச்சேரி பேச வந்த ஆசாமி அசந்துபோனாராம்.



சென்ற மாத இறுதியில் பக்ஷிராஜா பிலிம்ஸார் வெளியிட்டிருக்கும் "மலைக் கள்ளனி"ல் பி. பானுமதிதான் பிரதம நடிகை.

'நடனம்' என்றதும் ஒரு சமாசாரம் நினைவுக்கு வருகிறது. நக்ஷத்திரங்களில் சிலர் ஒருவர் பின் ஒருவராக, நடனக் கச்சேரியில் பதம் பாடக் கிளம்பியிருக்கிறார்கள். இந்த வழக்கத்தை எம். எஸ். சுப்புலக்ஷ்மி அங்குரார்ப்பணம் செய்தார். குமாரி ராதாவின் நடனக் கச்சேரிகளில் இன்றும் அவருக்குப் பதம் பாடி வருகிறார். அவரைத் தொடர்ந்து இசைக் குயில் பி. ஏ. பெரியநாயகி ஸாயி – சுப்புலக்ஷ்மிக்குப் பதம் பாடி வருகிறார். குமாரி ராஜம் தனது சகோதரிகளான விசா—பிரகதாவுக்குப் பதம் பாடுவதில் முனைந்திருக்கிறார்.

*　　　*　　　*

சென்ற மாதம் குமாரி கமலாவுக்குத் திருமணம் நடந்துவிட்டது பல ரஸிகர்களை—ஏன், சினிமாத் துறையிலேயே கூட பலரை திகைக்க வைத்து விட்டது. ரஸிகர்களின் கவலையெல்லாம், 'அவர் இனி நடனக் கச்சேரிகளுக்குப் போவாரா? படங்களில் நடிப்பாரா?' என்பது தான். இதை விளக்கி கமலா லக்ஷ்மணன் ஒரு அறிக்கை வெளியிட்டால் கூட நன்றாயிருக்கும்.

பத்திரிகைக் காட்சி

சென்ற மாதம் 22ம் தேதி, சென்னை காஸினோ தியேட்டரில் பக்ஷிராஜாவின் "மலைக் கள்ளன்" தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது. பானுமதி, எம். ஜி. ராமச்சந்திரன், ஸ்ரீராம், பாலசரஸ்வதி, பாலசுப்ரமண்யம், டி. எஸ். துரைராஜ் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்துள்ள இப்படம் அன்று முதல் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ளது.

தெய்வ சித்தம்

'ராசு'

"ஏதோ நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இருக்கிற நிலைமையையும் பார்த்துக் கொள்ளுங்கள். ஊருக்குப் போய் எல்லோரையும் கலந்து கொண்டு எழுதுங்கள்" என்ருர் அவர்.

நான் திரும்பி என் தாயாரைப் பார்த்தேன். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

"இதில் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது? அம்பி தான் இரண்டு வருஷங்களுக்கு முன்பே சொல்லி விட்டானே!" என்றேன்.

அதைக் கேட்ட அவர் சிரித்து விட்டார். கதவு மறைவில் நின்று கொண்டிருந்த கல்யாணியும் 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

நான் சொன்ன வார்த்தைகள் என் தாயாருக்கு விளங்கவில்லை. திரும்பி வரும்போது பஸ்ஸிலே கேட்டாள்.

"என்னடா ராமு. நீ என்னமோ சொன்னுய், அவர்கள் சிரித்தார்களே?"

"அது இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம்" என்று சொல்லிவிட்டு ஆரம்பித்தேன்.

அப்போது தஞ்சை ஜில்லாவில் கம்பெனியின் வியாபார விஷயமாக சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன் நான். ஒவ்வொரு நகரத்திலும் ஏஜெண்டுகளைப் பிடித்து சரக்குகளைப் போட ஏற்பாடுகள் செய்தேன்.

திருவாரூர் தான் 'காம்ப்'. அங்கிருந்து காரில் கிளம்பிச் சென்றேன். அன்றைக்கு ஏதோ காரியமாக கும்பகோணம் போகவேண்டியிருந்தது. புறப்படும்போதே மணி நான்காகி விட்டது. கும்பகோணத்தை அடைந்து காரியத்தைக் கவனித்து விட்டுத் திரும்பும்போது மணி பத்தாகி விட்டது. எனது நண்பர்கள் இரவு தங்கிவிட்டுக் காலையில் புறப்பட்டுச் செல்லுமாறு வேண்டினர். இரவு எப்படியும் திருவாரூர் வந்து விட வேண்டும். அப்போது தான் மறுநாள் ஆகவேண்டிய காரியங்களுக்குத் தக்க ஏற்பாடு செய்யமுடியும். ஆகவே, அவர்கள் கோரிக்கைக்கு இணங்காமல் புறப்பட்டு விட்டேன்.

சுமார் பத்து மைல்கள் வந்து விட்டோம். திடீரென்று எதிர்பாராத வகையில் காரின் பின் சக்கரம் 'பஞ்சர்' ஆகி விட்டது. டயரைப் பழுது பார்க்கும் கருவிகள் கைவசம் கொண்டுவரவில்லை. வானம் வேறு கறுத்து மழை பெய்யட்டுமா வென்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. அந்த நடுநிசி வேளையில் எவ்விதம் மேலே செல்வது? இருபுறமும் மூன்று மைல் தூரம் சென்ருல் தான் ஊர்கள். அங்கும் அந்த அத்துவான சமயத்தில் யார் கடையைத் திறந்து வைத்திருப்பார்கள்?

அந்த வழியே வந்த கிராம வாசி ஒருவன் எங்கள் நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்டு உதவிக்கு வந்தான்.

"ஐயா! இப்படியே வயலில் இறங்கி குறுக்கே ஒரு மைல் போனுல் கிராமம் ஒன்று இருக்கு. அங்கே அக்கிரகாரம் இருக்கு. என்னோடே வாங்க. இப்படி இரவு நேரத்திலே எப்படிப்பொழுதைக் கழிப்பீங்க?" என்ருன்.

"வண்டியிலேயே படுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். காலையிலே பக்கத்து ஊருக்குத் தள்ளிக் கொண்டு போகவேண்டியது" என்றேன் நான்.

"நன்ரு இருக்குங்க, நீங்க பேசறது? மழை வேறே பயமுறுத்துது. அந்த ஆளை காவலுக்கு வைச்சுட்டு நீங்க வாங்க, நான் அழைச்சுண்டுபோறேன்" என்று வற்புறுத்தினன்.

அவன் சொன்னதும் நியாயம் தான். ஆகவே, அவனைப்பின்தொடர்ந்து சென்றேன். டிரைவர் வண்டிக்குக் காவலாக, வண்டியிலேயே படுத்துக் கொண்டான்.

அது சிறிய கிராமம் தான். ஏழெட்டு வீடுகள் கொண்ட அக்கிரகாரம். என்னுடன் வந்தவன் ஒரு வீட்டில் போய் கதவைத் தட்டினான். கதவைத் திறந்து கொண்டு ஒருவர் வெளியே வந்தார். அவரிடம் நடந்ததைத் தெரிவித்து, "இரவு இவர் தங்கிப்போக உங்கள் வீட்டில் இடம் கொடுங்கள்" என்றான்.

"வாருங்கோ, ஸார்! தாராளமாய் வாருங்கள். ஆபத்தொன்றும் எதுவும் பார்க்கக் கூடாது. இந்த வீட்டை உங்கள் வீடு போல் நினைத்துக் கொண்டு சௌகரியமாய்த் தங்குங்கள்" என்று என்னை வரவேற்று அழைத்துக்கொண்டு போனார். தூங்கிக் கொண்டிருந்த தன் மனைவியை எழுப்பி என்னை அறிமுகப் படுத்தினார். இரவு முழுவதும் அவர் என்னைத் தூங்க விடவில்லை. நாங்கள் இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். விடியற்காலையில் சிறிது நேரம் தூங்கினேன்.

காலையில் புறப்பட அவர் என்னை அனுமதிக்கவில்லை. ஒரு வேளையாவது சாப்பிட்டு விட்டுப் போகும்படி வற்புறுத்தி என்னை நிறுத்தி விட்டார். வீட்டு வேலைக்காரனை அனுப்பி வண்டிக்குக் காவல் இருக்கச் செய்துவிட்டு, டிரைவரையும் அழைத்துவரச் செய்தார்.

அவருக்கு ஒரு பெண்ணும் பிள்ளையும்தான். கல்யாணிக்கு பதினாறு வயதிருக்கும்; அம்பிப் பயலுக்கு ஆறு வயது. அவன் ரொம்பவும் விஷமக்காரப் பயல். இரவு தூங்கி விட்டதால் அவன் என்னைக் கவனிக்கவில்லை. காலையில் என்னைப் பார்த்ததும், தன் தாயாரிடம், "அம்மா, அக்காவைப் பெண் பார்க்க அத்திம்பேர் வரப் போறான்னு சொன்னாயே, அந்த அத்திம்பேர் தானே இவர்" என்று கேட்டான்.

கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த எங்கள் காதில் விழுந்தன அந்த வார்த்தைகள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. ஆனால் அவர் சமாதானம் செய்தார். முதல் நாள் பெண் பார்க்க வருவதாக இருந்ததாம். மாலை வரையில் எல்லா ஏற்பாடுகளுடனும் காத்துக்கொண்டிருந்தனர். யாரும் வரவில்லை. ஆகவே, அம்பி என்னைக் கண்டதும் அவர்கள்தானோ என்று நினைத்து விட்டான்.

அவன் தாயார் விளையாட்டுக்குத்தான் சொன்னாளோ, நிஜமாத்தான் சொன்னாளோ தெரியாது. "போய் உன் அப்பாவையே கேள்" என்றாள். அவனும் ஓடிவந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டான். "அம்மாவைக் கேட்டால் உன்னைக் கேட்கச் சொல்கிறா, அப்பா. இவர் தான் அத்திம்பேரா அப்பா?" என்றான்.

அவர் சிரித்துக் கொண்டே "ஆமாண்டா ராஜு!" என்றார். அவ்வளவுதான். என்னைப் பிடித்துக் கொண்டு விட்டான். "அத்திம் பேரே, அத்திம் பேரே" என்று அரை நிமிஷம் கூட என்னை விடவில்லை. அம்பி என்னை 'அத்திம் பேரே!' என்று கூப்பிடும் போதெல்லாம் கல்யாணி அவனைக் கூப்பிட்டுக் கடிந்து கொள்வாள். அவள் முகத்தில் கடுமைக்குப் பதிலாக மகிழ்ச்சியே நிறைந்திருக்கும்.

சாப்பிட்டு விட்டு விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். வண்டிப் பாதை வளைந்து

(தொடர்ச்சி 62-ம் பக்கத்தில்)

வாஹினியில் ஜனதா பிக்சர்ஸார் தயாரித்து வரும் "பரிவர்த்தனே" தெலுங்குப் படத்தில் சாவித்திரியும், ஸ்ரீராமும் நடித்து வருகின்றனர்.

முன் கதைச் சுருக்கம்

நம் கதாநாயகி நர்மதாவே தன் சோகக் கதையைக் கூறுகிறாள். கொங்கணத்து கடற்கரை கிராமம் ஒன்றில், மீன் வியாபாரம் செய்து வந்த ஒருவரின் மகள் அவள். அவளுக்குப் பதினாறு வயது பெரியவனான தமையன் காசிநாத்தும், அத்தை மகன் ரங்காராமும், தாயாரும் ஒன்றாக வசித்து வருகின்றனர்.

சிறு பெண்ணாக இருந்தபோது ஒரு நாள் நர்மதா மின்னல் தாக்குதலால் இருகண்களையும் இழக்கிறாள். இதைத் தொடர்ந்து அவள் தகப்பனார் படகு மூழ்கி சமுத்திரத்திற்கு இறையாகிறார். அப்பா இறந்ததும் காசிநாத், தாம்லே என்ற பணக்காரரின் புத்திரி சரயூவை மணந்து கொண்டு வேட்டகத்தோடு ரத்னகிரியில் தங்கிவிடுகிறான். நாளாவட்டத்தில் அவனுக்கும், தாயார், தங்கை, அத்தான் இவர்களுக்கும் உறவு அறவே ஒழிந்து விடுகிறது. கடிதப் போக்குவரத்து கூட நின்று விடுகிறது.

தாயார் கங்காமாயி குடும்பத்தை மிக கஷ்டத்தோடு நிர்வகிக்கிறாள். வளர்ப்புப் பிள்ளையான ரங்காராம் நன்றியறிதலுடன் நடந்து கொள்ளுகிறான். அவன் சம்பாத்தியத்திலேயே குடும்பம் நடக்கிறது.

நர்மதா கல்யாண வயதை அடைகிறாள். ரங்காராம் வரன் வேட்டையில் ஈடுபடுகிறான். ஆனால்,

அந்தக் குருடியை மணந்து கொள்ள யாரும் முன்வரவில்லை. ஆதலால், ரங்காராமே மனமுவந்து அவளை மணந்து கொள்கிறான்.

கல்யாணத்தைத் தொடர்ந்து நர்மதா கர்ப்பிணியாகிறாள். பிறகு, ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகிறாள். ரங்காராமின் உள்ளூர் வியாபார வருமானம் குடும்பச் செலவுக்கே போதவில்லை. குழந்தை வேறு பிறந்து விட்டது. ஆதலால், அவன் பம்பாய்க்குச் சென்று ஒரு வேலையில் அமருகிறான்.

அவன்பம்பாய் சென்றதும் கங்காமாயிக்கு கடும் ஜுரம் ஏற்படுகிறது. அக்கம் பக்கத்தினரின் உதவியுடன் நர்மதா அம்மாவுக்கு சிசுருஷை செய்து வருகிறாள். நாள் மூன்றாகியும் ஜுரம் தணியவில்லை. நர்மதா கவலை கொள்ளுகிறாள்.

அம்மா ஜுரம் அதிகரிக்கிறது. சில தினங்களில் ரங்காராம் பம்பாயிலிருந்து வந்து விடுகிறார். ஆனால், அவன் உள் நுழைந்ததும் நுழையாததுமாய் கங்காமாயி உயிர் துறக்கிறாள்.

அண்ணன் காசிநாத் ஈமக்கிரியைகளுக்குக்கூட வரவில்லை. ரங்காராமே கிரியைகளைச் செய்துவிட்டு நர்மதா, குழந்தை திவாகரன் இவர்களுடன் கப்பலில் பம்பாய்க்குப் புறப்படுகிறான்.

பம்பாயில் ரங்காராம் தங்கி யிருந்த வீட்டுக்காரக் கிழவி அவன்மீது பிள்ளைப் பாசம் கொள்ளுகிறாள். அவள் நர்மதாவின் வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறாள்.

புதுத் தம்பதி உல்லாசமாக கப்பல் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், திடீரெனப் புயல் அடிக்கிறது. நர்மதா, திவாகரன், ரங்காராம், எல்லோரும் நீரில் மூழ்குகின்றனர். **இனி, மேலே படியுங்கள்**

நர்மதா கூறுகிறாள் :

நான்தான் நர்மதா தொடர்ந்து பேசுகிறேன். ‘செத்துப் போனவள் பேசுவதாவது!’ என்று திகைக்காதீர்கள். நான் இறந்துவிடவில்லை. சாவு இந்தப் பாவியை உதறிவிட்டது! ‘அப்படியானால், நான் சந்தோஷமடைவதற்குப் பதிலாக இப்படி அலுத்துக் கொள்ளுவானேன்?’ என்று கேட்பீர்கள். அலுத்துக் கொள்ளாமல் என்ன செய்வது? படகு கவிழ்ந்து கடலில் மூழ்கியபோது, “ஐயோ! இந்த உலகில் அநுபவிக்க வேண்டியவற்றை அநுபவிக்காது இறந்து போகிறோமே!’ என்று எதற்காகத் தவித்தேனோ, அவைகளை அனுபவிக்க வழியில்லாது பிழைத்து விட்டேன் என்றால், நீங்களே சொல்லுங்கள், நான் வாழ்வைச் சபிப்பதா, சாவைச் சபிப்பதா என்பதை!

இதில் இன்னொரு விசித்திரம் என்னவென்றால், முன்பு நான் எது இல்லையென்று குறைப்பட்டுக் கொண்டிருந்தேனோ, அது எதிர்பாராதவாறு எனக்குக் கிட்டிற்று; ஆனால் எவை எனக்குக் கிட்டி யிருக்கின்றன என்று எக்களித்திருந்தேனோ, அவை பறிபோய் விட்டன!

கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகக் கருதி நினைவிழந்த நான், மறுபடி நினைவு பெற்றபோது முதல் முதலாக உணர்ந்தது என் கண்கள் கட்டப்பட்டிருப்பதைத் தான். ‘எதற்காக இந்தக் குருட்டுக் கண்களுக்குக் கட்டு? நான் எங்கே இருக்கிறேன்? கடலில் மூழ்கிய என்னை, யார், எப்படிக் காப்பாற்றினார்கள்? என்னுடன் மூழ்கிய கணவரும் திவாகரனும் என்ன ஆனார்கள்? என்பன போன்ற கேள்விகளுக்குச் சிறிது நேரத்திற்குப் பிறகு என்னிடம் வந்து, “விழித்துக் கொண்டு விட்டீர்களா? உடம்பு எப்படி யிருக்கிறது?” என்று அன்புடன் விசாரித்த பெண் விடை தந்தாள். ஆம்; நான் அப்பொழுது ஒரு கண் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அந்தப் பெண் அந்த ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் நர்ஸ்களில் ஒருத்தி; அவள் அறிவித்த செய்தி இதுதான் :

எங்கள் படகு மூழ்கிய இடம் பம்பாய்க்குக் கிட்டத்தட்ட எழுபது மைல்களுக்கு அப்பாலுள்ள செம்படவர்கள் வசிக்கும் ஒரு கிராமத்துக்கு அருகில். அன்றைக்கு வானம் மப்பு மந்தாரமாக இருந்ததால் அந்த ஊர்ச் செம்படவர்கள், கடலில் ஏதேனும் கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என எண்ணி மீன் பிடிக்கப் போகவில்லை. கரையை ஒட்டி இருந்த தங்கள் குடிசைகளின் வாயிலில் அவர்கள் கூட்டமாக உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருந்தபோது, எங்கள் கப்பல் கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்பதையும், அதிலிருந்து படகுகள் கிளம்பிக் கரையை நோக்கி வருவதையும் பார்த்தார்கள். படகுகள் புயலில் தத்தளிக்க ஆரம்பித்த போது, ஜீவகாருண்ய உணர்ச்சியுடன், கூட்டம் கூட்ட

மாகத் தங்கள் கட்டுமரங்களில் ஏறி, உதவி அளிக்க விரைந்து வந்தார்கள். அன்று அவர்களுடைய மகத்தான உதவியால் பல உயிர்கள் மீட்கப்பட்டன. அப்படி மீட்கப்பட்டவர்களுள் இந்தத் துர்ப்பாக்கியவதியும் ஒருத்தி.

என்னைக் கரை சேர்த்ததும் அவர்கள் என் கண்களினின்று உதிரம் வடிவதைக் கண்டார்கள். கடலில் வாழும் மீனோ, அல்லது வேறு ஏதேனும் பிராணிகளோ இமையாத இந்த ஊனக் கண்களை தின்பண்டமென்று சுவைத்து விட்டன போலும்! செம்படவர்கள் அதைக் கண்டார்களா? கவிழ்ந்த படகிலிருந்த மரம்-மட்டை ஏதாவது என் கண்களைக் காயப்படுத்தி விட்டிருக்க வேண்டுமென்று உடனே என்னை பக்கத்திலிருந்த நகரத்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள்.

அது ஒரு சாதாரண ஆஸ்பத்திரி. கண்களுக்குச் சிகிச்சை அளிக்க அங்கே வசதி கிடையாது. ஆகவே, அந்த ஆஸ்பத்திரி டாக்டர், முதற் சிகிச்சையாக ஏதோ மருந்தைப் போட்டு என் கண்களைக் கட்டி, ஆம்புலன்ஸில் ஏற்றி, பம்பாயிலிருந்த இந்தப் பிரசித்தி பெற்ற 'வாடியா கண் ஆஸ்பத்திரி'க்கு அனுப்பி விட்டார். இங்குள்ள டாக்டர் பலத்த அடியினால் என் கண்கள் பாதிக்கப்பட்டு விட்டதாகத் தீர்மானித்து அவற்றை ஆப்பரேஷன் செய்திருந்தார். அதனால்தான் அவை கட்டப்பட்டிருந்தன.

இதைச் சொல்லிவிட்டு அந்த நர்ஸ், "கவலைப்படாதீர்கள், அம்மா ; எங்கள் டாக்டர் மேல் நாடுகளில் படித்துக் கண் வைத்தியத்தில் விசேஷத் தேர்ச்சி பெற்றவர். அவர் கை வைத்த கேஸ் எதுவும் சோடையாகப் போனது கிடையாது. கட்டாயம் உங்களுக்குப் பார்வை கிடைத்துவிடும்'' என்று ஆறுதல் கூறினாள்.

ஆனால நான் அப்பொழுது பார்வை வேண்டும் என்றா பரிதவித்துக் கொண்டிருந்தேன்? நினைவு பெற்ற நிமிஷம் தொட்டு, என் கணவரும் குழந்தையும் என்ன ஆனார்கள் என்பதை அறிய அல்லவா என் மனசு துடித்துக் கொண்டிருந்தது! ஆகவே அவளிடம் சொன்னேன்: "நர்ஸ் அம்மா, நான் கண்களை இழந்தது இந்த விபத்தினால் அல்ல ; குழந்தைப் பருவத்திலே மின் வீச்சினால் என் கண்கள் பழுதாகிவிட்டன. அப்பொழுது என்னைப் பல டாக்டர்கள், பலவிதச் சிகிச்சைக்கு உட்படுத்திப் பார்த்து, பார்வை கிட்டச் செய்ய முடியாது எனக் கைவிட்டு விட்டனர். ஆகையால் உங்கள் டாக்டரின் ஆப்பரேஷன் கண்களைத் தந்துவிடக் கூடும் என்ற நம்பிக்கை எனக்குத் துளிகூட இல்லை. அது போகட்டும். கண்ணில்லாததைப் பற்றி நான் இப்பொழுது கவலைப்படவில்லை. என்னை அரித்து வரும் கவலை வேறு. என்னுடன் என் கணவரும், மூன்று மாதக் குழந்தையான என் மகனும் பிரயாணம் செய்து வந்தனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அறியவே துடித்துக் கொண்டிருக்கிறேன். அம்மா, உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு. என்னை உங்கள் சகோதரியாகப் பாவித்து, தயவு செய்து அவர்களைப் பற்றி உடனே விசாரித்து அறிவிக்க வேண்டும்'' என்று கூறி அழுதேன்.

அந்த நர்ஸ் மிகவும் நல்லவள். என்னுடைய பரிதாப நிலை அவளுடைய மனசை உடனே நெகிழச் செய்துவிட்டது. "அழாதீர்கள் அம்மா ; நீங்கள் பிரயாணம் செய்து வந்த கப்பலின் தலைமைக் காரியாலயம் இந்த பம்பாயிலே இருக்கிறது. அவர்களுக்கு டெலிபோன் செய்து விசாரித்து வருகிறேன்'' என்று கூறி, என் கணவர்—குழந்தையின் பெயர்களைக் கேட்டுக் குறித்துக் கொண்டு சென்றாள்.

அந்த நர்ஸ் எத்தனை நல்ல எண்ணத்துடன் சென்றாளோ, அதுபோலவே அப்பொழுது எனக்கு ஆறுதல் ஊட்டும் ஒரு செய்தியுடன் திரும்பி வந்தாள். ஆம்; அவள் கப்பல் கம்பெனிக்காரர்களை விசாரித்தாளாம். படகில் கரைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிரயாணிகளில் மூழ்கடிக்கப் பட்டவர்கள் எல்லோருமே காப்பாற்றப்பட்டு விட்டனராம். உயிர்ச்சேதமே இல்லை; ஆனால் அவர்களில் அநேகம் பேர், நீர் குடித்து நோய் கொண்டிருப்பதால் அங்கங்கே அருகேயுள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அவற்றுள் என் கணவரும் மகனும் எந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர் என்பதை விசாரித்து, நான் பம்

NMCD
RSTU
V
MSRUE

பாயில் இருக்கும் செய்தியை அறிவிக்கும் பொறுப்பைக் கப்பல் கம்பெனிக்காரர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்று அவள் சொன்னாள்.

இந்தச் செய்தி எனக்கு ஓரளவு ஆறுதலைத் தந்தது என்னவோ உண்மையே; இருந்தாலும் அவர்களைப் பற்றிய கவலை என்னை விட்டு அறவே போய்விடவில்லை. ‘அவர்களின் நோய் எத்தனை கடுமையானதோ? பிழைப்பார்களோ; பிழைக்க மாட்டார்களோ? பிழைப்பவர்களானால் எப்பொழுது உடம்பு குணமாகி, இங்கே வந்து சேருவார்களோ? கணவரின் நிலைமையாவது சற்றுப் பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால், பாலகன் திவாகரன், பாவம், எந்த ஆஸ்பத்திரியில், என்ன நிலையில் ‘கூவா-கூவா’ என்று கதறிக் கொண்டிருக்கிறானோ? ஐயோ! தாய்ப் பால்கூட இன்றி என் மகன் தவித்துப் போவானே! அவனை என்னைப் போல் யார் கருத்துடன் கவனிக்கப் போகிறார்கள்? தாயைப் பிரிந்த அந்தச் சேய், அப்பிரிவின் ஏக்கத்தால் ஏங்கி உருகி விடுமே! ஆண்டவனே, உன்னைத் தான் நம்பியிருக்கிறேன்: என் கணவரும் குழந்தையும் க்ஷேமமாக என்னை வந்தடையும் வரையில் எனது மனம் நிலை கொள்ளாது’ என்று பலவாறு புலம்பிக் கொண்டேயிருந்தேன்.

என்னுடைய இந்த உள்ளத்து அரிப்புக்கு ஆஸ்பத்திரிக்காரர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்துவிட்டார்கள். இனி அவர்கள் கவலை அவர்களுக்கு. ஆகவே, எனக்குக் கண்களை அளிப்பதில்தான் அவர்கள் கவனம் இப்பொழுது திரும்பிற்று. ஆயினும், அந்த நர்ஸ் மாத்திரம் எனக்கு அடிக்கடி தேறுதல் சொல்வாள்: “அழாதீர்கள் அம்மா; ஏற்கெனவே ஆப்பரேஷனால் கண்கள் துர்ப்பலமாயிருக்கின்றன; அதோடு எப்பொழுதும் இப்படிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தீர்களானால், எங்கள் முயற்சி வியர்த்தமாகிவிடுமே! கவலைப்படாதிருங்கள், கடவுள் இரக்கமுள்ளவர். அவர் ஒரு போதும் அநாதைகளைக் கைவிட மாட்டார்.”

ஆனால், பொங்கும் பாலை எப்படி மூடியிட்டுத் தணித்து விட முடியாதோ, அவ்வாறே பொங்கிய என் மனத்துயரை நர்ஸின் ஆறுதல் மொழிகள் சமனம் செய்துவிடவில்லை. கணவர்-குழந்தையைச் சந்திக்கு மட்டும் என் மனம் எப்படி நிம்மதியடையும்? நாட்களோ நகர்ந்து கொண்டிருந்தன. தினந்தோறும், “கப்பல் கம்பெனியிலிருந்து ஏதேனும் தகவல் வந்ததா?” என்று நான் நர்ஸைக் கேட்பதும், அவள், “இல்லையே; வந்துவிடும்; கவலைப்படாதீர்கள்” என்பதும் இப்பொழுது வெறும் நடைமுறைச் சம்பாஷணைகளாகி விட்டன.

இப்படி ஒரு வாரம் போய் விட்டது. அன்று நர்ஸ் மிகவும் களிப்போடு என்னிடம் வந்தாள்; “இன்று உங்களுக்கு

நற்செய்தி கிடைக்கப் போகிறது'' என்றாள்.

"கப்பல் கம்பெனியிலிருந்து தகவல் வந்து விட்டதா? என் கணவரும் மகனும் எப்பொழுது வருகிறார்கள்?'' என்று நான் ஆவலோடு கேட்டேன்.

நர்ஸ் எனக்குப் பதில் சொல்லு முன்பு டாக்டர் வந்து விட்டார். "எல்லாம் ரெடியா?'' என்றார் அவர் வந்த வேகத்தோடு.

"ரெடி டாக்டர்.''

அவ்வளவுதான்; அவர் மளமளவென்று என் கண்களின் கட்டை அவிழ்க்கத் தொடங்கினார். துணியைப் பிரித்து எறிந்ததும் "கண்களை மெதுவாகத் திறவுங்கள், அம்மா'' என்றார். அவருடைய குரலில் வெற்றி மிதப்பும், வேகமும் பிரதிபலித்தன. ஆனால்—

"பாவம்; ஏமாறப் போகிறாரே!'' என்று எண்ணிக் கொண்டே நான் கண்களைத் திறந்தேன்.

ஹா! என்ன ஆச்சரியம்!!

நான் காண்பது கனவா? நினைவா?

என் முன்னே இருப்பவையெல்லாவற்றையும் நான் காண்கிறேனே! இதோ, மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் டாக்டர்! அதோ நர்ஸ்........! இன்னும் தள்ளி வரிசை வரிசையாகக் கட்டில்கள்; அவற்றில் நோயாளிகள்; அவர்களண்டை நர்ஸ்கள்!

நான் கண்களைக் கொட்டிக் கொட்டி விழித்தேன். சந்தேகம் இன்னும் தீரா மல், எங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். கண்களை ஒரு தடவை கசக்கி விட்டுக் கொண்டு நோக்கினேன்.

உண்மைதான்! நான் பார்வை பெற்று விட்டேன்!

கடவுளே உன் கருணை வாழ்க. ஆஹா! இந்த அபாக்கியவதிக்கு எத்தகைய எதிர்பாராத பாக்கியத்தை அளித்துவிட்டாய்!

பாக்கியமா? அபாக்கியமா?

டாக்டர் மறு நிமிஷம் அறிவித்த செய்தி, ஐயோ, அது என்னை எங்கே கொண்டு தள்ளி விட்டது! கசாப்புக் கடையில் ஆட்டுக்கு ஊட்டம் கொடுத்து வளர்த்துக் கடைசியில் அதன் கழுத்தில் கத்தி வைப்பதுபோல, கடவுளே, உன்னை வாழ்த்திய மறுகணமே என்னை இப்படித் தாழ்த்தி விட்டையே!

டாக்டர் சொன்னார்: "எப்பொழுதோ இழந்த கண்களை இப்பொழுது இழந்ததென்று சிகிச்சை செய்த போதிலும், அந்த சிகிச்சை பலன் அளித்துவிட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது அம்மா; எனக்கே இவ்வளவு மகிழ்வு ஏற்பட்டதென்றால் உங்கள் உள்ளம் துள்ளிக் குதிப்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? உங்கள் சிகிச்சை இன்றோடு முடிவு பெற்று விட்டமையால், இன்றே உங்களை நாங்கள் 'டிஸ்சார்ஜ்' செய்தாக வேண்டும். ஆனால், கண்களைப் பெற்ற சந்தோஷத்துடன் போகவிடாமல் உங்களை ஒரு துன்பச் செய்தியைச் சுமந்து செல்லும்படி விட நேர்ந்திருப்பதற்கு விசனிக்கிறேன்.

"அம்மா, விபத்து நிகழ்ந்தபோது உங்களுடன் பிரயாணம் செய்து வந்த கணவர்-குழந்தையைப் பற்றிக் கப்பல் கம்பெனிக்காரர்கள் எவ்வளவு விசாரித்தும், எவ்விதத் தகவலும் சேகரிக்க முடியவில்லையாம். துர்ப்பலமான நிலையில் இருந்ததால் இந்த அதிர்ச்சிச் செய்தியை உங்களுக்கு அறிவிக்கக் கூடாது என்றே, அன்று அவர்கள் க்ஷேமமாக இருப்பதாகச் செய்தி கிட்டியது என அறிவிக்கச் செய்தேன்; இன்று காலையில் கூட நான் கப்பல் கம்பெனிக்காரர்களுக்கு டெலிபோன் செய்து விசாரித்தேன், உங்கள் கணவரும், குழந்தையும் விபத்தில் மூழ்கியிருக்க வேண்டுமென்று நம்புவதாக அவர்கள் அறிவித்து விட்டார்கள்....''

டாக்டர் மேலும் என்னென்ன சொல்லிக் கொண்டு போனாரோ, எனக்குத் தெரியாது. கணவரும் குழந்தையும் மூழ்கடிக்கப்பட்டு விட்டனர் என்ற செய்தியைக் கேட்டதும் என் சிரம் 'கிர்'ரென்று சுழன்றது. நான் நினைவிழந்து கட்டிலில் சாய்ந்து விட்டேன்.

மறுபடி நினைவு பெற்றுக் கண் விழித்தபோதும் டாக்டரும் நர்ஸும் அங்கேயே நின்று கொண்டிருந்தனர். நர்ஸ், என் அருகில் வந்து உடகார்ந்து ஆறுதல் கூற முயன்றாள்: "வருத்தப்படாதீர்கள் அம்மா; இனிமேல் அழுதோ, வருந்தியோ, என்ன பயன்! இது உங்களுக்குச் சகிக்க முடியாத துன்பந்தான்; இருந்தாலும் வாழ்வில் இன்பத்தைப் போலவே துன்பத்தையும்

[தொடர்ச்சி 51ம் பக்கத்தில்]

பூர்ணிமா

இந்த லிப்டன்ஸ் புரோகிராமில் பல நக்ஷத்திரங்கள் தங்களுடைய வாழ்க்கை வர்ணனையைக் கூறியதைக் கேட்டீர்கள். அவைகள் தான் எவ்வளவு விதவிதமானவை. இருந்தும் அவைகள் தான் கேட்க எவ்வளவு ருசிகரமாயிருந்தன. சிலர் ஒரு படத்தில் நடிக்க வேண்டியதுதான். அதன் பிறகு புகழ் அவர்களுக்கு மேலும் மேலும் வந்து கொண்டிருக்கிறது. இந்த லிஸ்டில் சேர்ந்தவர்கள், "பர்ஸாத்", "காளி கட்டா" ஆகிய படங்கள் மூலம் அகில இந்தியப் புகழ் பெற்றுள்ள நிம்மியும் பீனாராயும். கீதாபலி, ஷ்யாமா, உஷாகிரன், பூர்ணிமா போன்ற மற்றவர்கள் நக்ஷத்திரப் பதவியை அடையப் போராடவேண்டியிருந்தது. இன்று அவர்கள் புகழுடன் விளங்குகிறார்கள் என்றால் அதன் பெருமை அவர்களையே சாரும்.

பூர்ணிமாவுக்கு பட உலகத்தில் இன்றுள்ள பெயர் அதிருஷ்டத்தால் கிடைத்ததல்ல. விடா முயற்சி, ஓயாத உழைப்பு இவைகளின் பலனே அது. இன்று அவர் வாய் மூலமே அவரது வாழ்க்கையை, அவர் இத்துறையில் முன்னுக்கு வரக் காரணமாக இருந்த ஆசைக் கனவுகளை, அபிலாஷைகளை, நக்ஷத்திரப் பாதையில் தனக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களை அனைத்தையும் அவர் கூறப்போகிறார்.

(கதவு திறக்கப்படுகிறது. பூர்ணிமா பிரவேசிக்கிறார்.)

பூர்ணிமா:—வணக்கம் பால்ராஜ்! லிப்டன் ரஸிகர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

பால்ராஜ்:—வணக்கம் பூர்ணிமாஜி! உங்கள் வாழ்த்துக்களை ரஸிகர்கள் சார்பில் ஏற்றுக் கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் ரொம்பவும் சுறுசுறுப்பாக இருப்பீர்களே!

பூ:—ஆம், நான் "பாகி சிபாபி" என்ற பட வேலையில் மும்முரமாயிருக்கிறேன்.

பா:—உங்கள் மும்முரமான பட வேலைக்கு நடுவில் இந்த லிப்டன் புரோகிராமில் நீங்கள் பங்கெடுத்துக்கொள்ள வந்தமைக்கு எங்கள் நன்றி.

பூ:—ரஸிகர்களைத் திருப்திப் படுத்துவது தானே ஒவ்வொரு நக்ஷத்திரத்தின் கடமையுமாகும். என் கடமையைத் தவிர நான் வேறு எதுவும் செய்யாத போது நன்றியைப் பற்றிய பேச்சு ஏன்? எனது ரஸிகர்கள் எனது வாழ்க்கையைக் கேட்கட்டும். ஆனால் "பாகி ஸிபாபி"யில் அவர்கள் என்னை முற்றிலும் புது மாதிரியாகக் காண்பார்கள்.

பா:—"பாகி ஸிபாபி" உங்களுடைய சொந்தப் படமா?

பூ:—ஆம். பகவன் தாஸ் வர்மாவும் நானும் சேர்ந்து வி. பி. புரொடக்ஷன்ஸ் என்ற கம்பெனியின் பெயரில் தயாரிக்கிறோம்.

பா:—உங்களைத் தவிர மற்றும் யார் யார் அந்தப் படத்தில் நடிக்கிறார்கள்?

பூ:—மதுபாலா, ரஞ்சன், ஹீராலால், கோப், ஓம் பிரகாஷ் ஆகியோர்.

பா:—இந்தப் பட விஷயமாக நான் என்னால் முடிந்த உதவி ஏதேனும் செய்ய முடியுமா?

பூ:—நிச்சயமாக. அதன் இசைத் தட்டுகளை ரஸிகர்களுக்கான இந்த லிப்டன் புரோகிராமில் ஒலிபரப்புங்கள்.

பா:—நிச்சயமாகச் செய்கிறேன். ஆக, நீங்கள் சினிமா நடிகையாகவும், படத் தயாரிப்பாளராகவும் இரு வேலை பார்க்கிறீர்கள்.

பூ:—கடவுள் கிருபையால் அப்படித் தான்.

பா:—நீங்கள் எங்கே பிறந்தீர்கள்?

பூ:—பம்பாயில். இங்கு தான் நான் என் குழந்தைப் பருவத்தில் இருந்தேன்; கல்வி கற்றேன்; வளர்ந்தேன்.

பா:—உங்கள் பள்ளிக்கூட நாட்களில் நீங்கள் எதைக் கண்டு ரொம்பவும் பயந்திருக்கிறீர்கள்?

சுலபமாய் குல்லாய் போடுவதற்கு 'பிரண்ட்' ராமசாமிக்கு அங்க முத்துவைத் தவிர வேறு யாரும் அகப்படவில்லை போலும்!— மேர்க்குரி பிலிம்ஸ் ''போன மச்சான் திரும்பி வந்தான்'' படத்தில்.

பா:—நான், ஹிருதயங்களை என்று நினைத்தேன்.

பூ:—எங்கள் வீட்டிற்கு எதிரே ஒரு மாவு மில் இருந்தது. கடைக்காரன் எங்காவது அசந்திருக்கும் சமயம் காசுகளைத் திருடிக்கொண்டு நான் ஓடி வந்து விடுவேன்.

பா:—அந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்வீர்கள்?

பூ:—மிட்டாய்கள் வாங்குவேன். படம் பார்க்கத் தகுந்த காசு கிடைத்தால் படம் பார்க்கப் போய்விடுவேன்.

பூ:— நீங்களே யோசித்துப் பாருங்கள்.

பா:—பேய், பிசாசுகளுக்கா?

பூ:—இல்லை, எனது பள்ளிக்கூட வாத்தியார்.

பா:—உங்களுக்கு ரொம்பப் பிடித்தது எது?

பூ:—சினிமாப் படங்கள் மீது எனக்குப் பிரியம். நானே நடிப்பதாகக் கனவு கூடக் காண்பேன். படத்தில் நடிக்க வேண்டும் என்பது தான் என் வாழ்க்கையின் அபிலாஷையாக இருந்தது.

பா:—அப்படியானால் பள்ளிக்கூட நாட்களில் நாடகங்களில் நடிப்பதில் உங்களுக்கு ரொம்ப அபிமானம் இருந்திருக்குமே!

பூ:—பள்ளிக்கூட நாடகங்களில் அல்ல, உண்மை வாழ்க்கையில்.

பா:—என்ன? ஒரே புதிராக இருக்கிறதே!

பூ:—பால்ராஜ், அந்த விஷயங்களைப் பற்றி இப்பொழுது பேசவே எனக்கு வெட்கமா யிருக்கிறது.

பா:—அப்படியானால் நீங்கள் நிச்சயம் சொல்லத்தான் வேண்டும்.

பூ:— நான் குழந்தையா யிருந்தபோது திருடுவது வழக்கம்.

பா:—திருட்டு............எதை?

பூ:—எதையா....? பணத்தைத் தான்.

பா:—அக்கம் பக்கத்துக் குழந்தைகளிடம் வம்புச் சண்டை இழுப்பதே உங்கள் குணம் என்று கேள்விப் பட்டேனே?

பூ:—உண்டு தான். நிஜச் சண்டையே போடுவேன். இன்று கூட என் முகத்தில் அப்பொழுது ஏற்பட்ட வடுக்கள் இருக்கின்றன.

பா:—ஆகவே, நீங்கள் ஒரு துஷ்டப் பெண்ணுகத்தான் இருந்திருக்கிறீர்கள். ஆனல், நீங்கள் இப்பொழுது எப்படி இவ்வளவு சாதுவாக இருக்கிறீர்கள்?

பூ:— நம் பட முதலாளிகள் தான் அப்படி ஆக்கிவிட்டார்கள். குறும்புத்தனமான பாத்திரங்களிலும் நான் நன்ருக நடிக்க முடியும் என்ருலும் என்னை பரம சாதுவான பாத்திரங்களிலேயே நடிக்க வைத்தனர். தவருக எடுத்துக் கொண்டு விடாதீர்கள். திரையில் நான் சாதுவாக நடித்தாலும் அசல் வாழ்க்கையில் குழந்தைத்தனமும், துஷ்டத்தனமும் என்னிடம் இருகத்தான் இருக்கின்றன.

பா:—நீங்கள் எப்படி சினிமா நக்ஷத்திரமானீர்கள்?

பூ:—நான் ரொம்பக் கடுமையாக உழைக்கவேண்டி யிருந்தது. 1949ம் வருஷம் ''ராதே ஷாம்'' என்ற குஜராத்

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."

என்கிறார்

பி. எஸ். ஸரோஜா



இந்தியாவில் தயாரித்தது.

லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான, மிக மென்மையான நுரை உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. பி. எஸ். ஸரோஜா கூறுவதாவது: "இந்த வெண்மையான, சுத்தமான சோப்பை வழக்கமாக உபயோகிப்பது உங்கள் சருமத்திற்கு குறிப்பிடத் தக்க மாறுதலை அளிக்கிறது. அதன் ஆழப்புகுந்து சுத்தம் செய்யும் நுரை உங்கள் சருமத்தை மலரிதழ் போல் மென்மையாகவும், அழகாகவும் இருக்கச் செய்கிறது."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்!

"... அதனால் தான் என் வதனத்திற்கு எப்பொழுதும் லக்ஸ் டாய்லட் சோப்பின் பாதுகாப்பை அளிக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★

LTS. 423-50 TM

இப் படத்தில் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

பா:—அது எப்படிக் கிடைத்தது?

பூ:—"ராதே ஷாம்" படத்தைத் தயாரித்தவர் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர். அவர் படத்திற்கு ஒரு பெண் தேவையாக இருந்தது. என்னை நடிக்கும்படி கேட்டார். அதே மாதிரி சந்தர்ப்பத்தைத் தானே நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உடனே சம்மதித்தேன்.

பா:—அதற்குப் பின்?

பூ:—"ராதே ஷாமு"க்குப் பின் நான் ஹிந்திப் படங்களில் நடிக்க விரும்பினேன்.

பா:—உங்களுக்கு அந்த சந்தர்ப்பம் சுலபமாகக் கிடைக்கவில்லையா?

பூ:—இல்லை. நான் ஓடியாடவேண்டியிருந்தது. ஒரு பட முதலாளியையோ டைரெக்டரையோ தேடிப் போனால் அவர் பேட்டி கிடைக்க மணிக்கணக்காகக் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. இறுதியாக அவர்கள் என்னை அழைத்தபோது அவர்களுடைய டஜன் கணக்கான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது. எனது உயரத்தைக் கணக்கெடுப்பார்கள். அது திருப்தியாக இருந்தால் உடனே என் காலைப் பார்ப்பார்கள். "பூட்ஸைக் கழட்டு" என்று கூறுவார்கள். "அது உன்னை உயரமாகக் காட்டுகிறது" என்பார்கள். சில டைரெக்டர்கள் என் போட்டோவைக் கேட்பார்கள். வசனம் கொடுத்து பேசச் சொல்லிப் பார்ப்பார்கள். இவையெல்லாம் என்னை நடுநடுங்கச் செய்யும்.

சில பட முதலாளிகள் — டைரெக்டர்கள் புதிதாக வருகிறவர்களை கொடுமையாக நடத்துகிறார்கள். முன்னுக்கு வர எண்ணுகிறவர்களை அவர்கள் அப்படி நடத்தக்கூடாது. கடைசியாக கேதார் சர்மா தான், என் தோற்றம், சம்பாஷணை, பேசும் தோரணை எல்லாம் பிடித்தவராக என்னைத் தமது "தெஸ்" படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

பா:—படத் துறையில் பிரவேசிக்க நினைக்கும் ரஸிகைகள், அத்துறையில் உள்ள கஷ்டங்களை இதன் மூலம் நன்கு உணர்வார்கள் என நான் நினைக்கிறேன்.

பூ:—மிஸ்டர் பால்ராஜ்! பட உலகம் என்பது ரோஜா மலர்ப் படுக்கையல்ல. அதில் மலர்களும் இருக்கின்றன; கூட முட்களும் உள்ளன. பல நடிகைகள் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவோ முயற்சித்தும் பிரபலம் அடையாமலே இருந்து வருகிறார்கள். படத்துறையில் பிரவேசிக்க நினைக்கிறவர்கள் வெற்றியோ தோல்வியோ எதையும் ஏற்கும் நிலையில் இருக்கவேண்டும். வெற்றி கிடைத்தால் சரி; அப்படியில்லையெனில் மனம் சங்கடப் படுவதில் பயனில்லை.

பா:—படத் துறையில் புக நினைக்கும் யுவதிகளுக்கு உங்கள் புத்திமதி என்ன?

பூ:—முக்கியமாக கலை மீது ஆர்வம் வேண்டும். தீயதிற்கும் நல்லதிற்கும் வித்தியாசம் கண்டு கொள்ளும் திறமை வேண்டும்.

பா:—அப்படியா? "தெஸ்" தான் உங்கள் முதல் ஹிந்திப் படமா?

பூ:—ஆம்.

பா:—முதல் நாள் முதல் முறை நீங்கள் காமிரா முன் நின்றபொழுது என்ன நடந்தது?

பூ:—அன்று படப்பிடிப்பு ரஞ்சித் ஸ்டுடியோவில் நடைபெற்றது. "ஜோகன்" படத்திற்காக நர்கீஸ் சம்பந்தப்பட்ட சில பாகங்கள் படமாக்கப்பட்டன. ஆகவே, அவர் அங்கிருந்தார். எனக்கு நடுக்கமாக இருந்தது; வியர்வை ஆறுசப் பெருகியது. ஆனாலும் எனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை.

பா:—"தெஸ்" படத்திற்குப் பிறகு வேறு என்னென்ன படங்களில் நடித்தீர்கள்?

பூ:—"பதன்யா", "பாதல்", "கௌஹ"், "பர்பத்" ஆகிய படங்களிலும், சமீப வெளியீடுகளான "பாய் ஸாஹிப்", "பூஜா"விலும் கூட நான் நடித்திருக்கிறேன்.

பா:—எந்தப் படம் உங்களுக்குப் பட உலகில் கிராக்கியை ஏற்படுத்தியது?

பூ:—நான் "பாதல்" படத்தில் நன்றாக நடித்தேன். அதன் பிறகு தான் எனக்கு முக்கிய பாத்திரங்கள் கிடைக்க ஆரம்பித்தன.

பா:—இதுவரை நடித்துள்ள படங்களில் எந்தப் படத்தில் நீங்கள் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறீர்கள்?

சென்ற மாத இறுதியில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் பக்ஷிராஜாவின் "மலைக் கள்ளன்" தமிழ்ப் படத்தில் பாலசரஸ்வதி, பி. எஸ். ஞானம், பானுமதி தோன்றும் இக்காட்சியை நீங்கள் பார்க்கலாம்.

பூ:—"பூஜா"வில் என் நடிப்பு எனக்குத் திருப்தி அளிக்கிறது என்றாலும் நான் நடித்த சிறந்த படம் என்பது இன்னும் வரவில்லை.

பா:—"பாய் ஸாஹிப்"பில் தமாஷான பாகம் உங்களுடையது இல்லையா?

பூ:—ஆம். அவ்வப்பொழுது ஏற்படும் சிறு மாறுதல்கள் நல்லதையே செய்கின்றன.

பா:—நீங்கள் நக்ஷத்திரமாவதற்கு முன் உங்கள் அபிமான நக்ஷத்திரம் யார்?

பூ:—குர்ஷீத், பரத், மோதிலால் ஆகியோர். குர்ஷீத்தைப் போல் பாட வேண்டுமென நான் தான் எவ்வளவு ஆசைப்பட்டிருக்கிறேன்!

பா:—அப்படியானால் நீங்கள் பாடுவீர்களா?

பூ:—ஆம். பாடுவேன்.

பா:—நாங்கள் பின் எதற்குத்தான் காத்திருக்கிறோம். நாங்கள் ஒரு பாட்டு கேட்கக் கூடாதா?

பூ:—இங்கேயா? முடியாது. நான் வீட்டிற்குள் முணுமுணுத்துப் பாடும் மிகச் சாதாரண ஒரு பாடகிதான்.

பா:—அப்படியானால் உங்கள் பாட்டைக் கேட்க நான் உங்கள் வீட்டிற்குத்தான் ஒரு நாள் வந்தாக வேண்டும். சரி, நீங்கள் ஆங்கிலப் படங்கள் பார்ப்பது உண்டா?

பூ:—இந்தியப் படமானாலும் சரி, ஆங்கிலப் படமானாலும் சரி, ஒவ்வொரு நல்ல படத்தையும் நான் பார்க்கிறேன். கிரிகரிபெக், ஜேனிபர் ஜோன்ஸ் எனது அபிமான நக்ஷத்திரங்கள்.

பா:—பூர்ணிமாஜி! நல்ல படம் என்று எதைச் சொல்கிறீர்கள்?

பூ:—நல்ல கதை, நல்ல டைரெக்ஷன், நல்ல நடிப்பு இவைகளைக் கொண்ட படத்தையே நான் நல்ல படமென்று கூறுகிறேன். நமக்கு அந்

நியமான ஒரு விஷயத்தை நம் படங்களில் புகுத்துவது கதையையும் கெடுத்து படத்தையும் பாழ்படுத்துகிறது.

பா:—நாம் எப்படி நல்ல படங்கள் தயாரிக்க முடியும்?

பூ:—முக்கியமான விஷயம் மேனாட்டுப் படங்களை காப்பி அடிக்கும் வழக்கம் நிற்கவேண்டும். இந்தியக் கதையைப் படமாக்க நமக்கு இந்திய நாகரீகம், கலாசாரம் இவை நன்கு தெரிந்திருக்க வேண்டும். தவிர ஒரு படத்தில் வேலை செய்யும் டைரெக்டர் முதல் எக்ஸ்ட்ரா வரை ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இருந்தால் நல்ல படம் தயாரிக்க முடியும்.

பா:—படப் பிடிப்பு இல்லாத ஓய்வு நேரங்களில் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

பூ:—வீட்டை அலங்கரிக்கிறேன். தையல், பூ வேலை செய்வேன். அல்லது

மெர்க்குரி பில்ம்ஸ் தயாரித்து வரும் "போன மச்சான் திரும்பி வந்தான்" தமிழ்ப் படத்தில் ஸ்ரீராமும், குசல குமாரியும் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

உருது புஸ்தகங்கள் படிப்பேன்.

பா:—வழக்கமாக என்ன படிப்பது?

பூ:—க்யஸி ராம்புரி.

பா:—கவிஞர்களில்?

பூ:—நான் கவிதைகள் அதிகம் படிப்பது இல்லை.

பா:—வீட்டில் வேறு என்ன செய்வீர்கள்?

பூ:—நூல் வேலை எனக்குப் பிடித்தமானது. ஸ்வெட்டர் முதலியன போடுவேன். நான் எப்பொழுதும் புடவை தான் கட்டிக் கொள்கிறேன். எனது உடைகளை நானே ஏற்பாடு செய்து கொள்கிறேன். என் சிறு பிராயத்தில் பல விளையாட்டுகள் விளையாடுவதில் எனக்குப் பிரியம். ஆனால் இப்பொழுது எல்லாம் சேர்ந்து தோட்ட வேலையில் முனைந்திருக்கிறேன். என் வீட்டுக்கு வந்தால் கொத்துக் கொத்தாக மல்லிகைப் புஷ்பங்களை நீங்கள் பார்க்கலாம்.

பா:—நிச்சயமாக வருகிறேன். உங்கள் விலாஸம்?

பூ:—17, பாலி ஹில், பண்ட்ரா.

பா:—வந்தனம். 17, பாலி ஹில், பண்ட்ரா. குறித்துக் கொண்டு விட்டேன். உங்கள் புஸ்தக சாலையையும் தோட்டத்தையும் பார்க்க மட்டும் நான் வரமாட்டேன்.

பூ:—என்ன காரணமோ?

பா:—சாப்பிடும்படி அல்லது டிபன் பண்ணும்படி சொல்லமாட்டீர்களா?

பூ:—நிச்சயமாக.

பா:—எந்த சமையல் நீங்கள் நன்ருகச் செய்வீர்கள்?

பூ:—புலாவ்.

பா:—பிரமாதம்! மாமிசமா? அல்லது கோழியா?

பூ:—எந்த வகையும் கிடைக்கும்.

பா:—அப்படியானல் நிச்சயமாக வருகிறேன். பூர்ணிமாஜி! உங்களுக்கு ஆபரணங்கள் மீது கூட பிரேமை உண்டு அல்லவா?

பூ:—இல்லை. ஆபரணங்கள் மீது எனக்குப் பற்றுதல் கிடையாது. படங்

பக்ஷிராஜா வெளியிட்டுள்ள ''மலேக் கள்ளன்'' தமிழ்ப் படத்தில் பி. எஸ். ஞானம், சக்ர பாணி, துரைராஜ், டி. பாலசுப்ரமண்யம், பானுமதி ஆகியோர் தோன்றும் ஒரு காட்சி இது.

களில்கூட நான் அவைகளை அதிகம் அணிவதில்லை.

பா:—மேனுடுகளுக்குப் போகும் எண்ணம் உங்களுக்கு உண்டா?

பூ:—இதுவரை நான் அதைப்பற்றி நினைக்கவில்லை. தவிர, இந்தியாவைப் பூராவாகப் பார்க்காதவரை நான் மேனுடு போவது எப்படி? யாராவது அந்நியர் இந்தியா பற்றி என்னைக் கேட்டால் நான் முழிக்க வேண்டியது தான். இந்தியப் பெண்ணுக இருந்து கொண்டு சொந்த தேசத்தைப் பற்றி எனக்குள்ள அறிவைக் கண்டு அவர்கள் நகைப்பார்கள்.

பா:—நீங்கள் இந்தியா பூராவும் பார்த்தது கிடையாதா?

பூ:—பம்பாய், புனு, மைசூர், பங்களூர் போன்ற சில குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களுக்கு நான் போனது கிடையாது. இந்தியாவில் இரண்டு மாதம் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டுமென்று நினைத்திருக்கிறேன்.

பா:—பூர்ணிமா என்பது உங்கள் பட உலகப் பெயர். வீட்டில் உங்களை எப்படிக் கூப்பிடுகிருர்கள்?

பூ:—'பேபி' என்று அழைக்கிருர்கள்.

பா:—பேபி! நல்லது, பேபிஜீ! உங்கள் வாழ்க்கையின் லக்ஷியம் என்ன?

பூ:—ஒன்றே ஒன்றுதான். நான் இறந்துபோய் விட்டாலுங்கூட மக்கள் மனத்தில் சிறந்த நடிகை என்ற ஸ்தானத்தை நிலையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் அது.

பா:—எனது ஆசை எனது மரணத்திற்குப் பிறகும்கூட உங்கள் போன்ற நக்ஷத்திர நடிகைகளை பேட்டி காண்பது ஒன்றே ஆகும்.

பூ:—நிமாயமான ஆசைதான்!

பா:—பூர்ணிமா, உங்களை மேலும் ஒரு கேள்வி கேட்கலாமா?

பூ:—நிச்சயமாக.

பா:—அது பரம ரகஸியம்; முக்கியம். அதை நான் உங்கள் காதில் மெதுவாகச் சொல்கிறேன்.

பூ:—ரகஸ்யமே வேண்டாம். தயங்காமல் வெளிப்படையாகவே கேளுங்கள்.

பா:—அப்படியானல் உங்கள் காதலைப் பற்றிப் பேசுவோம்.

பூ:—காதல்!

பா:—ஆம். ஏன், ஏதாவது ஆக்ஷேபணை உண்டோ?

பூ:—பால்ராஜ், நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்.

பா:—ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

பூ:—நான் மறுபடி லிப்டன் புரோகிராமுக்கே வர முடியாதபடி எல்லாக் கேள்விகளையும் இன்றே கேட்டுவிட நினைக்கிறீர்கள்.

பா:—நிச்சயமாக அது என் எண்ணமேயில்லை.

பூ:—அப்படியானல், இந்தக் கேள்விக்கு பதிலளிக்க நாம் மீண்டும் லிப்டன் புரோகிரும் மூலம் சந்திப்போம்.

பா:—மீண்டும் நீங்கள் எப்பொழுது வருவீர்கள்?

பூ:—ரஸிகர்கள் எப்பொழுது விரும்புகிறுர்களோ, அப்பொழுது.

பா:—சரி, அப்பொழுது மறந்துவிட வேண்டாம்.

பூ:—மறக்கமாட்டேன்.

பா:—எனது முதல் கேள்வி காதல் பற்றித்தான் இருக்கும்.

பூ:—ஓ. கே. தயவு செய்து இப்பொழுது எனக்கு விடை கொடுங்கள். வணக்கம்.

பா:—வணக்கம்.

[நீங்கள் மேலே வாசித்தது, பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலிபரப்பப்பட்ட பேட்டியாகும்.]

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானிஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) **கோயமுத்தூர்.**

இன்பப் பிறவி

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18; விலை: ரூபாய் ஒன்று.]

திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்தே இன்னொரு பதிமூன்று பாடல்கள் இப்புத்தகத்தில் விளக்கப் படுகின்றன. பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் எம்பெருமானை தரிசிக்க 'இந்த இன்பப் பிறவியையே மீண்டும் அளிக்க மாட்டாயா?' என்று வேண்டும் பாடலுக்கு "இன்பப் பிறவி" என்னும் தலைப்போடு விளக்கம் முதலாவதாக அமைந்திருக்கிறது. திருவாரூர், திருவீழிமிழலை, திருவிடை மருதில், திருக்கடம்பூர்த் திருக்கரக் கோயில், திருஇன்னம்பர், திருவானைக்கா, திருச்சோற்றுத்துறை, திருமருகல் முதலிய தலப் பெருமான்களைப் பற்றிய பாடல்களும், பொதுப் பாடலாக அமைந்த நான்கு பாடல்களும் இங்கு விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இறைவனைத் தலைவனாகக் கொண்ட தலைவியைப்பற்றி செவிலி சொல்லுவது போலவும், இறைவனை முன்னிலைப் படுத்தி அவன் புகழைப் பாடுவதைப் போலவும், இறைவனை இனியன் என்று படர்க்கையாகச் சொல்லும் பாடலும், நெஞ்சை நோக்கி இறைவனை பணியச் சொல்லும் பாடலும், இறைவனைப் பற்றிய உண்மையை அறியாதவர்களை 'நல்லூழ் இல்லாதவர்களே' என்று வியந்து கூறுவதைப் போன்ற பாடலும், இறைவனிடம் உண்மையான அன்பு இன்றி, தீர்த்த யாத்திரைகள் செய்பவர்களையும், இறைவன் அருங் குணங்களைக்காணாதவர்களை 'கூவல் ஆமை'க்கு ஒப்பிட்டுப் பாடிய பாடல்களும், கதைகள் கட்டுரைகள் போன்று, அவைகளுக்கு எழுதப் பெற்றிருக்கும் விளக்கங்களும், படிக்கப் படிக்க சமயச் சுவை பெருகி இன்பம் அளிக்கின்றன. வழக்கம் போலவே இப்புத்தகமும் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டுள்ளது.

இரவும் பகலும்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன்; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட், சென்னை-18; விலை: ரூபாய் ஒன்று.]

பன்னிரு திருமுறைகளிலிருந்து சில பாடல்களைப் பொறுக்கி விளக்கங்கள் எழுதி வெளியிடும் புத்தக வரிசையில் "இரவும் பகலும்" நான்காவதாக வெளிவந்துள்ளது. திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட பதிமூன்று பாடல்களுக்குரிய விளக்கங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

சூலை நோயை தவிர்த்தருளுமாறு திருவதிகைப் பெருமானை வேண்டும் பாடலுக்கு 'இரவும் பகலும்' என்ற தலைப்போடு விளக்கம் எழுதப் பட்டிருக்கிறது. மற்றும் திருவதிகையைப் பற்றி இரண்டு பாடல்களும், திருவையாறு தலத்தைப் பற்றி மூன்று பாடல்களும், திருவாரூரைப்பற்றி இரண்டு பாடல்களும், திருக்கடவூர், திருமறைக்காடு, திருவீழிமிழலை, திருச்சத்தி முற்றம் முதலிய தலங்களைப் பற்றிப் பாடிய பாடல்களும், பொதுப் பாடல் ஒன்றுமாக பதிமூன்று பாடல்கள் இந்நூலில் விளக்கத்தோடு இடம் பெறுகின்றன. திருமுறை நூல்களில் ஆர்வம் உள்ளோர்க்கும், சைவ சமய நூல்களில் அறிவு வளர்ச்சி பெற விரும்புவோர்க்கும், ஆஸ்திகர்களுக்கும் இந் நூல் வரிசையால் ஆசிரியர் பெரும் தொண்டு செய்து வருகிறார்.

விவேக சிந்தாமணி

[தொகுத்தவர்: சிரஞ்சீவி; விலை: எட்டு அணா; கிடைக்குமிடம்: பிரேமா பிரசுரம், சென்னை-24.]

காதல் கதைகளையும் கொலைக் கதைகளையுமே புத்தகங்களாகப் பிரசுரித்துக் கொண்டிராமல், மக்களை நல்வழிப் படுத்தும் அறிவுப் பிரசுரங்களையும் வெளியிட்டு வரும் பிரேமா பிரசுரத்தின் நிர்வாகி அரு. ராமநாதன் பாராட்டுதலுக்கு உரியவரே. இந்தப் புத்தகமும் கீழே உள்ள புத்தகமும் அத்தகைய பிரசுரங்கள் தாம்.

பல தலைமுறைகளாக தமிழ் நாட்டில் மக்களுக்கு அறிவூட்டி வரும் அறநெறி நூல் விவேக சிந்தாமணி. இந்த நூற்றாண்டிலே பலருக்கு அப்படி ஒரு பொக்கிஷம்

இருப்பதாகத் தெரியக் கூடத் தெரியாது. மிகப் பெரிய நூலாகிய அதனை மிகச் சிறிய புத்தகமாக வெளியிட்டிருக்கின்றனர். ஸாரமான பொன் மொழிகளாகப் பொறுக்கித் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் தொகுப்பாசிரியர்.

பைபிள் பொன் மொழிகள்

[தொகுத்தவர்: இயேசு நேசர்; விலை: எட்டு அணா; கிடைக்குமிடம்; பிரேமா பிரசுரம், சென்னை–24.]

பைபிள் என்றதுமே 'கிறிஸ்தவர்கள் வேதபுத்தகம் அல்லவா அது?' என்ற நினைப்பு பலருக்கு ஏற்படுவது உண்டு. அந்த நினைப்பிலே பலர் அதைத் தொட்டது கூடக் கிடையாது. ஆனால் அவர்கள் நினைப்பு தான் எத்தகைய மகத்தான தவறு என்பது இப்புத்தகத்தைப் படித்தால் தெளிவுபடும். இயேசுநாதர் கிறிஸ்தவ மத ஸ்தாபகர் என்றாலும் அவரது பொன் மொழிகள் எம்மதத்தினருக்கும் ஏற்றதே. அதுமட்டுமல்ல. அவரது பொன் மொழிகளிலே காணப்படும் பல அறநெறிகளை நமது குறளிலும், பட்டினத்தார் பாடலிலும் காண முடிகிறது. புத்தகத்தின் 71ம் பக்கத்தில் 'நிர்வாணம்' என்ற தலைப்பிலே கொடுத்திருக்கும் பொன் மொழியைப் படியுங்கள். பட்டினத்தாரின் "பிறக்கும்பொழுதுகொடுவந்த தில்லை" என்ற பாடலின் கருத்துத் தானே அது. மொத்தத்தில் குறைந்த விலையிலே பிரசுரிக்கப்படும் இம் முயற்சிக்கு ரஸிகர்கள் அமோக ஆதரவு அளிக்க வேண்டும்.

கதாநாயகி

[ஆசிரியர்: அரு. ராமநாதன்; விலை: ரு. 1–4–0; கிடைக்குமிடம்; பிரேமா பிரசுரம், சென்னை–24.]

இப் புத்தகத்திலே 'கதாநாயகி', 'காதலின் புதிர்', 'யாமினி', 'விடிந்தது' என்ற ஆசிரியரின் நான்கு சிறு கதைகள் இருக்கின்றன. கடைசிக் கதையான—கருப்பாயியைக் கதாநாயகியாகக் கொண்ட—'விடிந்தது' மற்ற மூன்று கதைகளையும் விட நன்றாக இருக்கிறது. கிராமாந்தர சூழ்நிலையைக் கொண்ட அக் கதையின் நாயகி கருப்பாயி ஒரு சிறந்த கதாபாத்திரம். ஒரு சிறு தவறுதலை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இறுதிக் கதையில் கதாநாயகியின் பெயர் **கருப்பாயி**யாக இருக்க முகவுரைபோல் அட்டையில் உள்ள குறிப்பில் **வள்ளி** என்று போட்டிருக்கிறது. அழகான மூவர்ண அட்டையுடன் புததகம் நல்ல முறையில் இருக்கிறது.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

[ஆசிரியர்: செ. இராசதுரை; விலை: 50 சதம்; கிடைக்குமிடம்; தமிழ்ப் பண்ணை, 7, திரிகோணமலை தெரு, மட்டக்களப்பு.]

இந்த நூலாசிரியர் இலங்கையிலே ஒரு சிறந்த பேச்சாளர் என்பது முகவுரையிலிருந்து தெரிகிறது. அவர் மட்டக்களப்பிலுள்ள வின்ஸன் மகளிர் உயர்தரக் கல்லூரியில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தை புத்தகமாகப் பிரசுரித்திருக்கிறார்கள். பிரசங்கத்திலே, குறள், சிலப்பதிகாரம் இவைகளிலிருந்து கோட்பாடுகள் காட்டி புத்திமதிகள் கூறியிருக்கிறார். புத்தகத்தைப் படித்து முடித்ததும், நூலாசிரியர் நீண்ட (நேர) பேச்சாளர் என்பது வெளியாகிறது.

பிரேமாஞ்சலி

[ஆசிரியர்: லோகநாதன்; விலை: ரு. 2–4–0; கிடைக்குமிடம்: நவலட்சுமி புத்தகசாலை, 136, செட்டியார் தெரு, கொழும்பு.]

பல்லவர் காலத்தில் நடந்ததாகக் கற்பனை செய்து எழுதப்பட்ட நவீனமாகும் இது. பல்லவ ராஜகுமாரன், அரச அவையிலே நாட்டியமாடும் பிரேமா என்ற ஆடலழகியைக் காதலிக்கிறான். அவளோ பரந்தாமன் என்ற இளைஞனைக் காதலிக்கிறாள். இதைச் சுற்றி ஓடுகிறது கதை. எளிய நடையிலே சுவாரஸ்யமாக எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

இலவு காத்த கிளி

[ஆசிரியர்: பிரம்மம்: விலை: ரு. 1–8–0: கிடைக்குமிடம்: மனோஹர் பிரசுரம், 43, லிங்கிச்செட்டித் தெரு, சென்னை–1.]

ஆசிரியரால் எழுதப்பட்ட பதினைந்து சிறு கதைகளின் தொகுதி இது. சில கதைகள் சுவாரஸ்யமாக இருக்கின்றன. மற்றவை வெகு சாதாரணமாகத்தான் இருக்கின்றன.

வரப்பெற்றோம்

தென்றல்

[ஆசிரியர்: கண்ணதாசன்; தனிப் பிரதி 2 அணா; கிடைக்குமிடம்: 2, ஷண்முகமுதலித் தெரு, சென்னை–14.]

* முன் வருமா ?

இன்றைய தமிழ்ப் படங்களின் பாடல்கள் மிகவும் மட்டரகமாகப் போய் விட்டன. பெரும்பான்மையான படங்களில் ஹிந்தி மெட்டுக்களின் கலப்படப் பாடல்கள்தான் கேட்கப்படுகின்றன. தமிழ்ப் படத்தில் கர்நாடக சங்கீதம் கமழ்ந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. இந்த வேடிக்கையான நிகழ்ச்சி, தமிழ்ப் படங்களின் தரத்தையே குறைத்துவிட்டது. இதே நிலை நீண்டுவிட்டால் தமிழ்ப் பட உலகம் அப்படியே அத்தமித்து விடும். மேலும் இன்றைய தமிழ்ப் படங்களின் பாடல்கள் பாடல்களாகவோ அல்லது கவிதைகளாகவோ இருப்பதில்லை. 'பாடுவதெல்லாம் பாட்டாகா' என்பதுபோல, படத்திற்காக எழுதுகின்ற பாடல்கள் எல்லாம் பாடல்கள் ஆகமாட்டா. இன்றையத் திரைப்படக் கவிஞர்கள், உரை நடையை பாடலாக எழுதித் தருகின்றனர். அதை பின்னணிப் பாடகர் பாடுகிறார். பாடுகின்ற பாட்டில் கருத்து இருக்கலாம், அழகான சொற்கள் அமைந்திருக்கலாம். ஆனால், அது பாட்டின் உயிர்ப்பொருளைத் தருவதில்லை. முன்னெல்லாம் பாட்டெழுதுபவர் என்றால் ஓரிருவர் இருப்பர். அழகாகவும் எழுதுவர். அவர்கள் எழுதுகின்ற பாடல்கள் மக்கள் மனத்தில் நிலைத்து நிற்கும். சான்றாக, "கண்ணகி" என்றவுடன் 'மானமெல்லாம்' அல்லது 'மாநிலமீது' என்ற பாடலும், "அம்பிகாபதி" என்றவுடன் 'சந்திர சூரியர்' என்ற பாடலும், "ஆர்யமாலா" என்றவுடன் 'சிவக்ருபையால்' என்ற பாடலும், "அசோக் குமார்" என்றவுடன் 'பூமியில் மானிட' என்ற பாடலும்தான் நினைவிற்கு வருகின்றன, இன்றும். ஆனால், இன்று தியேட்டரை விட்டு வெளியில் வந்தவுடன் படத்தின் பாடல்கள் மறந்துவிடும் அளவிற்கு 'சிரஞ்சீவித் தன்மை' பெற்றிருக்கின்றன, காரணம்? பாடல்களில் தமிழ்ப் பாணி இருப்பதில்லை; பாடல்கள் ஹிந்தி மெட்டில் அமைக்கப்படுகின்றன. மேலும், இன்று இரண்டு எழுத்து எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம் சினிமாவிற்குப் பாட்டு எழுத ஆரம்பித்துவிட்டனர். முன்னெல்லாம் படத்தில் உள்ள எல்லாப் பாடல்களையும் ஒருவரே எழுதுவார். இன்றோ, ஒரு படத்தில் நான்கு பாடல்கள் இருந்தால், அவைகளை எழுதுகிறவர்கள் எட்டு கவிஞர்களாக இருக்கின்றனர்! இந்தக் குற்றங்களை எல்லாம் தமிழ்ப் பட உலகம் நீக்கி, நினைவில் நிற்கும் நல்ல தமிழ்ப் பாடல்களை மக்களுக்குத் தர முன்வருமா?

'தமிழ்ப்பித்தன்', கோவை.

நமக்குத் தேவையா ?

எல்லோராலும் ஒருமுகமாகப் போற்றப்பட்டு, அமோக வெற்றியுடன் ஓடிக்கொண்டிருக்கும் "தேவதாஸ்" நம் நாட்டுக்குத் தேவையா என்று சற்று யோசித்துப் பார்த்தால், 'நிச்சயம் தேவதாஸ் நமக்கும் நம் நாட்டிற்கும் தேவையில்லை' எனத் துணிந்து கூறலாம். ஏன், கதாநாயகன் தேவதாஸ் முதலில் படுசுட்டிச்சிறுவனாக வருகிறான். பீடி குடிக்கிறான் சிறு வயதில். அதை அவன் தந்தை கண்டிக்கிறார். இதனால் தேவதாஸ் அந்தக் கெட்ட பழக்கத்தை நிறுத்திக் கொண்டானா? அதுதான் இல்லை. இதைப் பார்த்த எத்தனையோ சிறுவர்கள் தேவதாஸ் போல பீடி குடித்துவிட்டு, 'தந்தைக்குத் தெரிந்தால் என்ன? பிரம்பால் நாலு அடிகள்தான் கொடுப்பார். பிறகு அவருக்குத் தெரியாமல் மறுபடியும் பீடி குடிக்கலாம்' என்ற கெட்ட பழக்கம் ஏற்படுவதற்கு சாதகமாயிருக்கிறது. தேவ

☆ **பரிசு பெற்ற கடிதம்**

எழுதியவர்:

'தமிழ்ப் பித்தன்'

35, சிரியன் சர்ச் வீதி,

கோவை.

தாஸ் சிறுவயதிலே பக்கத்து வீட்டுப் பெண் பார்வதியை நேசிக்கிறான். இது போல் அநேக படங்களில் காட்டப்படுகின்றன. இவையெல்லாம் சிறுவர்கள் பார்த்தால் என்ன எண்ணுவார்கள்? தேவதாஸ் பெரியவனாகிறான். தன் காதலி பார்வதி மற்றொருவரை மணந்ததால் மனம் ஒடிந்து சென்னை செல்கிறான். அங்கே தீய நண்பன் ஒருவன் மூலம் குடிக்காரனாகிறான். அவன் அளவுக்கு மிஞ்சிக் குடிப்பதால் இரத்தம் கக்கும் ஒரு வியாதி அவனைப் பீடிக்கிறது. வியாதி அதிகமாகவே ஊர் திரும்பும் அவன், இடையே தன் காதலி மணமான துர்க்காபுரம் வந்து இரத்தம் கக்கி இறக்கிறான். இதை அறிந்த பார்வதியோ தன் காதலன் இறந்தான் என்ற பிரமையில் ஓடி வருகையில் கதவில் முட்டி உயிர் துறக்கிறாள். ஆனால், தேவதாஸ் எப்படி இறந்தான்? அதிகம் மது அருந்தியதால்! அவன் காதலுக்காக உயிர் விட்டதாக இல்லை; மதுவிலக்கு நாடான நம் நாட்டில் தேவதாஸ் மது அருந்துவதையும், மதுவை வைத்துக் கொண்டு பாடும் பாட்டுக்களையும் சென்ஸார் எப்படித்தான் அனுமதித்தார்களோ, தெரியவில்லை. இதனால் நமது நாட்டில் உள்ள மாஜி குடிகாரர்களுக்கு பழையபடி குடிக்கவேண்டும் என்ற சபலமே தோன்றும். இனிமேலும் இப்படிப்பட்ட அசம்பாவிதங்களை சென்ஸார் அனுமதிக்காமல் இருப்பார்கள் என நினைக்கிறேன்.

"மைனாவதி பிரியன்", கமுதி.

"மிஸ் மாலா"

வட இந்திய பட முதலாளிகளும், பத்திரிகைகளும், வட இந்தியப் படங்களையே சிறந்த படங்கள் எனச் சொல்லிக் கொள்வதே வழக்கம். தென் இந்தியப் படங்கள் எப்படியிருந்தாலும், அதை மட்டமாகக் கருதுவதே வழக்கம். "மிஸ் மாலா"வைப் பார்த்த போது நம் தமிழ்ப் படங்கள், வட இந்தியப் படங்களைவிடப் பன்மடங்கு சிறந்தவை எனத் தாராளமாகக் கூறலாம். "மிஸ் மாலா" மூலம், தென்னாட்டுப் பிரபல நாட்டிய நடிகை குமாரி வைஜயந்திமாலா தன் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறாள். இப்படத்தில், அவருடைய தோற்றமோ, நடிப்போ, முக்கியமாக நடனமோ, சகிக்கவில்லை. இது அவருடைய தவறு இல்லை. இப்படத்தைத் தயாரித்தவரும், டைரெக்ட் செய்தவருமான ஜய்ந் தேசாய் அவரை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அநேகமாகப் பட முழுவதுமே "மாலா"வின் முகம் விகாரமாயிருக்கிறது. "வாழ்க்கை"யிலும், "லட்கி"யிலும் பிரமாதமாக நடனம் ஆடி, நம்மைக் களிப்புறச் செய்த வைஜயந்தியா இப்படத்தில் நடனம் ஆடுகிறாள் என்று கேட்கத் தோன்றுகிறது. ஒரு நடனமாவது மனதைத் தொடுவதாக இல்லை. மனதைத் தொடுவானேன்! பார்க்கவே சகிக்கவில்லை. கதையில் நம்ப முடியாத காட்சிகள் பல வருகின்றன. படத்தில் விறுவிறுப்பே இல்லை. வைஜயந்தி தமிழ் நடிகையாயிருந்தும் அதிகமாக ஹிந்திப் படங்களில்தான் நடித்து வருகிறாள். இம்மாதிரிப் படங்களில் நடித்து தம் புகழை, முக்கியமாக நடனப் புகழை இழந்து விடுவாரோ என்று நினைக்கவேண்டி வருகிறது. "மிஸ் மாலா"வை விட நம் தமிழ்ப் படங்கள் பன்மடங்கு சிறந்தவை என மறுமுறை கூறுகிறேன். நம் பட முதலாளிகள் "மிஸ் மாலா"வைப் போன்ற படங்களைத் தயாரித்து ரஸிகர்களைத் துன்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் தமிழ் நடிக நடிகைகளும் மட்டரக வட இந்தியப் படங்களில் நடித்துத் தம் பெயருக்கு இழிவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம்.

வி. நடராஜன், கல்கத்தா.

வரவேற்பார்கள்

நல்ல படங்களுக்கு மத்ய அரசாங்கமானது தக்க பரிசு அளிக்கத் தீர்மானித்திருக்கும் நற்செய்தியை அறிந்து அளவற்ற ஆனந்தம் அடைந்தேன். அரசாங்கத்தின் இச் சாலச் சிறந்த செயலை எல்லோரும் முழுமனதுடன் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. நல்ல சிறந்த படங்கள், கருத்துள்ள படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படவேண்டுமேயாகில் படத் தயாரிப்பாளர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஒருங்கே அளிப்பது பட ரஸிகர்களின் கடமை மாத்திரமல்ல, அரசாங்கத்தின் கடமையுமாகும். படங்களுக்

குப் பரிசு அளிப்பதால் பட முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் படங்களுக்கே பரிசு கிடைக்கவேண்டு மென்ற எண்ணத்திஞல், ஆர்வத்திஞல் மிகச் சிறந்த, உயர்ந்த, உன்னதமான படங்களைத் தயாரித்து வெளியிட முற்படுவார்கள். பட முதலாளிகள் அவ்வாறு படங்களைத் தயாரித்து வெளியிடுவதால் பட முதலாளிகளின் பெயர் பாரெங்கும் பரவ, படங்களின் தரமானது மென்மேலும் உயர, பட ரஸிகர்கள் நல்ல சிறந்த, உயர்ந்த கருத்துள்ள படங்களைக் கண்டு களிப்புற வழி ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் மேற்கூறிய செயலை எல்லோரும் ஏகோபித்து வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

"பம்பாய் தமிழன்", பம்பாய்-22.

நம சிறுவர்கள் அப் படத்தைக் காண அதிக அவாவிஞல் தூண்டப்படுகிருர்கள். பணத்தையே முக்கியமாகக் கருதும் தியேட்டர் முதலாளிகளோ விளம்பரப் படுத்தப்பட்டபடி கொட்டகைகளில் கட்டுப்பாடு ஏதும் செய்வதில்லை. ஆகையால், இத்தகைய ஆங்கில, ஹிந்திப் படங்களை அதிகமாக சிறுவர்கள் காண ஏதுவாகின்றது. இதஞல் சிறுவர்களின் ஒழுக்கமும் நடவடிக்கையும் கெடுகின்றன. சிறுவர்கள் முன்னேறுவதற்கான புதிய திட்டங்களை நிறுவிய அரசாங்கம் இதையும் கவனித்து அதற்கான வழியைச் செய்யுமென நினைக்கிறேன்.

கே. சுப்ரமண்யன், பண்டுருட்டி.

தாடியும், தாடியும் சந்திக்கும் இக் காட்சியை "சொர்க்க வாசல்" தமிழ்ப் படத்தில் நீர்கள் பார்த்திருக்கக் கூடும்.

பெரியவர்களுக்கு மட்டும்!

நம் நாட்டில் தினமும் சுமார் இருபது லக்ஷம் பேர்கள் சினிமாப் பார்க்கிருர்கள். அதில் சிறுவர்கள் குறைந்தது முப்பது சதவிகிதம் உள்ளனர். சென்னையிலும் பிற நகரங்களிலும், வெளிநாடுகளில் இருந்து வரும் பல ஆங்கிலப் படங்களில் 'பெரியவர்களுக்கெ'னத் தயாரிக்கும் படங்களும் "சீக்ரட்ஸ் ஆப் லைப்", "பர்த் ஆப் ஏ பேபி" போன்றவை தியேட்டர்களில் திரையிடப் படுகின்றன. கொட்டகை முதலாளிகள் படம் திரையிடப்படுமுன் துண்டுப் பிரசுரங்களிலும், 'பானர்'களிலும் **"பெரியவர்களுக்கு மட்டும்"** என விளம்பரப் படுத்தி **விடுகிருர்கள்.** இதைக் கண்ணுற்ற

சமரசம் வேண்டும்

அகில இந்திய வாஞெலியில் சினிமா இசைத் தட்டு ஒலி பரப்புவது குறைக்கப்பட்ட பின் இலங்கை வாஞெலிக்கு நல்ல மதிப்பு சினிமா ரஸிகர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. காரணம், இலங்கை வாஞெலியில் சினிமா இசைத் தட்டுகளை **போதிய அளவு** ஒலி பரப்புவதே, இலங்கையில மட்டு மல்லாமல் தென்னிந்தியாவிலேயே அனேகர் இசைத் தட்டு நிகழ்ச்சியை ஆவலோடு கேட்கிருர்கள். இப்போது சினிமா சங்கீதப் பிரியர்களுக்கு ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இலங்கை வாஞெலி, சென்னை பிலம் வர்த்தக சபைக்கு, ஒலி பரப்பப்படும் ஒவ்வொரு இசைத் தட்டுக்கும் ஒரு ரூபாய் வீதம் செலுத்தி வந்திருக்கிறது. ஆஞல், இலங்கை வாஞெலி வர்த்தக ஒலிபரப்பில் நல்ல வருமானம் வருவதால், இப்போது சென்னை பிலம் வர்த்தக சபை இலங்கை வாஞெலி வர்த்தக ஒலிபரப்பின் வரு

மானத்தில் அரைவாசியைத் தரும்படி கேட்கிறது. அப்படி வருமானத்தில் அரைப் பங்கைக் கொடுத்தால் இலங்கை வானெலிக்கு நஷ்டம் ஏற்படுமென்று மறுக்கின்றனர். இதனல் இலங்கை வானெலி சினிமா இசைத் தட்டுகளை நிறுத்தினலும் நிறுத்தலாம். பெரும்பாலோர் வர்த்தக ஒலிபரப்பைக் கேட்பது சினிமா இசைத் தட்டுகளுக்காகவே. ஆகவே, நிறுத்தினல் இலங்கை வானெலிக்குக் கட்டாயம் நஷ்டம் வரும். இலங்கை வானெலியும் சென்னை பிலிம் வர்த்தக சபையும் இருபாலாருக்கும் நன்மையுள்ள ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு ரஸிகர்கள் சினிமாசங்கீதம் கேட்க உதவவேண்டும்.

ஏ. தனபால், யாழ்ப்பாணம்.

ஜெமினி
ஹேர் ஆயில்

எல்லா ஊர்களிலும்
விற்பனை ஏஜண்டுகள் தேவை.
சித்தமணி கெமிகல் ஒர்க்ஸ்,
தியாகராய நகர் :: சென்னை—17

சொர்க்கவாசல் சிறப்பு

புரட்சிக் கவி பாடி, மக்களை வசீகரித்து அரசனுக்கு எதிரியாக விளங்கும் கவி மதிவாணன், மக்களை ஏமாற்றி அருள் சீட்டின் பெயரால் பணம் திரட்டும் மடாதிபதி, சலன புத்தியும் முன்கோபமும் நிறைந்த மன்னன், அவனல் கற்பழிக்கப்படும் கன்னி திலகா, காதலுக்ும் கடமைக்கும் இடையே உழலும் சோலைநாட்டு அரசி குமாரதேவி ஆகிய பாத்திரங்களைப் படைத்து புராணப் பெயரில் நாஸ்திகப் பிரசாரத்திற்கு நல்லதோர் பிரசங்க மேடை எனக் கருதி திரைக் கதை வசனம் எழுதிவிட்டார் அண்ணு, "சொர்க்கவாச"லுக்கு. ஆனல் படம் பரிமளிப்பதற்கு பதிலாக பரதவிக்கவேண்டி யிருக்கிறதே என்பதுதான் புதிராக உள்ளது. 'சொர்க்க வாசல்' என்ற பெயரைப் பார்த்து புராணமோ என நினைத்துப் போகிறவர்களும் ஏமாறவேண்டியதுதான்; 'அண்ணு'வின் பெயரைப் பார்த்து கழக சம்பந்தமாக ஏதாவது கேட்கலாம் எனக் கருதுகிறவர்களும் திகைக்க வேண்டியதுதான். புராணம், சமூகம், நாடோடிக் கதை எல்லாம் சேர்ந்த இந்தக் கதம்பம் ஸென்ஸாரின் கடாட்சம் வேறு பெற்று ஏதோ ஒரு தினுசாக வந்திருக்கிறது. ஏதோ ஒரு கோட்டையின் முகப்புப் போல ஓர் இடத்தில் காட்டுகிருர்கள் ; மடாதிபதி அமர்ந்திருக்கிருர். ஆனல், அங்கு கூடியிருக்கும் மக்களை எல்லாம் தன் கானத்தினல் கவர்ந்து விடுகிருன் மதிவாணன். 'சொர்க்க வாசல்' திறக்கப்படவேயில்லை. திறப்பதாகக் காட்டி யிருந்தாலாவது படத்தின் பெயருக்கும் படத்துக்கும் சம்பந்தமிருக்கும். (அதுவேறு திறப்பதாக காட்டினல் இன்னும் எவ்வளவு நேரம் படம் ஓடுமோ?) கதை மந்த நடை போடுவதால் 'ஜோர்' என்று சொல்வதற்குப் பதில் 'போர்' என்ற எண்ணமே ஏற்படுகிறது. "வேலைக்காரி", "ஓர் இரவு" முதலியவைகளில் கதைப் போக்கு விறுவிறுப்பாக இருந்ததாலேயே படங்கள் பல வாரங்கள் ஓடின. சிறந்த கதைகளை எழுதும் ஆற்றல் பெற்ற அண்ணு, ஏன் படங்களை பிரசங்க மேடைகளாக்க வேண்டும்? ஏன் புராணப் பெயர்

போட்டு பாமரர்களை ஏமாற்ற வேண்டும்?

கே. ரகுபதி, கும்பகோணம்.

காந்தீயம்

இப்பொழுது நம் நாட்டில் காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்பவர் மிகவும் குறைந்த அளவுதான். அவர்களும் எல்லா விஷயங்களிலும் காந்தீயத்தைக் கடைப் பிடித்து வாழ்கிறார்களா என்பது சந்தேகந்தான். மகாத்மா காந்தியின் கொள்கைகளை நம் நாட்டு மக்கள் அனைவரும் பின்பற்றி வாழவேண்டியது மிகவும் அவசியம். மகாத்மா காந்தியின் முக்கிய கொள்கைகளாகிய அஹிம்ஸை, தீண்டாமை ஒழிப்பு, கடவுள் பக்தி முதலியவைகளை மக்களின் மனதில் புகுத்த வேண்டியது மிகவும் அவசியம். மேடையேறி காந்தீயத்தைப் பற்றிப் பேசினால் போதாது. காந்தியக் கொள்கைகளை வற்புறுத்தும் செய்கைகளை மக்கள் கண்முன்னால் காட்ட வேண்டும். அது எப்படியென்றால், சினிமாப் படங்கள் எடுத்து சினிமாக் கொட்டகைகளில் செய்திப் படத்துடன் காண்பிக்க வேண்டும். இதில் சர்க்கார் அவசியம் கவனம் கொண்டு காந்தியக் கொள்கைகளை கிராம வாசிகளுக்கும் எடுத்துக் கூற வேண்டும். இதற்காக சர்க்காரிலேயே படங்கள் எடுத்து நகரங்களிலும் கிராமங்களிலும் சென்று, பொது இடங்களில் காண்பித்து, மக்கள் மனதை மாற்ற முயல வேண்டும். பிரபல சினிமா கம்பெனிக்காரர்கள் கூட இதில் அக்கறை கொண்டு, தங்கள் படங்கள் மூலம் இவைகளைப் பிரசாரம் செய்தால் மிகவும் திருப்திகரமாக விருக்கும். இப்பொழுது இருக்கும் சர்க்கார் அதிகாரிகள், மந்திரிகள் இவர்கள் உண்மையாகவே காந்தீயத்தில் பற்றுள்ளவர்களாக இருப்பார்களானால் அவர்கள் கட்டாயம் 'காந்தீயத்தைப் பிரசாரம் செய்யத் தகுந்த ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ரா. நாராயணன், சென்னை-13.

இருக்கிறதா?

படத் தணிக்கைக் குழு என்றொரு ஸ்தாபனம் நமது சென்னை மாகாணத்தில் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். எனக்கு என்னமோ நம்

பிக்கையில்லை. உண்மையில் அப்படி ஒரு ஸ்தாபனம் இருக்குமானால் "சொர்க்க வாசல்" போன்ற படங்களை அனுமதித்திருக்க மாட்டார்கள். ஆம்; "சொர்க்க வாசல்" படம் அவ்வளவு விஷமத்தனமானது. விரோதப் பிரசாரத்துக்கென்றே தயாரிக்கப்பட்ட மட்டரக வசை புராணக் கந்தல். படத்தில் சில பகுதிகள் தணிக்கைக் குழுவினரால் வெட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. நியாயமாகச் செய்திருந்தால் **படம் முழுவதையுமே தீக்கிரையாக்கி யிருக்க வேண்டும்.** மதத்திலுள்ள மாசுகளைப் போக்குவதை யாரும் தடுக்கமாட்டார்கள். ஆனால், அதைச் சாக்காக வைத்துக் கொண்டு நாத்திகப் பிரசாரம் நடப்பதையும் யாரும் அனுமதிக்க மாட்டார்கள். படம் பார்த்து விட்டு வருவோர் இந்த மதத் தலைவர்களே அரக்கர்கள் என்று நினைக்கிறார்களே தவிர, யாரோ சில போலி மத வாதிகள் செய்யும் தவறால் மதத்துக்கே கெட்ட பெயர் வருகிறது என்று நினைப்பதில்லை. அப்படியிருக்கிறது படத்தின் போக்கு. படத்திலே வரும் மதத் தலைவர் இந்து மதத் தலைவராகக் காட்டப்படுகிறார். இந்து மதத் தலைவர்கள் எங்காவது இதுவரை "அருள் சீட்டு" விற்றிருக்கிறார்களா? ஆங்கில சரித்திரத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு இந்து மதத்தை மாசுபடுத்துகிறார் கதாசிரியர். இதையெல்லாம் பார்க்கும்போது ஒரு யோசனை தோன்றுகிறது. அமெரிக்கா முதலிய நாடுகளில் நடப்பது போல படமெடுக்கும் முன்னரே படத்தின் முழுக் கதை வசனத்தை அரசாங்கத் தணிக்கைக் குழுவினரிடம் படப் பிடிப்பாளர் சமர்ப்பித்துவிட வேண்டும். தணிக்கைக் குழுவினர் ஒப்பம் கொடுத்த பிறகே படம் பிடிக்கப்பட வேண்டும். இப்படிச் செய்தால் படப் பிடிப்பாளர், தணிக்கையாளர் இருவருக்கும் நன்மை. பிடித்த படத்தைத் திரையிட முடியாது முதலாளி திண்டாட மாட்டார். தணிக்கையாளருக்கும் அநாவசியமான தலைவலி இல்லை.

வெ. ர. நாகராஜன், திருப்பத்தூர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண வேலைகளுக்கு (Ordinary) விலை ரூ. 6-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கிளை: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

ஆனந்தமாக ஏற்றுத் தாங்கிக் கொள்ளும் மன வலிவு வேண்டும். இப்பரந்த உலகில் தனித்து நிற்கும் உங்களின் வருங்காலப் பிராயணத்துக்கு இந்த மனவலிவு அவசியமாக வேண்டும், அம்மா."

வருங்காலமாம், வருங்காலம்! எனக்கு ஏது இனி வருங்காலம்! நர்ஸுக்கு என்ன? அவள் சாவுக்கும், துயர ஓலங்களுக்கும் மத்தியில் வாழ்நாளைக் கழித்து மனம் மரத்துப் போனவள். ஆகவே, 'துயரத்தைச் சந்தோஷமாக ஏற்க வேண்டும்' என்று எளிதாகப் போதனை செய்து விட்டாள்.

ஆனால் என் துயரை இந்த நர்ஸோ, டாக்டரோ எப்படி அறிவார்கள்? "என் பற்றுக் கோல்கள் பறிபோன பின்பு எனக்கு வாழ்வேது, மண்ணேது! நான் இப்பொழுது வேரற்ற மரம். தரையோடு தரையாய்ச் சாய்ந்து காய்ந்து கருகி, விறகாக எரிபட்டுப் போக வேண்டியவள். ஐயோ! தெய்வமே, கண்களைத் தந்துவிட்டு என் கப்பறையைப் பறித்துக் கொண்டு விட்டாயே. உன்னிடம் கண்கள் வேண்டுமென்று எப்பொழுதாவது யாசித்தேனா? ஊனக் கண்களை விட அந்த உள்ளக் கண்களையல்லவா நான் பெரிதாக நம்பியிருந்தேன். எத்தகைய கொடுமையை எனக்கு இழைத்துவிட்டாய், ஆண்டவனே."

நான் புலம்பி அழுதேன்; உள்ளம் விம்ம, உடல் துடிக்க உருண்டு, புரண்டு கதறினேன்.

டாக்டர் விசனம் தேங்கும் முகத்துடன் என்னையே நோக்கிக் கொண்டு வெகு நேரம் நின்றார். கடைசியில் அவர் சொன்னார்: "உங்கள் நிலை மிகவும் பரிதாபகரமானது அம்மா; இருந்தாலும், இப்பொழுது நான் செய்யக் கூடிய பரிகாரம் ஒன்றே ஒன்றுதான். இந்த ஊரில் பல சேவாசதனங்களும், விதவா ஆசிரமங்களும் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் தருகிறேன். அங்கே போங்கள். அபலைகளுக்கு உதவுவதையே நோக்க

சென்னை-600
13414.9

மாகக் கொண்ட அந்த ஆசிரம நிர் வாகிகள் உங்களைத் தயங்காமல் ஏற்றுக் காப்பாற்றி வருவார்கள்.

"வேண்டாம், டாக்டர்; அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்று வீரிட்டேன் நான். ஆம்; நான் முடிவை எட்டிவிட்டேன். கணவரில்லை; குழந்தையுமில்லை; சுற்றமில்லை; சுகமில்லை. இவ்வளவும் இன்றி எனக்கு என்ன வாழ்வு வேண்டிக் கிடக்கிறது. யாருக்காக, எந்தக் காரியத்தைச் சாதிப்பதற்காக, கண்டவர்களை அண்டி நான் வாழவேண்டும்? வேண்டவே வேண்டாம், அந்தச் சுவையற்ற வாழ்க்கை. என் கணவரையும், கண்மணியையும் காவு வாங்கிக் கொண்ட கடலின் அடிவயிற்றிலே நானும் கலந்துவிடுகிறேன்!

ஆனால், இந்த முடிவை நான் அவர்களிடம் சொல்ல முடியுமா? ஆகவே, வேறு ஏதேனும் வேலை தேடிப் பிழைத்துக் கொள்வதாகக் கூறிவிட்டு, டாக்டருக்கும் நர்ஸுக்கும் என் நன்றியைத் தெரிவித்து விட்டு, ஆஸ்பத்திரிக் கட்டடத்தை விட்டு வெளியேறி நடந்தேன்.

பரபரப்பு மிகுந்த பம்பாய் நகர வீதிகளிலே கால்போன போக்கில் நடந்தேன். உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. தார் ரோடு காலைத் தகித்தது. எந்தப் பம்பாயின் வனப்பைக் கண்களால் காண முடியாவிட்டாலும், வாழ்ந்தாவது அநுபவித்து விடவேண்டுமென்று கிளம்பி வந்தேனோ அதே பம்பாயில் இப்பொழுது இருந்தேன். காணக் கண்களும் இருந்தன. ஆனால் நான் வாழ விரும்பாமல் சாக விரைகிறேன். 'மனிதர்கள் எண்ணக் கோடுகளால் வண்ணச் சித்திரங்களை வரைகிறார்கள்; விதி அரக்கன் அதன் மீது மண்ணைத் தூவி அழித்து விடுகிறான்' என்பதுதான் எத்தனை உண்மை!

நான் நடந்தேன்; நடந்தேன்; நடந்துகொண்டேயிருந்தேன். திசை தெரியாத ஊரில் விசை தளராது நடந்தேன். என் கால்கள் நோகவில்லை; கண்கள் பஞ்சடையவுமில்லை. நெஞ்சம் தவிக்கவில்லை. நடந்து கொண்டேயிருந்தேன்.

கொதித்த சூரியன் குளிர்ந்து வந்தான். தகித்த வெயில் தணிந்து வந்தது. பாலொளி போல் எங்கும் பொன்னொளி மின்னிற்று. அது செந்நிறமாக மாறிய பிறகு ஒரு நாற்சந்தி முனையில் சற்றே நின்றேன். ஆமாம்; இதுவரையில் லட்சியமின்றி நடந்தேன். இனிமேல் லட்சியத்தோடு நடக்க வேண்டும். என் முடிவுக்கு நேரம் நெருங்கி விட்டதல்லவா?

என்னை இரை கொள்ளப் போகும் கடல் எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமே! நான் பகலில் ஒருவரையாவது 'கடலுக்கு எப்படிப் போகவேண்டும்?' என்று கேட்டால் சந்தேகப்பட்டு விடுவார்களோ என்று, நானே அதைத் தேடிக் கண்டுபிடித்துவிடப் பகல் முழுவதும் சுற்றி அடித்தேன். ஆனால், பாலன்னத்தைப் பிசைந்தெடுத்துக் கொண்டு ஊட்ட வரும் அன்னைக்குக் குழந்தை ஒளிந்து வேடிக்கை காட்டுவது போல, அந்தக் கடல் என் கண்களுக்கு அகப்படாமல் ஒளிந்து கொண்டது. இப்பொழுது மாலையாகிவிட்டது. எல்லோரும் காற்று வாங்கக் கடற்கரைக்குச் செல்லும் நேரம். ஆகவே, நான் கடலுக்கு வழி கேட்டால் எவரும் சந்தேகிக்க மாட்டார்கள். இந்தத் தைரியத்தோடு என் எதிரே வந்த வயதான அம்மாள் ஒருத்தியிடம் "கடற்கரைக்கு எப்படிப் போகவேண்டும், அம்மா?" என்று கேட்டேன்.

அந்த அம்மாள் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "நீ இந்த ஊருக்குப் புதியவளா?" என்று கேட்டார்கள்.

"ஆமாம்."

"அதுதானே பார்த்தேன். எந்த ஊர்க்காரி நீ?"

'இந்த விவரமெல்லாம் இவர்களுக்கு எதற்கு?' என்று தோன்றிய போதிலும், "எனக்குக் கொங்கணம்" என்று விடை பகர்ந்தேன்.

"கொங்கணத்தில் எங்கே?" என்று மேலும் கேள்வி போட்டார்கள்.

"கொங்கணத்தில் சாலியம் என்றொரு கிராமம் இருக்கிறது. அதுதான் என் ஊர்."

அந்த அம்மாளின் முகத்தில் ஆச்சரியம் தோன்றிற்று. "சாலியத்துக்காரியா நீ? அப்படியானால், உனக்கு அவ்வூர் கங்கா மாயியைத் தெரிந்திருக்குமே!"

கங்கா மாயி!

நான் திகைப்புற்று, "எந்த கங்கா மாயியைக் கேட்கிறீர்கள் அம்மா;

நாடுவது ஏன்?
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
நாட்டிலே நற்பெயர்பெற்று நிலவுகிறது
தபால் பெட்டி 1151 சென்னை - 21.
REGISTERED TRADE MARK
S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

அவ்வூரில் அப்பெயருடன் நாலைந்து பேர்கள் இருக்கிறார்கள்'' என்றேன்.

"அவள் தாண்டி, அம்மா; அந்த கங்காமாயி என்பவளுக்கு நர்மதா என்று ஒரு குருட்டுப் பெண்கூட உண்டு. அவளுடைய கணவன்....''

"அம்மா, நீங்கள் ஹரிமாயியா?'' என்று மறு நிமிஷம் வீறிட்டேன் நான்.

"ஆமாம்; நீ யார்?''

"நான் தான் அந்தத் துடைகாலி நர்மதா, மாயி'' என்று அவர்கள் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதேன்.

அவர்கள் என் தலையை நிமிர்த்தி முகத்தைக் கூர்ந்து கவனித்தார்கள். பிறகு வியப்பொலிக்க, "நர்மதா கண்ணற்றவள் என்று ரங்காராம் சொன்னானே!'' என்றாள்.

"ஆமாம் மாயி; இந்தப் பாவி கண்களை அடைவதற்காகக் கணவரையும் மகனையும் கடலுக்குக் கொடுத்து விட்டேன்'' என்று தொடங்கி நாங்கள் ஊரை விட்டுப் புறப்பட்டது முதல் நடந்தது அனைத்தையும் கூறினேன்.

மாயி அதைக் கேட்டு வெகு நேரம் பிரமை பிடித்து நின்றார்கள். பிறகு என்னை அன்புடன் அணைத்துக் கொண்டு, "அந்த மட்டும் உன்னையாவது கடவுள் க்ஷேமமாக என்னிடம் கொண்டு சேர்த்தாரே'' என்றாள்.

"இல்லை மாயி, அவர் என்னை உங்களிடம் கொண்டு சேர்த்துவிட வில்லை. முகம் காணாத என்னிடம் நீங்கள் கொண்டிருந்த அழியாத அன்புக்கு நன்றி செலுத்தி விடைபெற்றுக் கொள்ள நடுவழியில் உங்களைச் சந்திக்கச் செய்திருக்கிறார், அவ்வளவுதான்.''

"அப்படியானால், நீ ஊருக்குத் திரும்பிவிடப் போகிறாயா? ஆனால் அங்கே யார் இருக்கிறார்கள் உனக்கு? உன் அண்ணாதான்........''

"அண்ணா எங்கள் வரையில் இறந்து போய்ப் பல வருஷங்களாகி விட்டன மாயி; மேலும், நான் இப்பொழுது ஊருக்குப் போகவும் விரும்பவில்லை. நான் செய்ய நினைத்திருப்பது என் இறுதி யாத்திரை. எந்தக் கடல் அவரையும் திவாகரனையும் தன் உணவாக்கிக் கொண்டதோ, அந்தக் கடலின் வயிற்றையே நானும் நிரப்ப....''

மாயி என் வாயைப் பொத்தி, "என்ன? என்ன சொன்னாய்?'' என்று அதட்டினார்கள்.

"ஆமாம், மாயி; அவர்கள் இல்லாத வாழ்வு எனக்கு எதற்கு?''

"ஆனால் உனக்குத் தாய் ஒருத்தி இருக்கிறாள் என்பதை மறந்து விட்டாயே!''

"இல்லை, மாயி; உங்களுக்குத் தெரியாதா, என் கணவர் சாவியத்துக்கு வந்த அன்றே என் தாய் விடைபெற்றுக் கொண்டு விட்டாள்.''

"அவளைச் சொல்லவில்லை, குழந்தாய். அவள் உன்னைப் பெற்ற தாய்; ஆனால் பெறாமல் தாயாக விரும்பும் நான் இருக்கையில்....''

"மாயி!''

"சொல். வாய் குளிர 'மாயி-மாயி' என்று இன்னும் பல தடவை என்னை அழை. நர்மதா, என் குழந்தாய், அந்தச் சொல்லை இந்தப் பாவி கேட்டு எத்தனை காலமாகி விட்டது. என் கதையை உன் கணவன் உனக்குச் சொல்லியிருப்பானே.''

"ஆமாம் மாயி, சொன்னார்கள். என் வயசில் உங்களுக்கு ஒரு மகள் இருந்தாள் என்றும் அவள் அகால மரணம் அடைந்து விட்டாள் என்றும் சொன்னார்கள்.''

"இல்லை! அது தவறு. என் மகள் சாகவில்லை. அவள் புத்துயிர் பெற்று இன்று இதோ என்னிடம் திரும்பி வந்து விட்டாள். குழந்தாய் நர்மதா, இந்தக் கிழவி உன்னையும் உன் குடும்பத்தையும் என்னுடைய தாக்கிக் கொண்டு, என் மகளை உன்னில் கண்டு, உங்களோடு எப்படி எப்படி யெல்லாமோ ஆனந்தமாக வாழ வேண்டும் என்று மனோராஜ்யமிட்டுக் கொண்டிருந்தேன். அக்கனவில் பாதி இப்போது சிதைந்து விட்டது. இருந்தாலும் மற்றொரு பாதியாகிய உன்னை தெய்வச் செயலாகக் கண்டு கொண்டேன். இனி இந்தக் கிழட்டுப் பிராணன் கூண்டை விட்டுப் பிரியும் வரையில் உன்னை விட்டுப் பிரியாது.

"அடடா, கண்ணே, உணர்ச்சி மிகுதியால் உன்னை நடுத் தெருவில் நிறுத்திப் பேசிக் கொண்டிருக்கிறேனே; வா, நம் வீட்டுக்குப் போவோம்.''

ஹரி மாயி என் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள். அந்த அன்புப் பிடியை அறுத்துக் கொண்டு

செல்ல எனக்குத் துணிவு பிறக்கவில்லை. வளர்ப்பவரின் கையிலிருக்கும் பசுந் தழையைப் பின்பற்றிச் செல்லும் ஆட்டுக் குட்டியைப் போல, அந்த அன்னையைப் பின்பற்றிச் சென்றேன் நான்.

* * *

வாழ்வில் இன்ப நினைவுகள் சீக்கிரம் தேய்ந்து விடுகின்றன. ஆனால் துன்ப நினைவுகள் மாத்திரம் வைரம் பாய்ந்த மரத்தைப்போல எத்தனை அராவினாலும் தேய்வதில்லை.

கணவரையும், குழந்தையையும் இழந்து ஹரி மாயியின் ஆதீனத்தில் வந்து வேடிக்கைபோல ஒரு வருஷம் சென்று விட்டது. ஆனால் நாட்கள் தாம் தேய்ந்தனவேயன்றி, என்னுடையவர்களைப் பிரிந்த துயரம் துளிக்கூட என் மனசிலிருந்து அழியவில்லை. மாயியின் மனம் நோகலாகாதேயென்று அவர்கள் முன்பு கவலையின்றி வாழ்பவள் போலக் காட்டிக்கொண்டேன். ஆயின் என் அகத்தில் ஓர் எரிமலை குமுறிக் கொண்டேயிருந்தது.

ஹரி மாயி வசித்து வந்த இடம் ஏழை மக்கள் வாழ்ந்துவந்த நகரத்தின் பகுதி. ஆகவே அங்கே குழந்தைகளுக்குப் பஞ்சமேயில்லை. தெருவில் ஓடி விளையாடும் சின்னஞ்சிறு பாலகர்களைப் பார்க்குந்தோறும் என் நெஞ்சம் குமுறி எழும். 'என் திவாகரன் உயிரோடிருந்தால்........?' என்ற ஜுவாலை அதனின்று கிளம்பி கொழுந்து விட்டு எரியும். எத்தனை முயன்றும் என்னால் அந்தக் குழந்தை ஆசையைப் போக்க முடியவில்லை.

பகல் நேரத்தில் மாயி வீட்டில் இல்லாதிருந்தது எனக்குச் சவுகரியமாக இருந்தது. ஆமாம்; என்னை ஏற்றுக் கொண்டதன் பொருட்டு, அந்த மூதாட்டி தமது வாழ்வையே திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. என்று அவர்கள் வீட்டில் நான் அடி வைத்தேனோ, அன்றே தமக்குப் பிழைப்பளித்து வந்த காலேஜ் பையன்களை வேறிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டார்கள். 'வயசுப் பெண் வசிக்கும் வீட்டில் வாலிபப் பிரம்மச்சாரிகள் வாழக் கூடாதாம்'. ஆனால் பிழைப்பு நடந்தாக வேண்டுமே! அதற்காக மாயி யாரோ ஒரு பணக்காரர் வீட்டில் சமையல் வேலையை ஏற்றுக்

நீண்டு பெருகும் கூந்தலுக்கு
கேசவர்த்தினி
ஒன்றே

கேசவர்த்தினி

கொண்டு சுண்டைத் தீருங்கள். இனி கூந்தல் உதிர வேண்டாம். தலை அரிப்பும் இனி வேண்டாம். அகால நரை தாமதிக்கட்டும். நரைக்கு என்ன அவசரம்?

வாடின கூந்தல்
கேசவர்த்
தினியின்
உதவியால்,
புது அழகுடன்
திகழட்டும்.
பளபளப்பான
புதுக் கூந்தல்
பெருகட்டும்.

ஷாம்புவினால் தலை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆகட்டும்.

கேசவர்த்தினி அணா 14; ஷாம்பு அணா 14; தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
கோயமுத்தூர்.

கொண்டார்கள். அந்தத் தள்ளாத வயதில் அதிகாலையில் எழுந்து சென்று இரவு வரையிலும் உழைத்து விட்டு ஓடாய்த் திரும்பும் அவர்களைக் காண என் மனம் மிகவும் வேதனையுற்றது.

"இந்த வயதில் நீங்கள் இப்படி உழைப்பது; நான் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதா? எனக்கும் ஏதாவது வேலை தேடிக் கொடுங்கள், மாமி" என்று ஒரு நாள் அவர்களிடம் சொன்னேன்.

"பூசை செய்வது பூசாரியின் கடமை நர்மதா; தெய்வம் தனக்குத் தானே பூசை செய்து கொள்ளலாகாது."

"உண்மைதான் மாமி; ஆனால் நீங்கள் செய்வது தலைகீழ்ப் பாடமாயிருக்கிறதே! நீங்களல்லவா நான் வழிபடும் தெய்வம்."

"இல்லை என் கண்ணே; குழந்தை தான் தாய்க்குத் தெய்வம். அது சங்கடப்பட அவள் மனம் சகிக்காது."

"ஆனால், நீங்கள் கஷ்டப்படுவதைப் பார்க்கவல்லவோ என் மனம் சங்கடப்படுகிறது."

"நர்மதா, என் குழந்தாய்; உன் மனத்தை இதைவிடப் பெரிய சங்கடம் வாட்டி வருவதை நான் அறிவேன். அதைப் பூர்த்தி செய்யத்தான் நான் முயன்று வருகிறேன். அது வரையில் பொறுத்துக்கொள். கண்ணே, ஆண்டவன் வழி விடுவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

எத்தனை மன்றாடியும் மாமி என்னை அச்சமயம் வேலை தேடிக் கொள்ள அனுமதிக்கவில்லை. "நான் கிழவி; எங்கே வேண்டுமானாலும் போய், எப்படி, யாரிடம் வேண்டுமானாலும் தைரியமாகப் பாடுபடலாம். ஆனால் நீ யுவதி. யஜமானர்கள் எல்லோர் கண்களும் ஒன்றுபோல இராது" என்ற இறுதி அஸ்திரத்தைப் பிரயோகித்து என்னை வீட்டிலே கட்டிப் போட்டு விட்டார்கள்.

ஆனால் இந்தக் கட்டுப்பாடு என் மனக்கட்டை அவிழ்த்து விட்டு விட்டதே! எப்பொழுதும் ஒரே திவாகர ஏக்கம் என்னை வாட்ட ஆரம்பித்து விட்டதே! கண் எதிரே எண்ணற்ற குழந்தைகள்-என் திவாகரனைப்போல. வீட்டிலோ மாமி கூட இல்லை-என் குழந்தை ஏக்கத்தைப் புரிந்துகொள்ள. சூழ்நிலை சரியாக அமைந்தால், இரும்பும் காந்தமும் ஒன்றுபடக் கேட்கவா வேண்டும்? தெருக் குழந்தைகளின் விளையாட்டு ஸ்தலம் என் வீடாயிற்று. அக்குழந்தைகளுடன் நானும் ஒரு குழந்தையாக மாறி விட்டேன்!

இந்தச் சமயத்தில் தான் அந்த எதிர் பாராத பேறு எனக்குக் கிடைத்தது. வரண்ட பாலையின் மத்தியில் அபூர்வமாகத் தென்படும் நீர் நிலையைப்போல, குழந்தைத் தாகம் பிடித்து அலைந்த எனக்கு ஓர் நீர் நிலை கிடைத்தது.

அன்று காலையில் என் மனசை நோகச் செய்யும் சம்பவம் ஒன்று நடந்து விட்டது. என்னுடைய குழந்தைக் கூட்டாளிகளில் பிரபாகரன் என்றொரு சிறுவன் உண்டு. கொள்ளை அழகான குழந்தை அவன். ஒரு நாள் அவனை அள்ளி முத்தமிட்டுக் கொள்ளாமல் இருந்துவிட்டால், எனக்கு எதையோ இழந்து விட்டது போலிருக்கும். அன்று காலையில் அவன் என்னோடு விளையாட வந்தவன் பிற்பகல் உணவு அருந்த எதிர் சாரியிலிருந்த தன் வீட்டுக்குத் திரும்பினான். வராந்தாவில் நின்று நான் அவனுக்கு "டாட்டா" காட்டிக் கொண்டிருந்தேன். குழந்தையும் என்னைத் திரும்பிப் பார்த்து தன் குஞ்சுக் கரத்தை உயர்த்தி ஆட்டிக் கொண்டு ஓடினான். என்னை அவனும், அவனை நானும் நோக்கிக் கொண்டிருந்த நிலையில் இருவருமே ரஸ்தாவை மறந்துவிட்டோம். வெகு வேகமாக வந்த சைக்கிள் ஓட்டி ஒருவன் கண நேரத்தில் குழந்தையை மோதித் தள்ளிவிட்டான். காயம் ஒன்றும் பலமாகப் படவில்லை. இருந்தாலும் குழந்தை அந்த அதிர்ச்சியால் மூர்ச்சையாகி விட்டான். நான் ஒரு எட்டில் ஓடிச் சென்று அவனைத் தூக்கிக் கொண்டேன். இதற்குள் தெருவில் கூட்டம் கூடிவிட்டது. பெற்றவள் அலறிக் கொண்டு ஓடி வந்தாள். என்னிடமிருந்த குழந்தையை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு அவள் சொன்ன சொற்கள்; 'உன் குழந்தையாக இருந்தால் இப்படி வாகனங்கள் நெறிபடும் ரஸ்தாவில் ஓடவிட்டு வேடிக்கை பார்த்திருப்பாயா?'

பிழை முற்றிலும் என்னுடையதில்லை தான். இருந்தாலும், என்னை நாடி அக் குழந்தை வந்திரா விட்டால், அவ

னுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா? "உன் குழந்தையாக இருந்தால்........" என்ற அவளுடைய வார்த்தைகள் என்னைச் சுட்டன. "கண்ணே திவாகரா, நீ உயிரோடு இருந்தால், உன்னை வளர்த்துப் பழகக்கப்பட்டிருந்தால், இன்று இந்தப் பழிச் சொல்லைக் கேட்க நேர்ந்திருக்குமா?"

மனம் ஒடிந்து வீடு திரும்பி, கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பி அழுது கொண்டிருந்தேன். எத்தனை நேரம் அவ்வாறு இருந்தேனோ, தெரியாது; "நர்மதா!" என்ற ஹரிமாயியின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

ஆனாலும், முகம் மனசைப் பிரதிபலிக்கும் கண்ணாடியல்லவா? அது என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. "அழுதாயா கண்ணு?" என்று கேட்டுக் கொண்டு என் அருகில் வந்து அமர்ந்தார்கள் ஹரிமாயி.

"எனக்கு ஏதாவது ஒரு குழந்தையைக் கொடுங்கள் மாயி; என்னால் இந்தத் தனிமையைத் தாங்கமுடியவில்லை" என்று அன்றுவரை அவளுக்கு மறைத்து வந்த மனத்துயரை அவிழ்த்துக் கொட்டி அழுதேன்.

"வா, தருகிறேன்" என்றார்கள் மாயி, மறு நிமிஷம்.

"மாயி!" நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தேன்.

மாயி மெல்லிய நகையுடன் சொன்னார்கள்: "தாய் அறியாத சூல் கிடையாது நர்மதா; உன் மனத் துயரை நான் என்றோ அறிந்து கொண்டு அதற்கு மாற்றுத் தேட முயன்றுகொண்டிருந்தேன். இன்றுதான் கடவுள் அதற்கு ஒரு வழி வகுத்துக் கொடுத்தார். குழந்தாய், உனக்குக் கிளிபோன்ற ஒரு வயதுக் குழந்தை ஒன்றை வளர்க்கும் வேலையைத் தேடி வந்திருக்கிறேன். நான் சமையல் வேலை செய்துவரும் கனவானின் நண்பர் பிரபாகர் கோட்ஸே என்பவர். பெரிய தனவான் அவர். ஆனால், குழந்தை-குட்டிகள் கிடையாது. சென்ற வருஷத்தில் பச்சைக் குழந்தை ஒன்றைச் சொந்த ஊரிலிருந்து ஸ்வீகாரம் பெற்று வந்து, குழந்தைக்கு ஏங்கிய தம் மனைவியிடம் கொடுத்து வளர்க்கச் செய்து வந்தார். ஆனால், அந்த அம்மாளுக்கு அப்பாக்கியம் நெடுநாள் கொடுத்து வைக்கவில்லை. சென்ற மாதம் மாரடைப்பால் அவள் திடீரென்று இறந்துவிட்டாள். கோட்ஸேயின் ஸ்வீகாரப் புதல்வனை அவருடைய வீடடோடிருந்து வளர்க்கும் வேலைதான் உனக்கு நான் தேடி வந்திருப்பது. இதனால் என் சுயநலம் சிறிது பாதிக்கப்படுகிறது. ஆமாம்; இனி நீ என் அதிதியில்லை. இருந்தாலும், உள்ளூரிலே இருப்பதால் உன்னை வந்து பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியமும், அதிலும் மேலாக, உன் மனச்சஞ்சலம் எப்படியாவது தீரவேண்டும் என்ற நோக்குமுமே, உன் அனுமதியின்றியே இவ்வேலையை உனக்குத் தேடித்தரும் உரிமையை எனக்குத் தந்தன. கண்ணே, கோட்ஸே உன்னை, இன்றே, உடனே வேலைக்கு அழைத்து வந்துவிட வேண்டுமென்று கூறியதால்தான், நான் இந்த நடுப்பகலில் இங்கே ஓடி வந்தேன். நான் வந்ததும், நீ உன் கோரிக்கையை வெளியிட்டதும் எவ்வளவு ஒத்துப் போய்விட்டன, பார்த்தாயா?"

"நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்ற முதுமொழிதான் இதைக் கேட்டதும் என் நினைவுக்கு வந்தது. அது மாத்திரமா? அவர்களுடைய அழியா அன்பு ஆத்மார்த்தமானது என்பதற்கு அத்தாட்சியாக இந்த ஏற்பாட்டில் வேறொரு விசித்திரமும் இணைந்திருந்தது. அது என்ன தெரியுமா? நான் எந்தக் குழந்தையை வளர்க்கச் சென்றேனோ அவன் பெயரும் **திவாகரன் தான்!** (தொடரும்)

நடிகர்கள் கைது

பாகிஸ்தான் சினிமா படத் தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள், நடிகர்கள் உள்பட சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட 50 பேரை பாகிஸ்தான் பஞ்சாப் போலீஸார் சென்ற மாதம் 9-ம் தேதி கைது செய்தனர். இந்திய படம் ஒன்றை திரையிடுவதை எதிர்த்து அவர்கள் ஆர்பாட்டம் செய்ததை தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்திய சினிமா படத்தை பகிஷ்கரிக்கும்படி சினிமா கொட்டகைகளுக்கு முன்னால் அவர்கள் ஆர்பாட்டம் செய்தார்கள்.

இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை
காஸினோ
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தமிழ் நாடெங்கும்
பக்ஷிராஜாவின்
மலைக்கள்ளன்
கதை: நாமக்கல் கவிஞர் வசனம்: மு. கருணாநிதி
டைரக்ஷன்: S. M. ஸ்ரீராமுலு நாயுடு
தினசரி 3 காட்சிகள்
2.30. 6. 9.30 மணிக்கு
ரிஸர்வேஷன் இப்பொழுது நடைபெறுகிறது
BHARAT STUDIO

கோமளா நடனத்துக்கு அபார வரவேற்பு

அழகி வனஜா அளித்த பரபரப்பு!

தியேட்டர்களில் 'க்யூ'வரிசை ஒழிந்தது

சிறந்த படங்களுக்குப் பரிசு

சென்னையிலிருந்து சமீபத்தில் சிங்கப்பூருக்கு வந்திருந்த **குமாரி கோமளாவின்** நடனத்தைப் பற்றி சென்ற இதழில் குறிப்பிட்டிருந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். அவரது நடனக் கச்சேரிகள் இங்கு அபார வெற்றியைக் கொடுத்தன. கதம்ப நிகழ்ச்சிகளையே ரஸித்து அனுபவப்பட்ட சிங்கப்பூர் வாசிகள், இலகுவில் புரிந்து கொள்ள முடியாத சாஸ்திரீய நடனத்தை இரண்டரை மணி நேரம் பொறுமையுடன் இருந்து ரசிப்பார்களா? ஒரே நடனமணியைக் கொண்டு அவ்வளவு நேரம் ஆட்டுவிக்க முடியுமா? ஆதரவு கிடைக்குமா? என்றெல்லாம் ஆரம்பத்தில் சந்தேகப் பட்டுக் கொண்டு, மனதைக் குழப்பிக் கொண்டிருந்த நிர்வாகிகள், இறுதியில் சிங்கப்பூர் மக்கள் அளித்த வரவேற்பைக் கண்டு பூரித்துப் போனார்கள்.

இரு தினங்களும் குமாரி கோமளாவின் நடனத்துக்கு டிக்கெட் கிடைக்காமல் எண்ணற்றோர் வீடு திரும்பிச் சென்றதைக் கண்ட நிர்வாகிகள், மூன்றுவது முறையாக (ஜூலை 7-ந் தேதி) மீண்டும் ஏற்பாடு செய்து அவர்களைத் திருப்தி செய்தனர்.

அன்றைய தினம் கச்சேரிக்கு வந்திருந்த மலாயாவிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி கோபால மேனன், குமாரி கோமளாவின் நடனத்தை வெகுவாகப் பாராட்டி, இந்தியாவுக்கும் மலாயாவுக்கும் உள்ள கலாசார பந்தத்தைப் பிணைக்க குமாரி கோமளாவைப்போன்ற கலைஞர்களை விடச் சிறந்த தூதர்கள் வேறு இல்லை என்று குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் மக்களின் ரஸனையை உணர்ந்தோ என்னவோ, அன்று இடை நேரத்திற்குப் பின்னர், பாரதியார் பாடல்களுக்கு அழகாக அபிநயம் பிடித்து 'அப்ளாஸ்' பெற்றார் குமாரி கோமளா.

சிங்கப்பூரில் கோமளாவின் நடனத்திற்குக் கிடைத்த வெற்றியைக் கேள்வியுற்று, தாங்களும் காண வேண்டுமென்று தவித்த கோலாலம்பூர் வாசிகளின் விருப்பத்தை யறிந்து, இந்தியப் பட்டதாரிகள் சங்கம் புத்திசாலித்தனமாக ஏற்பாடு செய்து, கோமளா மூலம் தங்களுக்கும் கிடைத்த பாராட்டுதவில் திணறிப் போயினர்.

ஜோகூர்பாருவிலும் கோமளாவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. இதில் வசூலான நிதி முழுவதும் நலனபிவிருத்தி இலாகாவுக்கு அளிக்கப்பட்டது.

கோமளாவை இத்துடன் விடவில்லை. சிங்கப்பூரிலுள்ள பல மாதர்கள் ஒன்று சேர்ந்து அவருக்கு ஸ்ரீமதி நரசிம்மன் இல்லத்தில் தடபுடலாக ஒரு பெரிய விருந்து உபசரிப்பு நடத்தினர்.

குமாரி கோமளாவின் நடனத்துக்குப் பின்னணி இசைக்க சென்னையிலிருந்து வந்திருந்த குமாரி கே. ஜே. சரசாவையும் விட்டுவைக்க வில்லை; சிங்கப்பூர் யுத்த ஞாபகார்த்த மண்டபத்தில் அவரைக் கொண்டு ஒரு சங்கீதக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. கச்சேரி வெகு சுகமாக இருந்தது. வயலின் இசைத்த பி. சாரங்கபாணியும், சென்னையிலிருந்து வந்திருந்த மிருதங்க வித்வான் என். கோதண்டராமனும் கச்சேரிக்கு வெகு அனுசரணையாக வாசித்து சிறப்பித்தனர்.

நுண்கலை சங்கத்திற்குப் பாராட்டு

சிங்கப்பூரில் சிறந்த முறையில் கலா சேவை செய்து வரும் இந்திய நுண்கலை சங்கத்தின் போஷகரும், மலாயாவி

மலேயாவில் சமீபத்தில் நடந்த அழகிகள் போட்டியில் கலந்து கொண்ட அழகிகள். (மூன்றாவதாக நிற்பவர் வனஜா)

லுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதியுமான கோபால மேனன் தமது பதவி காலம் முடிந்து தாயகம் திரும்புவதை முன்னிட்டு, சென்ற மாதம் 14ம் தேதி இந்தியர் சங்கத்தில் நுண்கலை சங்க அங்கத்தினர்கள் ஒரு பிரிவு உபசார விருந்தை நடத்தினார்கள்.

மலாயாவில் இந்தியக் கலை வளர்ச்சிக்கு மேற்படி சங்கம் செய்து வந்திருக்கும் சேவையை மேனன் பாராட்டி, தொடர்ந்து அவ்வாறு சேவை செய்து வரும்படி ஆசி கூறினார். சங்கத் தலைவர் நரசிம்ஹன் (இந்தியன் பாங்க் மானேஜர்) நன்றி கூறினார்.

மலாயா 'அழகி' வனஜா

வருஷா வருஷம் மலாயாவில் அழகிப் போட்டி நடைபெற்றாலும் இந்த வருஷ அழகிப் போட்டி இந்தியர் வட்டாரத்தில் ஒரு விசேஷ பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்குக் காரணம், கோலாலம்பூரில் நடைபெற்ற பெடரேஷன் அழகித் தேர்தலில் கலந்து கொண்ட சுமார் 50 அழகிகளில், ஒரே ஒரு இந்தியப் பெண்ணான **குமாரி வனஜா** சிறந்த அழகியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டதுதான்!

பெரும்பாலும் ஆங்கிலோ-ஐரோப்பியப் பெண்களும், சீனப் பெண்களுமே கலந்து கொண்ட இந்தப் போட்டியில் குமாரி வனஜா வெற்றி பெற்றதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இவ்வருஷ ஆரம்பத்தில் 'மாக்ஸ் பாக்டர்' நடத்திய அழகிப் போட்டியில் சிறந்த அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிஸ் வயலெட் என்பவர் இந்தப் போட்டியிலும் தான்தான் முதலாவதாக வருவோம் என்ற முழு நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால், தான் இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிந்ததும் அங்கேயே மயக்கம் போட்டு விழுந்து விட்டார்!

கவர்ச்சியான தோற்றமும் 18 வயதும் நிறைந்து விளங்கும் குமாரி வனஜா உண்மையிலேயே ஒரு 'அழகி' தான்! அவருடைய தகப்பனார் மாதவன் தெலுக்கான்சனில் சானிடரி இன்ஸ்பெக்டர். வனஜா பள்ளியில்

படித்து வருகிருர். அப்பள்ளியில் 800 பையனகளுக்கு மத்தியில் ஒரு சினப் பெண்ணும் அவரும்—ஆக இரண்டே பேர்தான் பெண்கள். 'பெடரேஷன் அழகி'யாக அவர் மறுநாள் பள்ளிக்குச் சென்றதும் பள்ளிப் பையன்கள் அவரைப் பார்த்து சீட்டியடித்து ஒரே ரகளை பண்ணி விட்டனராம்.

'மலாயா அழகி' (இறுதிப்) போட்டிக்கு கோலாலம்பூரிலிருந்து அவர் சிங்கப்பூர் வந்த பொழுது விமான நிலையத்தில் சிங்கப்பூர் இந்தியர்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர். நிருபர்கள் அவரை அணுகி, 'நீங்கள் உங்கள் தேசிய உடைக்குப் பதில் 'நீச்சல் உடை'யில் தான் இறுதிப் போட்டியில் தோன்ற வேண்டும்' என்று சொன்ன பொழுது, 'நீச்சல் உடையா? அப்படியென்ருல் என்ன?' என்று ஆச்சரியத்துடன் வினவினர் வனஜா! நீச்சல் உடையைப் பற்றி விளக்கியவுடன், அவர் ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டுச் சென்ருர்!

அழகிப் போட்டி பார்ப்பதற்கான டிக்கெட்டுகள் ஒரு வாரத்துக்கு முன்பே விற்பனையாகி விட்டன. பத்திரிகைகளிலும் மக்களிடமும் எங்கும் அதைப் பற்றிய பேச்சும் பரபரப்புமே இருந்தன. ஆனல் மலாயா அழகிகளின் இறுதிப் போட்டியில் வனஜா நான்காவதாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலாவதாக அவர் வந்திருந்தால் அமெரிக்காவில் லாங்பீச்சில் (கலிபோர்னியா) நடைபெற்ற உலக அழகிப்போட்டியில் கலந்துகொண்டு அமெரிக்க சினிமாவில் நடிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனல் என்ன செய்வது? நீச்சல் உடையில் ஒய்யாரமிக்க தளதளவென உள்ள 'கால் அழகி'களின் மத்தியில், முன்பின் நீச்சல் உடை அணிந்திராத வனஜா, நாணத்துடன் குன்றிப் போய் நின்றபொழுது எப்படி ஜெயித்திருக்க முடியும்! என்ருலும் தேசிய உடையில் பெடரேஷன் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது பற்றி அவர் திருப்தியடைந்திருக்கிருர். சினிமா நட்சத்திரம்போலிருக்கும் வனஜாவை இந்தியப் பட முதலாளிகள் தங்கள் படத்தில் பிடித்துப் போடலாம்!

பெடரேஷன் அழகுப் போட்டியில் முதல் ஸ்தானம் பெற்ற இந்தியப் பெண் வனஜாவும், அவள் தந்தை மாதவனும்.



நடனம் ஆடினர்

சென்ற மாதம் 2, 4ம் தேதிகளில் உள்ளூர் கலைஞர்களைக் கொண்டு விக்டோரியா தியேட்டரில் ஒரு கதம்பக் காட்சி நடைபெற்றது. ஸ்ரீமதி ரதி கார்த்திகேசுவின் 'பிளேட்' நடனமும், பரத நாட்டியமும் 'ஏ ஒன்'ஆக இருந்தன. நாட்டிய கலாபூஷணம் பந்தநல்லூர் சொக்கலிங்கம் பிள்ளையின் சிஷ்யை குமாரி உமா சங்கரின் பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் ரசிக்கத்தக்கதாக இருந்தன. அலாரிப்பு, ஜதிஸ்வரம், பதம் எல்லாம் வெகு தெளிவாக இருந்தன. எதிர்காலத்தில் சிறந்த நடன மணியாகத் திகழ்வதற்கான அம்சங்கள் அவரிடம் காணப்படுகின்றன! பின்னணி பாடிய பாடகி ராஜாமணியின் குரல் 'கணீ'ரென்று இனிமையாக இருந்தது.

இளம் பாடகர் எச். ஆர். நாராயண சில .கர்நாடகப் பாடல்களைப் பாடினர். நல்ல சாரீரம்! மற்றும் குமாரி ஜே. லீலா, குமாரி இந்திரா டேவிஸ் ஆகியோரின் ஓரியண்டல் நடனங்களும், குமாரி செல்வலக்ஷ்மியின் நிழல் நடனமும் மற்ற நிகழ்ச்சிகளும் நன்ருக இருந்தன. கலை வளர்ச்சிக்குக் கலை வளர்ச்சி, பொழுது போக்குக்கு நல்ல பொழுது போக்கு, நிதி உதவிகளுக்குப் பணம் சேர்ந்தாற் போலும் ஆயிற்று!

"க்யூ" ஒழிந்தது!

சிங்கப்பூரிலுள்ள எல்லா சினிமாத் தியேட்டர்களிலும் 'க்யூ' வரிசை ஒழிந்து விட்டது! சினிமா ரஸிகர்களுக்கு யோகம் பிறந்து விட்டது! கீழ் வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை எந்த வகுப்புக்கு வேண்டுமானுல் முன் கூட்டியே பணம் கட்டி டிக்கெட் எடுத்து இடத்தை ரிஸர்வ் செய்யலாம். இந்த முறை நல்ல வெற்றியளித்திருப்பதால் சென்னை தியேட்டர் நிர்வாகிகளும் இதைப் பின்பற்றி பரீட்சிப்பது நல்லது. வெய்யிலிலும் மழையிலும் மணிக்கணக்காக நின்று தவம் செய்யும் சினிமா ரசிகர்களுக்கு இதைவிடச் சிறந்த பரிகாரம் வேறு இருக்க முடியாது. சிங்கப்பூர் தியேட்டர்களுக்கு இந்த ஏற்பாட்டை சிபார்சு செய்தவர்கள் சிங்கப்பூர் சினிமா ரஸிகர்கள் சங்கத்தினராவர்.

சிறந்த படங்களுக்குப் பரிசு

சிங்கப்பூர் சினிமா சரித்திரத்திலேயே முதன் முதலாக சிறந்த இந்தியப் படங்களுக்கும், சிறந்த நடிகர்களுக்கும் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்குவதற்கு சிங்கப்பூர் சினிமா ரஸிகர்கள் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

இந்த வருஷம் திரையிடப்பட்ட படங்களில், சிறந்த படம் எது, சிறந்த நடிகர், நடிகைகள் யார் என்பதை சினிமா ரஸிகர்களே தேர்ந்தெடுப்பார்கள். எல்லாத் தியேட்டர்களிலும் இதற்கென்று வைக்கப்படும் பெட்டியில் ரஸிகர்கள் வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

—எஸ். சப்தகிரி சர்மா.

[28-ம் பக்கத் தொடர்ச்சி]

தெருவுக்குப் பின்புறமாகச் செல்கிறது. சுமார் இரண்டு பர்லாங் தூரம் வரை சென்று தோப்பினுள் வளைந்து செல்கிறது. சாலையின் வளைவு வந்ததும் என்னை அறியாமலேயே திரும்பிப் பார்த்தேன். வீட்டுக் கொல்லையில் கல்யாணி நின்று கொண்டிருந்தாள்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் நான் மீண்டும் கும்பகோணம் செல்ல வேண்டியிருந்தது. போகும் வழியில் அந்தக் கிராமத்திற்கு ஒரு முறை சென்றேன். ஆனல் அவர்களைச் சந்திக்கவே யில்லை. பட்டணத்துக்கு உறவினர் வீட்டுக்குப் போய் விட்டதாகச் சொல்லி விட்டனர். அன்று என் உள்ளத்தில் பதிந்த கல்யாணியின் எழில் உருவம் இன்னும் மறையவில்லை. நாங்கள் இருவரும் ஒன்று சேருவது தெய்வத்திற்கே சம்மதம்தான்! என் தாயார் எனக்காகப் பார்த்த பெண் கல்யாணியாகவே அமைந்ததில் தெய்வசங்கல்பம் அன்றி வேறுஎன்ன இருக்கிறது.

என் கருத்தை என் தாயாரும் ஆமோதித்தாள். "இல்லாவிட்டால் எங்கேயோ இருந்த உன்னை எதற்காக அவர்களிடம் சேர்த்தது. தெய்வச் சித்தம். அவ்வளவுதான். பெண் பார்க்க வரவேண்டியவர்களுக்குப் பதிலாக உன்னைக் கொண்டு போய் நிறுத்திவிட்டது. இது மனுஷ யத்தனம் என்று சொல்ல முடியுமா?" என்றுள் என் தாயார்.

என் உள்ளம் மிகுந்த மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது.



பி. டி. சம்பந்தம்

கே. ஆர். கே. புரொடக்ஷன்ஸ்
"கனவு" தமிழ்ப் படத்தில்
நடிக்கும் எஸ். ஆர். ஜோதி

இது செய்தி

புகாருக்கு ஆதாரமில்லை

சினிமாப் பார்ப்பதால் சிறுவர் சிறுமியர் கெட்டுப் போய் விடுகின்றனர் என்றும், எனவே சினிமாக்களால் ஏற்படும் இத்தீமைகளைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் டில்லியிலுள்ள 13000 மாதர்கள் நேருஜியிடம் தந்துள்ள மகஜருக்கு ஆதாரமே கிடையாதென்று இந்திய பிலிம் தணிக்கை போர்டு மாஜி தலைவர் அகர்வாலா ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

"ஸிம்ப்ஸா"வின் புது நிர்வாகிகள்

தென்னிந்திய சலனப்பட ஸ்டுடியோ சங்க (ஸிம்ப்ஸா) வருஷாந்தர மகா சபைக் கூட்டம் ஜூன் மாதம் 27-ம் தேதி ஜெமினி ஸ்டுடியோவில் நடைபெற்றது. 1954-ம் வருஷத்துக்கு பின் கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் தலைவராகவும், ரோஹினி ஸ்டுடியோவைச் சேர்ந்த எச். எம். ரெட்டி உப தலைவராகவும், ஏவி. மெய்யப்பன் (ஏவி. எம்.), பி. நாகி ரெட்டி (வாஹினி), எம். சோமசுந்தரம் (நெப்டியூன்), எஸ். எம். ஸ்ரீராமலு நாயுடு (பக்ஷிராஜா) வி. எல். நரசு (நரசு ஸ்டுடியோ) ஆகியோர் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

சிறந்த சினிமாப் படம்

டைரெக்ஷன், ஒலிப்பதிவு, ஆர்ட், சங்கீதம், படப் பிடிப்பு ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் படங்களுக்கு பரிசளிக்க தென்னிந்திய ஸினி டெக்னீஷியன்கள் சங்கம் முடிவு செய்திருந்தது. இதற்கிணங்க சென்ற வருடம் தயாரிக்கப்பட்ட படங்கள் பரிசீலிக்கப் பட்டன. பிறகு ஆர்ட் சங்கீதம் ஆகிய துறைகளில் சிறந்த படமாக ஜெமினியின் "ஒளவையார்" படத்தையும், ஒலிப் பதிவில் சிறந்த படமாக "தேவதாஸ்" படத்தையும், படப் பிடிப்பில் சிறந்த படமாக "என் வீடு" படத்தையும், டைரெக்ஷனில் சிறந்து விளங்கும் படமாக "மனிதன்" படத்தையும் சங்கம் தேர்ந்தெடுத்தது. என்ன பரிசைக் கொடுப்பது என்று சங்கம் பிறகு முடிவு செய்யும். பரிசளிப்பு விழாவிற்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது.

காலமானார்

பிரபல பாடகரும் நடிகருமான எஸ். வி. சுப்பய்யா பாகவதர் தென்காசியில், சம்பூர் வடகரையில் தமது இல்லத்தில் சென்ற மாதம் 3-ம் தேதி காலமானார். இவர் "கம்பர்" தமிழ்ப் படத்தில் நடித்திருக்கிறார். அவர் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு இரு மனைவிகளும், குழந்தைகளுமிருக்கின்றனர்.

காந்திஜி வாழ்க்கைப் படம்

"இந்தியாவின் குரல்" சென்ற மாதம் 11-ம் தேதி கோவை தியேட்டர் ஒன்றில் முதல் முறையாகத் திரையிடப்பட்டது. விழாவுக்கு காந்திஜி சமரச நிதியின் உப தலைவரான தேவதாஸ் காந்தி தலைமை வகித்தார். தேவதாஸ் காந்தி குடும்பத்தினரும் வந்திருந்தனர். பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அவர், காந்தியடிகளின் முழு நீள வாழ்க்கைப் படம் ஒன்றைத் தயார் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். "இந்தியாவின் குரல்" என்ற படம் நாட்டின் பல பாகங்களில் காட்டப்பட்டுள்ளதாகவும், அதன் வருமானம் முழுதும் அந்த ராஜ்யத்திலேயே செலவிடப்படும் என்றும் தெரிவித்தார். இது வெளி நாடுகளிலும் அந்தந்த மொழிகளில் விமர்சனத்துடன் திரையிடப்படும் என்று கூறினார்.

தென்னிந்தியர் சங்கம்

பம்பாய்க்கு அப்பாலுள்ள புஷாவல் நகரத்திலே 'தென்னிந்தியர் சங்கம்' என்ற ஒரு சங்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. அதன் ஆதரவில் சென்ற மாதம் 10-ம் தேதி குமாரி லக்ஷ்மி அய்யரின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

தேசீய நாடக விழா

தேசீய நாடக விழாக் கமிட்டியின் பரிசிலனைக்கு பல்வேறு பாஷைகளிலிருந்தும் வந்துள்ள நாடகங்களின் தொகை வருமாறு தெலுங்கு: 252,

பட்டிவீரன் பட்டி பிரபல தோட்ட முதலாளியான ஸ்ரீ. டபிள்யூ. பி. ஏ. ஆர். சந்திரசேகர நாடாரின் புதல்வி **சௌ. காதம்பரிக்கும்,** தூத்துக்குடி நகரசபைத் தலைவர் ஸ்ரீ. எம். வி. எஸ். சுந்தரவேல் அவர்களின் புதல்வர் **சிரஞ்சீவி ஜனார்த்தனத்திற்கும்** பட்டிவீரன் பட்டியில் ஜூலை 4ந் தேதி கோலாகலமாய் திருமணம் நடந்தேறியது.

மராத்தி: 134, கன்னடம்: 59, ஹிந்தி: 58. தமிழ்: 30. குஜராத்தி: 27, வங்காளி: 25, மலையாளம்: 25, ஒரியா: 15, பஞ்சாபி: 12, சம்ஸ்கிருதம்: 10, அஸ்ஸாமி: 8.

வாழ்த்துகிறோம்

மதுரை, நியூ ஸினிமா, ரீகல் டாக்கீஸ் இவைகளின் மானேஜிங் டைரெக்டரான என். ஆர். சீதாராம அய்யர் தமது புத்திரி சௌ. யமுனாவை சிரஞ்சீவி கே. வி. ஜோதி பி. ஏ. க்குத் திருமணம் செய்து கொடுத்தார். இந்த விவாகம் மதுரையில் சென்ற மாதம் 7-ம் தேதி சிறப்பாக நடைபெற்றது.

பிரபல சிறு கதை எழுத்தாளர்களில் ஒருவரான "கௌசிகன்" என்ற புனைபெயர் கொண்ட வி. கே. மூர்த்தி, தமது குமாரன் சிரஞ்சீவி ரமணியின் அப்தபூர்த்திக் கல்யாணத்தை சிறப்பாக சென்ற மாதம் 11-ம் தேதி திருச்சியில் கொண்டாடினார்.

குட் இயர் டயர் அண்டு ரப்பர் கம்பெனியின சென்னை ஆபீஸில் வேலை பார்க்கும் சிரஞ்சீவி வி. ராமமூர்த்தி, சௌ. மீனாக்ஷியை மனைவியாக அடைந்தார். இந்த விவாகம் சென்ற மாதம் 9-ம் தேதி பங்களூர், விஸ்வேஸ்வரபுரத்தில் நடந்தது.

நடன அரங்கேற்றம்

குமாரி அமிருதவல்லியின் பரத நாட்டிய அரங்கேற்றம், சென்ற மாதம் 18-ம் தேதி சென்னை, அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. அன்று தலைமை வகித்த பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி நாட்டிய மணியையும், அவருக்கு சிக்ஷை சொல்லி வைத்த பி. ஜி. செல்லப்பாவையும் பாராட்டிப் பேசினார்.

சென்ற மாதம் 12-ம் தேதி, தஞ்சையில் சௌ. சௌந்த்ரகலாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. இந்தச் சிறுமி பி. லக்ஷ்மிகாந்தத்திடம் சிக்ஷை பெற்றவர்.

பவானி

சென்ற மாதம் 4-ம் தேதி, மயிலை, ரஸிக ரஞ்சனி ஸபா ஹாலில் "பவானி" என்ற நாடகம் நடைபெற்றது. பிரபல நாவலாசிரியை "லக்ஷ்மி"யின் இந்தத் தொடர் கதையை வி. வி. ஜெயராமன் நாடகமாகத் தயாரித்திருந்தார். நாடகத்தை அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ருப்பினர் நடித்தார்கள்.

தென்னிந்திய கலைச் சங்கம்

திருச்சி தென்னிந்திய கலைச் சங்கத்தினர், சென்ற மாதம் 7-ம் தேதி, திருச்சியில் நடைபெற்ற கண்காட்சியில் 'கல்கி'யின் "மகுடபதி" நாடகத்தை நடித்தார்கள். அவர்களே சென்ற மாதம் 27-ம் தேதி, ஏ. எஸ். ராகவன் எழுதிய "தொடு வானம்" என்ற நாடகத்தை, ரயில்வே இன்ஸ்டிட்யூட் ஹாலில் நடித்தார்கள்.

புதிய பாதை

சென்ற மாதம் 18-ம் தேதி, திருச்சி தேவர் மன்றத்தில் "புதிய பாதை" என்ற சமூக நாடகம் நடிக்கப்பெற்றது. நா. ராஜகோபால் என்பவர் எழுதிய இந்த நாடகத்தை திருச்சி கலைவளர்

ச்சிக் கழகத்தினர் நடித்தார்கள். அன்றைய நாடகம் ஜெமினி கணேசன் தலைமையில் நடைபெற்றதாம்!

விக்ரம—ஊர்வசி

பர்மா ஷெல் சங்கத்தினர் சென்ற மாதம் 3-ம் தேதி "விக்ரம-ஊர்வசி" என்ற நாடகத்தை மயிலை, ஆர். ஆர். சபா ஹாலில் நடித்தார்கள்.

"ஸாம்ஸன்-டிலைலா" என்ற கதையைத் தழுவி எழுதப்பட்ட நாடகமாகும் இது. நாடகத்தில் வில்லனாக நடித்த எஸ். வி. ஜகன்னாதனின் நடிப்பு வெகுவாகப் பாராட்டும்படி இருந்தது. வேஷப் பொருத்தம் பிரமாதம்; நடிப்பும் மிடுக்காக இருந்தது. மற்றும் நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட எல்லோருமே நன்றாக நடித்தனர்.

ஒரே கடிதம்

தென் இந்திய ரயில்வே ஊழியர்கள், கலைக் கழகம் ஒன்றை, ரயில்வே ஆபீஸர் அ. வெ. சுப்ரமண்யம் அவர்களை தலைவராகக் கொண்டு நிறுவியுள்ளார்கள். அதன் ஆதரவில் "மா. ரா." எழுதியுள்ள "ஒரே கடிதம்" என்ற நாடகம் சென்ற மாதம் 17-ம் தேதி அன்று மியூசியம் தியேட்டரில் நடைபெற்றது. இந்த சமூகக் கதையை எழுதிய "மா, ரா."வே வசனங்களையும், பாட்டுக்களையும், டைரெக்ஷனையும், ஏற்றுக்கொண்டு ஹாஸ்ய பாகத்திலும் நடித்து எல்லோரையும் வியக்கச் செய்தார். வில்லனாக நடித்த சுந்தரராஜனின் பார்வையிலிருந்து சிரிப்பு வரையில் வில்லனுக்கு வேண்டிய முறையில் இருந்தது. சுந்தரமாக நடித்த சுவாமிநாதனும் சரி, பூதநாதனாக நடித்த சுவாமிநாதனும் சரி, சோடையின்றி நடித்தனர். சங்கீத டைரெக்ஷனை ஏற்றிருந்த இளைஞர் பார்த்த சாரதியின் திறமை 'அபாரம்'. ஹிந்தி மெட்டுக்களைக் காப்பி அடிக்காமல் தனிப் பாணியை கையாண்டிருக்கிறார்.

கிராமங்களுக்கும் சினிமா

இதுவரையில் சினிமா எட்டிப் பாராத சிறிய நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்கள் சினிமாவைக் கண்டு களிப்பதற்கான ஏற்பாடுகள் சென்னையிலும் பம்பாயிலும் உருவாகி வருகின்றன. குறைந்த செலவில் சிக்கனமான "மாதிரி" சினிமாக்கள்

அமைப்பதன் மூலம் தென்னிந்தியாவில் குக்கிராமங்களில் உள்ளவர்களும் படம் பார்க்க வசதி செய்வதற்கான ஒரு திட்டத்தை படத் தொழில் பிரமுகர்கள் எஸ். எஸ். வாஸன், ஏவி. மெய்யப்பன், பி. நாகிரெட்டி, கே.எஸ். நாராயணன் ஆகியோர் பரிசீலித்து வருகின்றனர். பட விநியோகஸ்தர் தாராசந்த் பர்ஜத்யாதான் கிராமங்களுக்கு சினிமாவை விஸ்தரிக்கும் இப்புதுத் திட்டத்துக்கு யோசனை கூறியவர். முன்பு தென்னிந்திய சலனப்பட ஸ்டூடியோக்கள் சங்க ('ஸிம்ப்ஸா') காரியதரிசியாக இருந்தவரும்; தற்போது அதன் சட்ட ஆலோசகராக இருப்பவருமான ஆர். எம். சேஷாத்ரி, மேல்கண்ட திட்டத்தின் விவரங்களைத் தயாரித்து வருகிறார். ஆரம்பத்தில் கண்ட 4 தென்னிந்திய படத் தொழில் தலைவர்களையும், பார்ஜத்யாவையும் பங்குதாரர்களாகக் கொண்ட ஒரு புதிய கம்பெனி கிராமாந்தரப் பட விநியோகத்தை மேற்கொள்ளும் எனத் தெரிகிறது. ஒரு "மாதிரி" சினிமா அமைக்க, ரூ. 30,000 முதல் லக்ஷம் வரை செலவாகலாமென மதிப்பிடப்படுகிறது. பல குக்கிராமங்களின் கோஷ்டிக்கு ஒரு சிறிய தட்டிக் கூரையுடைய சினிமா அமைக்கப்படும். பிரவேசக் கட்டணமும் மிக மலிவாக இருக்கும். சென்னையில் திட்டம் வெற்றி கண்டதும் வட இந்தியாவிலுள்ளவர்களும் இந்தப் புது முயற்சியில் முனைவார்கள்.

ஹிந்தியில் "பராசக்தி"

தமிழில் அமோக வெற்றி பெற்ற "பராசக்தி"யை ஹிந்திப் படமாக்கப் போகிறாராம் ஏவி. மெய்யப்பன். இப்படத்தின் வசனங்களை மோகன்லால் பாஜ்பாய் என்பவர் எழுதியிருக்கிறார். இவர் சாந்திநிகேதனத்தின் ஹிந்தி இலாகா தலைவராம். படத்தின் நடிகர்கள் ஜாபிதா இன்னும் தீர்மானமாகவில்லை.

சாப்ளினுக்கு விருந்து

பிரபல மேனாட்டு ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளினுக்கு ஒரு பெரிய கௌரவம் சமீபத்தில் கிடைத்தது. சீனப் பிரதம மந்திரி சூ-யென்-லாயுடன் அவர் ஜினிவாவில் விருந்து உண்டார். ஹாஸ்ய ரஸனையுள்ள சீனப் பிரதமர் சாப்ளின்-விசிறி.

உபசரிப்பு

ஸினி டெக்னீஷியன்கள் சங்கத்தினர் சென்ற மாதம் 25-ம் தேதி பிலிம் சென்டரின் மானேஜிங் டைரெக்டரான அப்துல் மஜீத் ஏ. கே. காஸிக்கு ஒரு தேநீர் விருந்தளித்தனர். மஜீத் மேனாட்டு பிலிம் தொழில் நிலை பற்றி ஆராய்ந்து திரும்பியுள்ளார். அன்று அவர் அது பற்றி விளக்கிக் கூறினார்.

ஐயப்பனார்

ஸிலிந்தியா பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியார் "ஐயப்பனாரை" படமாக்கப் போகிறார்களாம். படத்தில் செருகளத்தூர் சாமா, எஸ். டி. சுப்பய்யா, ஸி. ஆர். ராஜகுமாரி, எம். எம். மாரியப்பா நடிக்கக் கூடுமாம்.

பால்காரன்

சென்ற மாதம் 3-ம் தேதி, சேவகி பிக்சர்ஸார் தங்களது "பால்காரன்" என்ற படத்தின் ஆரம்ப விழாவை நடத்தினார்கள். "பால்காரன்" என்ற சங்கீத ஹாஸ்யப் படத்தின் கதை வசனத்தை கல்லல் ராமநாதன் என்பவர் எழுதியிருக்கிறாராம்.

ராஜ்ஸ்ரீ புரொடக்ஷன்ஸ்

ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸைச் சேர்ந்த தாராசந்த் பர்ஜட்யா என்பவர் பட விநியோகத் துறையில் நன்கு அனுபவம் பெற்றவர். ஏவி. எம்., ஜெமினி படங்களுக்கு விநியோகஸ்தர்களாக இருந்துள்ள ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸார் படத் தயாரிப்பிலும் இறங்குகிறார்கள். ராஜ்ஸ்ரீ புரொடக்ஷன்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். முதன் முயற்சியாக சென்னையில் ஒரு படத்தை, தமிழ் நாட்டு - வட நாட்டு நக்ஷத்திரங்களைக் கொண்டு தயாரிக்கப் போகிறார்களாம்.

இந்தியாவில் 3–டி படம்

சாந்தாராமின் ராஜ்கமால் கலாமந்திர் ஒரு கனபரிமாணப் (3-டி) படம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாம். பூரா விவரங்கள் தெரியவில்லை.

ராஜாஜியின் பாராட்டு

சென்ற மாதம் 21-ம் தேதி, "ஐயப்பன்" நாடகத்தின் 108-வது நாடகம் நடைபெற்றது. அன்றைய நாடகத்திற்கு ஸி. ராஜகோபாலாச்சாரியார்

பக்ஷிராஜா பிலிம்ஸார் தயாரித்திருக்கும் "மலைக் கள்ளன்" தமிழ்ப் படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் பானுமதியின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இக் காட்சி வருகிறது.

தலைமை வகித்தார். ராஜாஜி நவாப் நாடகக் கலைக்குச் செய்துவரும் தொண்டை வெகுவாகப் பாராட்டினர். அவர் பேசுகையில், " கடவுள் இல்லை என்று கூறுவது ஆபத்தானது. ராஜமாணிக்கம் மக்களுக்குத் தேவையான நாடகங்களை நடத்தி வருகிறார். அவர் செலவைப் பாராட்டாது, பக்தி மார்க்கத்தைப் பரப்பி வருகிறார்" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து "ஐயப்பன்" நாடகத்தை ராஜமாணிக்கம் நடத்தி வருகிறார். மழை பெய்தாலும் இடைஞ்சல் இல்லாது அபிமானிகள் உட்கார்ந்து பார்க்க சௌகரியமாக இப்பொழுது கொட்டகை போடப்பட்டிருக்கிறது.

சர்வதேச பிலிம் விழா

ஜூன் மாதத்தில் பெர்லினில் சர்வதேச பிலிம் விழா நடைபெற்றது. இந்த விழாவில் 28 நாடுகள் கலந்து கொண்டன. "ஹாப்ஸன்ஸ் சாய்ஸ்" என்ற பிரிட்டிஷ் படத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. டாக்குமெண்டரி படங்களில் "வாழும் பாலைவனம்" என்ற வால்ட் டிஸ்னியின் படத்திற்கு முதல் பரிசு கிடைத்தது.

உதவிக் கச்சேரி

இம்மாதம் 8-ம் தேதி, சென்னை, செயிண்ட் மேரிஸ ஹாலில் ஓரியண்டல் நடன நிகழ்ச்சி ஒன்று நடைபெற இருக்கிறது இந்தக் கச்சேரி சென்னை, மயிலாப்பூரில் நடைபெற்று வரும் ஸாயி இலவச மருத்துவ விடுதிக்கு நிதி சேர்க்க நடைபெறுகிறது. ராதா ராணி கோஷ்டியாரின் ஓரியண்டல் நடனங்கள் அன்று நடைபெறும். நல்ல காரியத்திற்காக நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு நடனக்கலை ரஸிகர்கள் அனைவரும் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாழ்க்கை வர்ணனை

[12ம் பக்கத் தொடர்ச்சி]

ஜகன்னாதய்யரின் மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபையினர் இவரைத் தங்கள் கம்பெனிக்கு அழைத்தனர். மூன்றரை வருஷ காலத்திற்குப் பிறகு, ஆலந்தூர் கம்பெனியிலிருந்து சம்பந்தம் விலகி ஜகன்னாதய்யர் கம்பெனியில் (1917ல்) சேர்ந்தார்.

சம்பந்தம் 19வது வயது வரையில் பால வேஷங்களில் நடித்தார். பிறகு, நாவல் நாடகங்களில் நடிக்கலானார். "மனோஹரா"வில் வஸந்தனாகவும், "சாரங்கதரா"வில் மதுரகவியாகவும், "வேதாள உலக"த்தில் தத்தனாகவும் நடிப்பதில் சம்பந்தம் மிகப் புகழ் பெற்றிருந்தார்.

மற்றெல்லாவற்றையும்விட ஹாஸ்ய நடிப்பையே சம்பந்தம் பெரிதும் விரும்பினர். ஆதலால், நாவல் நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய பின்னர் அவர் ஹாஸ்யமல்லாத பாத்திரங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டார். இந்த சமயத்தில்தான் பிரபல கே. சாரங்கபாணி இக் கம்பெனியில் சேர்ந்தார். அவர் சம்பந்தத்தின் ஹாஸ்ய நடிப்பில் லயித்துப் போய் அவரைத் தம் குருவாக மதிக்கத் தொடங்கிவிட்டார்.

1927ம் வருஷம் வரையில் சம்பந்தம் ஜகன்னாதய்யர் கம்பெனியிலேயே இருந்து வந்தார். விலகுவதற்கு முன்னால் சம்பந்தம் "நவாப்" வேஷத்தையும் ஒருகை பார்த்துவிட்டே விலகினர். அப்போது கம்பெனியிலிருந்த சில முக்கிய நடிகர்கள் விலகிவிட்டதால் நவாப் வேஷத்தை சம்பந்தம் கட்டாயமாக ஏற்க வேண்டியதாகி விட்டதாம்.

சம்பந்தம் இந்த வேஷத்தில் 35 நாடகங்களில் நன்கு நடித்துப் புகழ் பெற்றார். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவரது மனதிற்குப் பிடிக்காத சில சம்பவங்கள் நடந்ததால் அவர் கம்பெனி மீது மட்டுமன்றி நாடகத் தொழில் மீதே வெறுப்புக்கொண்டு கம்பெனியிலிருந்து விலகினர்.

ஜகன்னாதய்யரின் கம்பெனியிலிருந்த போது சம்பந்தம் நடிப்புடன் மட்டும் நின்றுவிடாமல் கம்பெனியின் மின்சார (டைனமோ) இயந்திரத்தை ஓட்டுவதற்கும், சில சில்லரை ரிப்பேர்களைச் செய்யவும் கற்றுக் கொண்டார். பொழுது போக்காகக் கற்றுக்கொண்ட இவ்விஷயம் அவரது எதிர்கால வாழ்க்கைக்கே ஒரு ஆதாரமாகி விட்டது. சென்னையில் உள்ள பி. அண்ட் ஸி. மில்லில் அவருக்கு முதல் வகுப்பு (வயர்மேன்) உத்தியோகம் கிடைத்தது.

சுமார் பதினேழு வருஷ காலம் சம்பந்தம் மில் உத்தியோகத்திலேயே இருந்தார். எனினும், நடிப்பைப் பற்றிய எண்ணம் அவரை விட்டு அகன்றுவிடவில்லை. பி. அண்ட் ஸி. மில்லின் 14,000 தொழிலாளர்களின் பொழுது போக்கிற்காக மில்காரர்கள் ஒரு நாடக சங்கத்தை நடத்தி வருகின்றனர். சம்பந்தம் இச்சங்கத்தின் நாடகக் கண்டக்டர் பதவியை ஏற்றுக்கொண்டு, சிறந்த முறையில், அடிக்கடி நாடகங்களை நடத்திக் கொடுத்து வந்தார். அதோடுகூட அவர் வெளியில் அமெச்சூர்கள் நடத்தும் நாடகங்களிலும் பங்கெடுத்துக்கொள்ளுவது வழக்கம்.

சம்பந்தமும் வி. கே. ஷண்முக சுந்தரம் என்பவரும் சேர்ந்து "எதிர்பார்த்தது" என்ற ஒரு நாடகத்தைத் தயாரித்தனர். இந்த நாடகம் மேடையில் அமோகமான வெற்றியைப் பெற்றது. இன்றைக்குக்கூட இந்த நாடகத்தை அமெச்சூர் நடிகர்கள் நடித்து வருகின்றனர். 'இப்படியே நம் ஆயுட் காலம் பூராவும் மில் உத்தியோகத்துடனும், அமெச்சூர் நாடக நடிப்புடனும் அமைதியாகக் கழிந்து விடும்'-என்று எண்ணிக்கொண்டிருந்த சம்பந்தத்திற்கு என். எஸ். கிருஷ்ணனிடமிருந்து எதிர்பாராத விதமாய் ஒரு அழைப்பு வந்தது. தாம் ஆரம்பித்திருக்கும் என்னெஸ்கே நாடக சபையின் கண்டக்டர் பதவியை ஏற்றுக்கொண்டு, சிறந்த முறையில் நாடகங்களை நடத்திக் கொடுக்க வேண்டும் என்று என். எஸ். கே. கூறினர். அவரது வற்புறுத்தலைத் தவிர்க்க முடியாத சம்பந்தம் 1944ல் மில் உத்தியோகத்தை விட்டுவிட்டு, என்னெஸ்கே நாடக சபையில் சேர்ந்தார்.

என். எஸ். கே. நாடக சபையில் சம்பந்தம் இரண்டு வருஷ காலம் இருந்தார். 1946ல் இக் கம்பெனி கலைக்கப்பட்ட பின்னர், அவர் மோகன கான சபா என்ற புதிய கம்பெனியில் சேர்ந்தார். முதலில் திருச்சியில் நாடகங்களை

நடத்தி விட்டு இக்கம் பெனி காரைக்குடிக்குச் சென்றது.

காரைக்குடியை அடைந்ததும், அவரை அதிர்ஷ்டம் கண் திறந்து பார்த்தது. அதாவது, ஸ்ரீ. ஏ.வி. மெய்யப்பன் அவர் நடித்த "இழந்த காதல்" நாடகத்தைப் பார்த்தார். மறுதினமே அவர் சம்பந்தத்தை தம் படங்களில் நடிப்பதற்கு நிரந்தர சம்பளத்தில் அமர்த்திக் கொண்டு விட்டார். சம்பந்தம் (பெயரளவில்) சினிமா நடிகராகி விட்டாரே தவிர, அவருக்கு இரண்டு வருஷ காலத்திற்கு நடிக்கும் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இந்த இடைக் காலத்தில் அவருக்கு பண்டரிபாய், லக்ஷ்மிராஜ்யம் ஆகிய நடிகைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கும் வேலை அளிக்கப்பட்டது!

கடைசியாக, சம்பந்தத்திற்கு சினிமாப் படங்களில் நடிக்கும் பாக்கியம் 1949ல் கிட்டியது. ஏவி.எம்.மின் வெற்றிப் படமான "வாழ்க்கை"யில் அவர் சீனியாக நடித்தார். அவரது நடிப்பு திருப்திகரமாய் இருந்ததால் தெலுங்குப் பதிப்பான "ஜீவித"த்திலும், ஹிந்திப் பதிப்பான "பஹாரி"லும் அவரை நடிக்கச் செய்தனர். "பஹாரி"ல் அவர் ஒரு பழக் கடைக்காரனை நடித்திருக்கிறார். இதன் பின்னர் ஏவி. எம். வெளியிட்ட "லட்கி" ஹிந்திப் படத்திலும் சம்பந்தம் நடித்திருக்கிறார்.

சமீப காலத்தில் சிறந்த வெற்றி பெற்ற படங்களுள் "ஜாதகமு"ம் ஒன்றாகும். அதிலும், அதன் கன்னடப் பதிப்பான "ஜாதக பலா"விலும் சம்பந்தத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இதன் பிறகு சம்பந்தம் நடித்த படம் ஏவி. எம்.மின் நூதன முயற்சியான "அந்த நாள்" படமாகும். அடுத்தபடியாக, அவர் ஏவி. எம்.மின் அனுமதியின் பேரில் "பொன் வயல்" "பங்காரு பூமி" ஆகிய படங்களில் பெரியண்ணனாக நடித்திருக்கிறார்.

சமீபத்தில் வெளிவந்து, பெருமித வெற்றி பெற்று வரும் "பெண்" (தமிழ்) "சங்கம்" தெலுங்குப் படங்களிலும் சம்பந்தத்தை நிறையப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர் காமெடியன் சாரங்கபாணியின் குமாஸ்தாவாகத் தோன்றிப் படும் அவஸ்தைகள் நமக்கு பலே ஹாஸ்யமாக இருக்கிறதல்லவா! தற்போது சம்பந்தம் "செல்லப் பிள்ளை" (தமிழ்) "வதின" தெலுங்கு, "ஜாதகம்" (தெலுங்கு) ஆகிய மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். "பெண்"ணில் அவர் பெற்றுள்ள வெற்றி காரணமாக இனி ஏவி. எம். வெளியிடும் படங்களில் அவர் நிறைய இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கலாம்.

"சரஸா" நாடகத்தில் மனோஹருடன் பி. டி. சம்பந்தம்.

அவரது படங்களில் கன்னடம், தெலுங்கு, ஹிந்தி சம்பாஷணைகளை அவரேதான் பேசியிருக்கிறார். அவருக்குத் தாய் பாஷையான தமிழோடு கூட தெலுங்கு எழுதப் படிக்கவும் தெரியுமாம். ஹிந்தியை சுமாராகப் பேச மட்டும் தெரியுமாம். ஆங்கிலத்தில் அவருக்குத் தெரிந்தது: "No-No"; அவ்வளவுதான்!

* * *

சம்பந்தம் 1900-ம் வருஷத்தில், சோழிய வெள்ளாளர் மரபினில், சென்னையில்-தேவராஜ முதலியார்-ராஜாம்பாள் இவர்களின் இரண்டாவது புத்திரராய் பிறந்தவர். ஆனால் அவரது சொந்த ஊர், அரக்கோணத்திற்கு அருகில் உள்ள புத்தூர் ஆகும். சம்பந்தத்துடன் பிறந்தவர்கள் ஒரு தமையனும், ஒரு தங்கையும் ஆவர்.

தேவராஜ முதலியார் அந்தக் காலத்தில் எஸ். பி. ஸி. கே., அசோஸியேடட் பிரஸ் — ஆகிய அச்சகங்களில் பைண்டிங் மேஸ்திரியாக வேலை பார்த்து வந்தார். தாயார் சம்பந்தத்தின் நான்காவது வயதிலும், தகப்பனார் பதினோராவது வயதிலும் இவ்வுலக சம்பந்தத்தை நீக்கிக் கொண்டு விட்டனர். சம்பந்தத்திற்கு 1928-ல் முதல் திரு

மணம் நடந்தது. ஆனல், புத்திரப் பேறின்றியே முதல் மனைவி இறந்து விட்டார். பிறகு, 1936-ல் அவருக்கு இரண்டாம் திருமணம் நடந்தேறியது. தற்போது இவர்களுக்கு இரண்டு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறந்துள்ளனர். பதினறு வயது நிரம்பப் பெற்ற மூத்த பையன் ராஜமாணிக்கம் இப்பொழுது இன்டர்மீடியட் வகுப்பில் படித்து வருகிருன். கடைசியாகப் பிறந்துள்ள கைக் குழந்தை சுந்தரம் மழலைச் சொற்களைப் பயின்று வருகிருன். வஸந்தா, பாலாமணி, பரிமளா ஆகிய மூவரும் சம்பந்தத்தின் புத்திரிகள் ஆவர்.

சம்பந்தம் எந்தப் படத்திலும் பாடவோ, பாணுக்குச்சி வேலைகளைக் காட்டவோ இல்லை. "ஜாதக"த்தில் அவர் இரவல் குரல் பெற்றிருக்கிருர்.

நம் நடிகர்கள் ஒரு விஷயத்தில் மட்டும் என்ன முயன்ருலும் சம்பந்தத்துடன் போட்டியிட முடியாது. அதுதான் அவரது உயரம்—இல்லை யில்லை-குள்ளம்! நாலரை அடி உயரமே உள்ள அவர் குல்லாயை வைத்துக் கொண்டு ஒரு அங்குலம் அதிகமாக அளந்து காட்டுகிருர்! சட்டென கவனத்தைக் கவரும் அவரது உருவத் தோற்றம் அவர் ஏற்றுக் கொள்ளும் காமெடியன் வேஷங்களுக்கு சாதகமாக இருக்கிறது. மேடையிலோ, திரையிலோ தோன்றும்போது அவரது உருவத் தோற்றத்திற்கே முதலாவதாக "அப்ளாஸ்" கிடைத்துவிடுகிறது.

"நாரதர்" ஆசிரியர் ஸ்ரீநிவாஸ ராவ் "சரஸா" என்ற நாடகத்தைத் தயாரித்து நடத்தி வருகிருரல்லவா? இந்த நாடகத்தில் சம்பந்தம் பித்துக்குளி முகுந்தனைக நடித்து வருகிருர். இது தவிர, காமெடியன் சாரங்கபாணி சமீபத்தில் ஆரம்பித்துள்ள "இளங்கோ நாடக மன்ற" நாடகங்களிலும் சம்பந்தம் பங்கெடுத்துக் கொள்ளுகிருர். சென்ற மாதம் திருநெல்வேலிக் கண்காட்சியில் இந்த மன்றத்தினர் "மஹா புத்திசாலி", "இன்பம் எங்கே?" "டாக்டர்", "மனிதனும் மிருகமும்" ஆகிய நாடகங்களை நடித்தனர்.

"என்னைக் குருவாக மதிக்கும் ஸ்ரீ. கே. சாரங்கபாணி, அந்த நாளில் நான் செய்த ஒரு சிறு உபதேசத்தை இன்றைக்கும் மறவாது, எனக்குத் தொழிலில் ஊக்கமும், உத்ஸாகமும் அளித்து வருகிருர். நடிப்புத் தொழிலை விட்டே விலகிப் போயிருந்த என்னை, தற்கால ரஸிகர்கள் முன்னிலையில் ஒரு சினிமா நடிகனுக்கிப் புகழ்பெறச் செய்துள்ள பெருமை ஸ்ரீ.ஏவி. மெய்யப்பனைச்சேரும். இவ்விருவரது உதவிகளுக்கு நான் மிக மிகக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சம்பந்தம கூறுவதிலிருந்தே நீங்கள் அவரது குணங்களைத் தெரிந்துகொண்டு விடலாம்.

"நிறைகுடம் தளும்பாது"—என்ற பழமொழிக்கு சம்பந்தத்தை உதாரணமாய் கூறலாம்; பண்பட்ட குணங்களும், பழுத்த நாடக அனுபவமும் கூடிய ஒரு நல்ல நடிகர் அவர்.

பி. எஸ். கந்தசாமி சா சன்ஸ்

ஸ்தாபிதம் 1904 :: டெலிபோன் : 86135

சேலைகள், வேஷ்டிகள் முதலிய எல்லாவிதமான ஜவுளிகளும் நூதன தினுசுகளில், நயமான விலைக்கு எம்மிடம் கிடைக்கும்.

கரூர் விலை! — — — மெத்தைக் கடை!

13, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2

தலைமை ஆபீஸ் :—செக்குப் பேட்டை, காஞ்சீவரம்.

வாழ்க்கை இதுதான்

ரகுஜா

விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. காலை மணி ஒன்பது. வீட்டு வேலைகளையெல்லாம் அப்போதுதான் முடித்தேன். சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம் என்றெண்ணி முன் ஹால் பக்கம் சென்றேன். "போஸ்ட்" என்று கத்திவிட்டு ஒரு புக்-போஸ்டையும் ஒரு கடிதத்தையும் எறிந்துவிட்டுச் சென்றான் தபால்காரன். ஆவலோடு சென்று எடுத்தேன் கடிதத்தை, ஒரு வேளை என் கணவனிடமிருந்து அது வந்திருக்குமோ என்ற ஒரு சபலத்தினால்! ஆனால், என்ன ஏமாற்றம்! அது என் உயிர் சிநேகிதி சாரமதி எழுதியது. புக்-போஸ்டைப் பிரித்துப் பார்த்தேன். அதுவும் அவளிடம் இருந்துதான் வந்திருந்தது.

ஆம், அது ஒரு கல்யாணப் பத்திரிகை. அவள் தன் அருமைக் காதலனையே மணக்கிறாள் என்று அதைக் கண்டதும் நான் மிக்க ஆச்சரியமடைந்தேன். கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தேன். அவளுக்கும் அவள் இன்னுயிர் காதலன் சாமந்தனிர்கும்தான் திருமணம் என்று நான் கண்டேன். மீண்டும் ஒரு முறை, நான் காண்பது கனவல்ல, உண்மைதான் என முடிவு கட்டி, மீண்டும் கண்களை அதன் மீது ஓட்டியபோது நான் அடைந்த ஆனந்தத்தை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. அவளுக்கு இது முதல் திருமணம் அல்ல. பால் மணம் மாறாது, இடுப்பில் பாவாடை நிற்காது நழுவி நழுவி விழ, அது முற்றிலும் விழுந்து விடாத வண்ணம் கையில் பிடித்துக் கொண்டு போகும் அந்த இளம் பருவத்திலேயே "திருமணம்" என்ற பதத்தின் அர்த்தத்தை தெரிவிக்காமலே யாரோ ஒருவனுக்கு விவாகம் செய்து வைத்தனர் அவள் பெற்றோர். "கை நிறைய சாக்லேட்டும் இன்னொரு புதுப் பாவாடையும் கொடுத்தால்தான் அவன் கட்டும் மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொள்வேன்" என்று அவள் மணையில் உட்கார்ந்து செய்த ஆர்ப்பாட்டம் அப்போது எல்லோருக்கும் மிக்க வேடிக்கையாக இருந்தது. அதே மஞ்சள் கயிறு, பத்து பதினொரு வயது விளையாட்டுப் பெண்ணாக அவள் திரிந்தபோது, தந்தியின் மூலம் அறுந்து விழுந்தது. எல்லோர் உள்ளத்திலும் சோக ரஸத்தை உண்டாக்கி அதிகமாகப் பெருக்கியது. "அவன் போனால் போறான், அதுக்கு ஏன் என்னைக் கட்டிண்டு அழறே? எனக்கு விளையாடப்போகிறதற்கு ரொம்ப நேரமாகிறது" என்ற அவளது வெகுளித்தனமான மொழிகள் பலவித அபிப்பிராய பேதங்களை உண்டு பண்ணியது. இதுவரை செய்த கொடுமைகள் போதாதென்று இன்னும் வஞ்சம் தீராதது போல், அவள் தந்தையை, அவளை விட்டு வெடுக்கென்று பறித்துவிட்டது. எனவே, சிறிய தகப்பனாலும் தாயாலும் வளர்க்கப்பட்டாள் அந்த அபாக்யவதி.

எவ்வளவு இன்னல்களைப் பட்டு இருக்கிறாள், அந்தப் பேதைப் பெண் கலாசாலைக்குச் செல்லுகையில். அது மாத்திரமா? வீட்டில் ஒரு அடிமையாக அல்லவோ வாழ்ந்து வந்தவள் அவள்! தனியாக நாங்கள் இருவரும் இருக்கையில் எவ்வளவு முறை அந்த அசோக மரத்தின் கீழ் தன் சோகத்தை எல்லாம் என்னிடம் கொட்டி, ரத்தக் கண்ணீரும் வடித்திருக்கிறாள். அவள் சித்தி வீட்டிற்கு வந்து சேர்ந்த இரண்டு வருடங்களுக்கெல்லாம் அவள் சித்தியினுடைய கிழத் தந்தை இறந்துவிட்டதற்கு உலகமே அல்லவா அவளைத்

'துடைகாலி, மூதேவி, தரித்திரம்' என்றெல்லாம் தூற்றியது! அப்படி அல்லல் பட்ட ஒரு பெண்ணுக்கு அவள் சிறிய பெற்றோரே மனம் இசைந்து விதவா மணம் செய்யத் துணிந்தது அதிக வியப்பைத் தரும் விஷயம்தானே? மேலும் அவள் காதலனையே அவள் மணக்க அந்த வைதீகக் குடும்பத்தினர் சம்மதித்தது அதனினும் ஆச்சரியம்தானே!

இத்தகைய பல நினைவுகளுள் அவள் கடிதத்தை மெதுவாகப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தேன். என்ன அருமையான கடிதம்! தன் சந்தோஷத்தையெல்லாம் எழுத்தின் மூலம் எவ்வளவு அழகாகக் கொட்டியிருந்தாள் அவள்! கடிதத்தை படிப்பவர் முன் அவளே நின்று நேரில் சொல்வது போலல்லவா இருந்தது! கடிதத்தை முடிக்கும் தருவாய், "உன்னைப்போல் நானும் என் தாம்பத்திய வாழ்வை சமாதானத்துடன் சந்தோஷமாகக் கழிக்கும்படி நேரில் வர்து ஆசீர்வாதம் செய்துவிட்டு போ!" என்று அவள் எழுதியிருத்த அந்த ஒரே வாக்கியம் என துக்கத்தைக் கிளறியது. அருகிலிருந்த என் இஷ்ட தெய்வத்தின் படத்தின் முன் என் கைகளைக் கூப்பினேன். கண்களில் கண்ணீர் ஆறுகப் பெருக, "தாயே! என் அருமை சாரமதியின் வாழ்க்கை என்போல் இருக்கக் கூடாது. நிச்சயமாகக் கூடாது!" எனப் பலவாறு வேண்டினேன். படத்தின் மேலிருந்த புஷ்பம் கீழே விழுந்தது. எனக்கு மனச் சாந்தியை அளித்தது. பொறுமையால் வந்த பிரார்த்தனை அல்ல அது. ஒரே மின்வெட்டு: என் சிந்தனை நூல்கள் என்னை எங்கோ இழுத்துச் சென்றன. நான் பாவாடை தாவணி போட்டுக்கொண்டு நின்றேன் பதினைந்து வயது இளம் பெண்ணாய்.

பத்து வருஷங்களுக்கு முன், 'இரண்டுங் கெட்டான் வயது' என கவிஞர்கள் வர்ணிக்கும் பதினைந்தாம் வயது. பள்ளிப் படிப்பின் கடைசி வருஷத்தில் படித்துக் கொண்டிருந்தேன். என் தந்தை பெரிய வக்கீல். பங்களா வாசம், கார் சவாரி, பெற்றோரின் முழு அன்பு இவையெல்லாம் பெற்றிருந்ததால் வாழ்க்கை எனக்கு இனிமையாகவே தோன்றியது.

எங்கள் பங்களாவின் எதிரில் ஒரு பெரிய பங்களா இருந்தது. அதில் எனக்குச் சற்றே அறிமுகமான ஒரு பெண் இருந்தாள். வெகு சீக்கிரத்தில் அவள் தந்தை வியாபாரத்தில் நொடித்துப் போய், அதிலும் நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் குவிய ஆரம்பிக்கவே, மேலும் ஆடம்பர வாழ்க்கையை சமாளிக்க இயலாது, அந்த வீட்டைக் காலி செய்துகொண்டு வேறு வீட்டிற்குப் போய்விட்டார்கள்.

வெகு நாள் வரையில் அந்த வீட்டை

நாடி யாரும் வரவில்லை. கார்கள் வரிசையாக வந்து நின்று, பெரிய எலெக்ட்ரிக் விளக்குகள் பந்தம் போல் எரிந்து பிரகாசப் படுத்திய அதே பங்களா இருண்டிருந்தது. சிரிப்பும் கும்மாளமும் நிறைந்திருந்த அதே வீடு நிசப்தமாக, ஒரே சூன்யமாகக் காட்சி அளித்தது.



இத்தகைய பங்களாவில் சுமார் இரண்டு மூன்று வௌவால்கள் காலியான அந்த வீட்டைவிட மனமின்றியே அந்த ஒன்பது மாதங்கள் வாடகையின்றியே குடியிருந்தன. இதன் பின் அவைகள் அமைதியைக்குலைக்கவேண்டுமென்றோ என்னவோ, அதற்குச் சுண்ணும்பு அடிப்பவர்களும், வீட்டை சீர்படுத்தும் பல்வகைத் தொழிலாளர்களும் வந்து வீட்டைத் திறந்தனர். வெகு துரிதமாகவே அவர்கள் வேலையும் தொடங்கியது. இவை எல்லாம் போவோர் வருவோரின் மனதை ஆகர்ஷித்தன. விசாரித்ததில் அந்த வீட்டுக்கு ஒரு பெரிய டாக்டர் வரப்போவதாகத் தெரிந்தது. அவ்வளவுதான்! பஞ்சுப் பொதியில் இட்ட ஒரு நெருப்பைப்போல அந்த வதந்தி தெரு முழுவதும், ஏன் ஊர் முழுவதுமே பரவியது!

ஒரு நாள் சுமார் பதினொரு மணி, ஒரு பெரிய லாரி நிறைய சாமான்கள் வந்துஅந்த பங்களாவிற்குள் சென்றன. அரை மணி கழிந்ததும் இன்னொரு லாரி நிறைய சாமான்கள். சிறிது நேரம் கழிந்தது. இரண்டு கார்கள் வெகு வேகமாக ஓடிவந்து அந்தவீட்டின் முன் நின்றன. ஒரு பெரிய அம்மாளும் இரண்டு பெண்களும் இறங்கினர். மற்றொன்றிலிருந்து ஒரு பெரிய மனிதரும் (அவர் தான் இந்த டாக்டர் போலும்) ஒரு யுவனும் இறங்கி உள்ளே சென்றனர். அந்த யுவன்தான் காரை ஓட்டி வந்தான். கேட்டிற்குள் திரும்பும் சமயம் என்னை நிமிர்ந்துஅவன் பார்த்தபார்வை என்னை விழுங்கிவிடுவது போலவே இருந்தது! உள்ளே செல்லுகையில் மீண்டும் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

எனக்கும் ஏனோ அவன் மீண்டும் பார்த்தது அதிக உற்சாகத்தை அளித்தது! அன்றிரவு தம்பூராவை வைத்துக் கொண்டு பாடிக்கொண்டிருந்தேன். அப்போது அம்மா உள்ளே வந்து, "போறும். கீழே வந்து பாடு! அந்த எதிர் வீட்டுப் பையன் தடியனாட்டமா வராந்தாவிலே நின்னுண்டு எட்டி எட்டிப் பார்க்கிறான்!" என்று சொன்னபோது எனக்கு மிக்க ஆனந்தமாக இருந்தது: "யாரோ, இவர் யாரோ!" என்று, ஒரு இளம் பெண், ஒரு இளங் காளை தன் வீட்டு வராந்தாவில் உலாவிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் ஆரம்பித்துப் பாடினால்எட்டிப் பார்க்காமலா இருப்பான்? அதிலும் அவன் அங்கேயே நின்றுகொண்டு தன் பாட்டைக் கேட்கிறான் என அறிந்தவுடன் "சந்திர பிம்ப முகமலராலே என்னை தானே பார்க்கிறார்" என்று நிரவல் செய்து ரத்னமாக அதை இழைத்துப் பாடினால், பேசாமல் காதைப் பொத்திக்கொண்டு கண்களை எதிர் வீட்டிற்குள் செலுத்தாமல் இருக்கக்கூடிய யுவனும் இருக்க முடியுமா? அம்மா மனம் கோணாத படி கீழே சென்றேன், பாட மனமின்

றியே. அப்போது வெளியே போய்விட்டுத் திரும்பின என் தந்தை "ஏது, ஸௌனி இன்றைக்கு ஜோராக இருக்கிறதே உன் பாட்டு" என்றார் மகிழ்ச்சியுடன். இதற்கெல்லாம் காரணம் அந்த எதிர் வீட்டு யுவன்தான் என்று அவர்கள் அறிவார்களா?

அன்றிரவு படுக்கையில் படுத்துக் கொண்டேன். எனக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. மெல்ல எழுந்து விளக்கைப் போட சுவரைத் தடவியவாறே சென்றேன். தற்செயலாக ஜன்னல் வழியாகப் பார்த்தேன். என் மனம் தூக்கிவாரிப் போட்டது. அந்த யுவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். திரும்ப வந்து படுக்கையில் படுத்துக் கொண்டேன். மீண்டும் ஒரு மணி கழிந்தும் நித்திரா தேவி என் மீது சிறிதும் சிரத்தை காட்டவில்லை. அவன் உருவம் வந்து என் முன்னே தோன்றியது. இந்த அவஸ்தையை நீக்குவோம் என்று நினைத்துக் கொண்டு எழுந்தேன். அவன் மீண்டும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். விளக்கைப் போடக் கூடாது என நினைத்த வாறே என் தலையணையின் கீழ் இருந்த டார்ச்சை எடுத்தேன். ஏற்றினேன். புஸ்தக அலமாரிகளுக்குச் சென்று ஒரு புஸ்தகத்தை எடுத்துப்படிக்க ஆரம்பித்தேன். ஒரு மணி, இரண்டு மணி, மூன்று மணியும் கழிந்தது. முதல் பக்கத்தை விட்டு என கண்கள் நகரவேயில்லை. மனம் என்னையும் மீறி அவனைப் பற்றி விமர்சனம் செய்துகொண்டேபோயிற்று. "இது ஏதடா கஷ்டம்" என்று என் வாய் முணுமுணுத்தது.

கண்கள் புஸ்தகத்தைவிட்டு எதிர் வீட்டு ஜன்னலை நோக்கின. பளிச்சென்று மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் இப்பொழுது ஜன்னல் அருகே நிற்கவில்லை. மேஜை அருகே உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைத் திறந்து கையில் வைத்துக்கொண்டிருந்தான். ஆனால் கண்கள் என் அறை ஜன்னலை அடிக்கொரு தரம் பார்த்துக் கொண்டிருந்தன. தூக்கம் இன்மையால் என்னை சோர்வு பற்றிக் கொண்டது. படுக்கையில் தொப்பென்று விழுந்தேன். அவன் பெயர் என்னவோ என்றது என் மனம். "ஒருவேளை சங்கநாதனோ"—இவ்வாறு பதிலளித்தது உள்ளம். எனக்கு என்னுடைய அன்றையப் போக்கு மிக விசித்திரமாக இருந்தது. எட்டு மணிக்

கெல்லாம் தூங்கும் நான் ஏன் இன்று மூன்று மணி ஆகியும் விழித்துக்கொண்டிருக்கிறேன். இனி கட்டாயமாகத் தூங்கவேண்டும் என்று தீர்மானித்துகண்களை இறுக மூடிகொண்டேன். அலை அலையாக வாரிவிட்ட கிராப்பு, நீண்டு வளைந்த மூக்கு, புன்னகையே ஆபரணமாகப் பூண்ட உதடுகள் ஆகிய அனைத்தும் பெற்றிருந்த ஒரு யுவனின் முகம் என் கண்களினின்று அகல மறுத்தது. மனமும் எவவளவோ கண்டித்தும் தன் பொல்லாத்தனத்தைச் சற்றும் விடாமல் அவனையே நினைத்து உருகியது. "ஒரு வேளை இதுதான் காதலோ? புத்தகங்களில்கூட படித்திருக்கிறோமே" என்றேன் என் உள்ளத்திடம். "ஆம்...." என்றது அது சிறிதும் தயங்காமல்.

மறு நாள் காலை எழுந்ததும் என்றும் இல்லாத "உடனே குளித்தல்" என்ற வழக்கத்தை மேற்கொண்டேன். அத்துடன் நில்லாமல் சூட்டோடு சூடாக மிக அழகாக தலையை வாரி பின்னி விட்டுக் கொண்டது அம்மாவுக்கு அதிக ஆச்சரியத்தை அளித்தது. "எங்கேயாவது வெளியே போகப் போகிறாயோ?" என்று கேட்டாள்.

அதற்குள் அங்கு வந்த என் தந்தை "யாராவது பெண் பார்க்க வருகிறார்களோ? யாராவது வந்தால் நிச்சயம் சொக்கிப் போய் விடுவான்!" என்று கலாட்டா செய்ததைக் கேட்டு என் மனம் பூரித்தது. என் மனமோவெனில் 'எதிர் வீட்டுப் பையன் அப்படி என்னைப் பெண் பார்க்க வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என சிறிதும் வெட்கமில்லாமல் எண்ணத் தொடங்கியது.

நாட்கள் பறந்தன. நவராத்திரி ஆரம்பமாகியது. அவர்கள் வீட்டிலிருந்த அந்தப் பெண்கள் இருவரும் எனக்குத் தோழிகளாகி விட்டனர். மெதுவாக அந்த யுவனின் பெயரையும் தெரிந்து கொண்டேன். அதிகமாக வளர்ப்பானேன்; நாளடைவில் எங்கள் இரு குடும்பங்களும் சினேகமாகி விட்டன. ஆனால் அம்மாவுக்கோ அப்பாவுக்கோ அந்தப் பையனைப் பிடிக்கவே யில்லை.

நான் எஸ். எஸ். எல். ஸி தேறி விட்டேன். காலேஜிலும் சேர்ந்தேன். அவனும் நானும் ஒரே வகுப்பில்தான் படித்தோம். அவனையும் மன்மத பாணம் தாக்கி யிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் நான் கலாசாலைக்குக் கிளம்பும் வரை, தான் தயாராக இருந்த போதிலும் தன் காரில் கிளம்ப மாட்டான். நான் கலாசாலை செல்லா விட்டால் அவனும் அன்று மட்டம். கலாசாலை வாயிலில் ஒன்ருகவே போய்ச் சேருவோம். உள்ளே செல்வதும் ஒன்ருகத்தான். ஒரு நாள் என் கார் டயர் பாதி வழியில் கிழிந்து விட்டது. பக்கத்தில் வந்த அவன் கார் சரக்கென்று நின்றது. அவன் காரை விட்டு இறங்கினன். காரின் பின் பக்கத்துக் கதவைத் திறந்து "உட்காரலாமே" என்ருன் புன்னகையுடன். வேறு வழியின்றி ஏறி உட்கார்ந்தேன். வீட்டிற்குள் செல்லும் போது அவன் என் புத்தகங்களை எடுத்துக் கொடுத்தான். உடனே மீண்டும் என் கார் இருந்த இடத்திற்குச் சென்று அதை ரிப்பேர் செய்து, வீட்டிற்குக் கொண்டு வந்து விட்டுப் போனன்.

அன்றிரவு என் புத்தகத்தைப் படிக்கும் பொருட்டுத் திறந்தேன். அதிலிருந்து லொட்டென்று ஏதோ கீழே விழுந்தது: ஒரு பெரிய கவர் ஒன்று என் காலடியில் கிடந்தது. அதை எடுத்துப் பிரித்தேன். என்னுடைய போட்டோக்கள் அதிலிருந்தன. 'நான் ஒரு போட்டோவும் சமீபத்தில் எடுத்துக்கொள்ள வில்லையே! இது எப்படி இத்தனை விதமான போஸ்கள்!' எனப் பலவாறு எண்ணினேன். கடைசியில் என் கேள்விகளுக்குப் பதில் கிடைத்தது. அவைகளை அவனேதான் எப்போதோ எடுத்திருந்தான். ஒவ்வொரு போட்டோவின் பின்னுலும் "ஸ்ரீ....தன் அன்புமிக்க ஷீலினிக்கு அளித்தது" என எழுதியிருந்ததைக் கண்டு திகைத்தேன். அதைத் திருப்பிக்கொடுக்கலாமா வேண்டாமா என்று யோசித்தேன். ஒன்றுமே தோன்றவில்லை.

அம்மா எனக்குக் கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தாள். கடைசியில் ஒரு வரன். அதுவும் மிக உயர்ந்த சரக்கு என்று அவள் எண்ணம். அன்று வந்து புடவைக் கடையில் புடவையைப் பார்ப்பது போல், பெண் பார்க்கும் படலம் என்ற ஒரு இழிவு சந்தர்ப்பத்தை அளிக்க ஏற்பாடு செய்திருந்தாள். இத்தனையும் எனக்குத் தெரியாது. அன்று காலை தான் இந்த விஷயத்தை மெதுவாகப் பிரஸ்தாபித்தாள். அது கூடவேண்டாம்; நான் என்றும் அவள் பேச்சைக் கேட்பேன் என்று முதலில் அவள் எண்ணினளாம். ஆனல் அன்று நான் படுக்கையை விட்டு எழுந்திருக்க நேரமாகி விட்டதால், இன்னும் அரை மணிக்குள் நான் கீழே ஆஜராக வேண்டுமே என்ற கவலையில் சொல்லி விட்டாளாம்! எத்தனை நம்பிக்கை, என்ன பேச்சு. "எனக்கு வேண்டாமம்மா இந்தக் கல்யாணம்!" என்று சொல்ல நினைத்தேன் ஒரு கணம். அடுத்த நிமிஷம் நான் பேசாமல் இருப்பதைக் கண்டு அவள் முகமும் கண்களும் என்னைச் சீக்கிரம் 'டிரஸ்' செய்துகொள் எனக் கெஞ்சியவாறு காட்சியளித்த தோற்றம் என் எண்ணத்தை அறவே மாற்றியது.

'பேசாமல் அவள் எண்ணத்திற்கு இணங்கி அவனைப் பார்த்துவிடு. பின்னல் பிடிக்கவில்லை' என்று தட்டிக் கழித்து விடலாம் என்ற என் மனதின் யோசனையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்க ஆரம்பித்தேன். போகும் போது "சர்வ சம்மதம்; சீக்கிரத்தில் முகூர்த்தத்தை வைத்து விடுங்கள்" என்று அந்தப் பையன் சொன்னதைக் கேட்டு நான் மனதிற்குள்ளேயே கலீரென்று சிரித்து விட்டேன்.

அவன் போனவுடன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரு பெரிய தர்க்கம். என் சம்மதத்தை அறிய வேண்டும் என்பது அப்பாவின் கட்சி. "அவள் சிறு பெண்; அவளுக்கு நாம் செய்தால் வேண்டாம் என்ரு சொல்லப்போகிருள்" இது அம்மாவின் கட்சி. கடைசியில் அப்பாவின் கட்சி தான் ஜயித்தது. 'ஷீலீ! உனக்குஇந்தக் கல்யாணத்தில் சம்மதம்தானே!' என்ற கேள்வியை வெற்றிக்குறி முகத்தில் ததும்பக் கேட்டார். "அப்பா, எனக்குக் கல்யாணமே வேண்டாமப்பா! இன்னும் படிக்க வேண்டும் என்பது என் அவா" என்றேன்.

"குதிருக்கு ஆகிற மாதிரி வயது பத்தொன்பது ஆச்சு! பி. ஏ.தான் முடிச்சாச்சே! இன்னும் என்ன படிப்பு வேண்டியிருக்கிறது?" அப்பாவின் கட்சி

விஜயாவின்

மகத்தான புராணப்படம்

சசிரேகா

பரிணயம்

டைரக்ஷன்

K.V. ரெட்டி

B.Sc. (Hons)

தயாரிப்பு... நாகிரெட்டி & சக்ரபானி

தனமாணிக்க அம்மாளின் சிஷ்யைகளான பானு, சாந்தா, வஸந்தா ஆகிய மூவரும் சென்னை ஸ்ரீ கிருஷ்ண கான சபையில் 18ம் தேதியன்று அழகாக நடனம் ஆடினார்கள்.

ஜயித்ததே என்ற கோபம் ஒருபுறம். நான் மறுக்கிறேனே என்ற கோபம் மற்றொருபுறம். எல்லாம் சேர்ந்து இந்தக் கேள்வியை காரசாரமாக வெளிப்படுத்தியது.

"அது சரி, அம்மா! நன்றாக யோசித்துச் சொல். இதெல்லாம் விளையாடும் விஷயமல்ல. உனக்கு மேல் படிப்பு படிக்க ஆசையிருந்தால் அவன் மறுப்புக் கூறமாட்டான். திரும்ப யோசித்து பின் எனக்குத் தெரிவி" என்றார் அப்பா. மேலே அவரிடம் பேச முடியாமல் யாரோ கட்சிக்காரன் வந்துவிட்டான்.

என் மனம் ஒரு நிலையில் இல்லை. பெற்றோர் மனதைத் திருப்தி செய்வதானால் எனக்கு வாழ்க்கை நரகமாகிவிடும். இல்லை, என் வாழ்க்கையை ரம்மியமாக நடத்த வேண்டும் என்றால் இனி அந்த வீட்டில் நான் வாழ இயலுமோ என்னவோ! பலவாறு மனதைத் துருவித் துருவி தலைவலி எடுக்க ஆரம்பித்தது. ஆறுதலாக ஒரு சினேகிதி வீட்டிற்குச் செல்ல நினைத்தேன். பத்து நிமிஷங்களுக்குள் நான் தெருவில் நடந்து கொண்டிருந்தேன். ஒரு கார் திடீரென என் பக்கத்தில் வந்து நின்றது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவன் தான் அதனுள் இருந்தான்.

"என்ன ஸுசீலினி! உனக்குக் கல்யாணமாமே!" என்று அவன் கேட்டது என் ஹிருதயத்தைக் கோடாரியால் வெட்டுவது போல் இருந்தது. முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயன்றேன். என்னையும் மீறி இரு துளி கண்களில் இருந்து விழுந்தது. "வருந்தாதே ஸுசீலி. நான் பல நாட்களாக உன்னிடம் என் மனத்தை வெளிப்படுத்த நினைத்தேன். ஒரே வார்த்தையில் கூறுகிறேன், நான் உன்னை எவ்வளவு நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியாது. உனக்குக் கல்யாணம் என்று கேட்டவுடன் என் மனம் இரண்டாகப் பிளந்தது. ஏன் உனக்கு இந்த நரக வாழ்வு. ஒரே வார்த்தையில் "சம்மதம்" என்று சொல்லிவிடு. நான், உலகமே என்னை எதிர்த்தது என்றாலும் என் மேல் ஆணையாக உன்னையே மணப்பேன்."

"வேண்டாம், இதைப்பற்றியெல்லாம் என்னிடம் தயவு செய்து பேசி, என் துக்கத்தை அதிகரிக்காதீர்கள்!" என்று சொல்லிவிட்டு அவனை திரும்பிப் பாராமல் விர்ரென்று நடந்து விட்டேன்.

அன்றிரவு அவன் முகம், அவன் சொற்கள் எல்லாம் என் மனதில் மீண்டும் மீண்டும் தோன்றின. மற்றொருபுறம் பெற்றோரின் வேண்டுகோள். இவை இரண்டும் என்னைத் தீயிலிட்ட புழுவைப் போல் துடிக்கச் செய்தன. நீண்ட நேரம் ஆகியும் ஒரு வழியும் தோன்றவில்லை. எழுந்து உட்கார்ந்தேன். பளிச்சென எரிந்த அந்த மின்சார விளக்கு என் மனதிலும் பளிச்சென ஒரு யோசனையை உண்டு பண்ணியது. மறு நிமிடம் நான் அப்பாவின் அறையில் நின்றேன். நிமிர்ந்து என்னைப் பார்த்த அப்பா ஒரு புன்முறுவல் பூத்தது எனக்குச் சிறிது தைரியத்தையே அளித்தது.

"எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம், அப்பா!" என்று தயங்கித் தயங்கி கூறினேன் நான்.

"சரி, உட்கார். இந்தக் கல்யாணம் வேண்டாமா? அதைப்பற்றி தீர ஆலோசனை செய்து தான் சொல்கிறாயா?"

"ஆம். அப்படித்தான்."

"அதற்குக் காரணம்?"

"நான் அந்தப் பையனை விரும்பவில்லை."

"நிஜமாக விரும்பவில்லையா? அழகாகவும் குணவந்தனாகவும் இருக்கிறானே. அந்த மாதிரிப் பிள்ளைகள் கிடைப்பது மிகுந்த துர்லபம். தவிர, உனக்கு அவனைப் பிடிக்காமல் இருக்கலாம். தானே விவாகம் ஆகி, அவனுடன் பழக ஆரம்பித்தால், பெண்கள் தங்கள் கணவன்மார்களை காதலிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று மனோசாஸ்திரிகள் கூறுவது பொய்யல்ல."

"அது மாத்திரம் இல்லை, அப்பா. நான் வேறொருவரை..........."

"என்ன? வேறொருவரைக்...........?"

"காதலிக்கிறேன்..........."

"அம்மா! என்னைக் கேட்டால் காதல் என்பது முக்காலும் நிலைத்திருப்பதில்லை. அது நிலையில்லாத கவர்ச்சியே தவிர, வேறொன்றுமில்லை. என்னைப் பாரேன். நான் கல்யாணத்தின் முன் உன் அம்மாவைப் பார்த்ததும் கிடையாது, பழகியதும் கிடையாது. ஆனால் கல்யாணம் ஆன அந்த நிமிஷத்தில் இருந்து அவள் மீது என்னையும் அறியாமல் அன்பு ஏற்பட்டது. அவளுக்கும் அப்படியே! இப்போதும் கூட எங்கள் அன்யோன்யம் குறைந்திருக்கிறதா? எங்களுக்கும் வயதாகி விட்டது. உன்னைப் பெற்றவர்களைத் திருப்தி செய்ய வேண்டியது உன் கடமை இல்லையா?"

பேச வழியில்லாமல் தன் சொல் வன்மையால் கட்டிப் போட்டு விட்டார் அப்பா. என் அறைக்கு மீண்டும் வந்தேன். எந்த வழி போவது என்று தோன்றாமல் தவித்தேன். பெற்றோர் பாசம் ஒருபுறம், காதல் இன்னொரு புறமாக இழுத்தது. எது வெற்றி பெறுமோ!

மறு நாள் காலை அம்மாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. 'ஏண்டி! நேற்று வந்த பிள்ளையைப் பிடிக்கவில்லை என்று சொன்னாயே, எதிர் வீட்டுத் தடியனை ரொம்பப் பிடிச்சிட்டதோ!' என்ற அவள் சொல்லம்பு மிக்க வல்லமை வாய்ந்ததாக இருப்பினும் உண்மையும் நிரம்பியதாகவே இருந்தது என்பதை நான் உணராமல் இல்லை. அத்துடன் தொடர்ந்து வந்த மற்றொரு செய்தி என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "அவனுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆயிடுத்து. உன் கதி தான் அதோ கதி!" என்ற மற்றொரு சொல்லம்பு என்னை இன்னும் கலக்கியது.

அன்றுமுழுவதும் நான் வீட்டிலேயே அடைத்துக் கிடந்தேன். மாலை வீட்டில் ஒருவரும் இல்லை. சற்று நேரம் காற்று வாங்கும் எண்ணத்துடன் முன் தோட்டத்தில் நிலவொளியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்தேன். ஏதோ காப்பி அருந்தினேனே யொழிய என் எண்ணமெல்லாம் எதிர் வீட்டு அழகனிடம் சென்றுவிட்டது.

எவ்வளவு நேரம் இப்படி சிந்தனையிலிருந்தேனோ தெரியாது. "ஸிலினி!" என்று மெதுவாக யாரோ கூப்பிட்டு என் தோளில் கை வைத்ததும் திடுக்கிட்டுத் திரும்பினேன்.

என் மனதில் உருப் பெற்றிருந்த உருவம் என் கண் முன்னாலேயே காட்சியளித்தது.

[அடுத்த மாத ஊசியில் முடிவுறும்]

பியட் புதிய 1100–திறப்பு விழா

சென்ற மாதம் 14-ம் தேதி, "**பியட் புதிய 1100**" என்ற புதிய காரின் திறப்பு விழாவை, அதன் தென்னிந்திய (மதராஸ், மைசூர், ஆந்திரா, தி-கொச்சின்) விற்பனை உரிமையாளர்களான டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்டு ஸன்ஸ் லிட், சுந்தரம் மோட்டார்ஸ் ஸ்தாபனத்தார் நடத்தினார்கள். இந்த விழாவை சென்னைப் பிரதமர் கே. காமராஜ் நாடார் ஆரம்பித்து வைத்தார். நகரத்தின் பல பிரமுகர்களும், மோட்டார் வியாபாரப் பிரமுகர்கள் பலரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். விழாவை ஆரம்பித்து வைத்து "இவர்கள் மோட்டார் துறையில் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். ஆகவே, வாடிக்கைக்காரர்களுக்கு பூரணத் திருப்தி அளித்தே தீருவார்கள்" என்று அவர் குறிப்பிட்டார்.

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்டு ஸன்ஸ், சுந்தரம் மோட்டார்ஸ், மெட்ராஸ் ஆட்டோ ஸர்வீஸ் இவைகளைச் சேர்ந்த டி. எஸ். ராஜம், டி. எஸ். கிருஷ்ண, டி. எஸ். சந்தானம் ஆகியோர் மந்திரியை வரவேற்றனர். சரஸ்வதிகான நிலைய மாணவிகளின் பிரார்த்தனைக்குப் பின் விழாவை பிரதமர் ஆசி கூறி ஆரம்பித்து வைத்தார்.

டி. எஸ். ராஜம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இப் புதிய மாடல் கார் பற்றி அவர் விளக்கிக் கூறினார். பின்னர், இந்தக் கார்களை இந்தியாவில் தயாரிக்கும் பம்பாய் பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்டின் டைரெக்டர் சினுபாய் கிலாசசந்த், பியட் மோட்டார் கம்பெனியின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் எப். ஸி. கிரிக்ஸியோலி ஆகியோர், **பியட் புதிய 1100** காரின் சிக்கனம், உறுதி இவைகள் பற்றி விவரித்து, அந்தக் காரின் விற்பனை உரிமையை டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்டு ஸன்ஸ், சுந்தரம் மோட்டார்ஸ் இவைகள் பெற்றிருப்பது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்கள். டி. எஸ். சந்தானம் வந்தனோபசாரம் கூறினார். முதன் மந்திரி மற்றும் சில பிரமுகர்களுடன் இக் காரில் முதல் பிரயாணம் செய்தார்.

அன்று காலை, சுந்தரம் மோட்டார்ஸ் காரியாலயத்தில் "**பியட் புதிய 1100**"ஐ பத்திரிகை நிருபர்களுக்குக் காண்பித்து அதன் சகல அம்சங்களையும் டாக்டர் கிரிக்ஸியோலி விளக்கிக் கூறினார். ஒரு பெரிய மோட்டாரில் கிடைக்கக்கூடிய சகல வசதிகளும் இந்த சிறு மோட்டாரில் அமைந்திருக்கின்றன. காரின் எடை 17 அந்தர்தான். காலனுக்கு சராசரி 35 மைல்கள் போகும், மணிக்கு 70 மைல் வேகத்தில் போகும். ஆறு பேர் ஏறிப் போகலாம்.

புதுப் படங்கள்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் ஸார், அடுத்தபடி "சக்குபாய்" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்களாம். எஸ். வரலக்ஷ்மி சக்குபாயாகவும், கண்ணாம்பா மாமியாராகவும் இப் படத்தில் நடிப்பார்களாம்.

"மதுரை வீரனை"ப் படமாக்க இருவர் திட்டமிட்டிருக்கின்றனர். நடிகர் டி. ஆர். மஹாலிங்கம் கோமதி பிலிம்ஸ் என்ற படக் கம்பெனியின் பெயரில் இப்படத்தைத் தயாரிக்கப் போகிறார். இப்படத்தில் அவரும் குமாரி ருக்மணியும் பிரதம பாகங்களில் நடிப்பார்களாம். சங்கீத டைரெக்டர் ஜி. ராமநாதனும் இந்தக் கதையைப் படமாக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

விஜய புரொடக்ஷன்ஸார் ஒரு புராணப் படத்தையும் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். "சசிரேகா பரிணயம்" என்ற அப்படம் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப்படுமாம். வாஹினி ஸ்டுடியோவில் தயாராக விருக்கும் இப்படங்களை கே. வி. ரெட்டி டைரெக்ட் செய்வார்.

ஸினி டெக்னீஷியன்கள் பலர் ஒன்று சேர்ந்து ஆரம்பித்துள்ளனர், ஸ்ரீ கணேஷ் பிலிம்ஸ் என்ற படத் தயாரிப்புக் கம்பெனியை. இவர்களது பெயரிடப் படாத படத்தின் ஆரம்ப பூஜை சென்ற மாதம் 15-ம் தேதி பிலிம் ஸென்டரில் நடைபெற்றது. இவர்களது முதல் படத்தில் பாலசந்தர், மனோஹர், எம். கே. ராதா, டி. எஸ். துரைராஜ், டி. கே. சம்பங்கி, ஆழ்வார் குப்புசாமி, பண்டரிபாய், [மைனாவதி, கிருஷ்ண குமாரி. பி. எஸ். ஞானம் ஆகியோர் நடிக்கப் போகிறார்களாம்.

பிரம்ம லோகம்

நாராயணன் கம்பெனியாரின் அடுத்த படம் இப்பொழுது வாஹினியில் படமாகத்தொடங்கியிருக்கிறது. இம் முறை அவர்கள் தயாரிப்பது ஒரு கிராமியக் கதை என்று தெரிகிறது. இப் படத்தின் வசனங்களை கே.வி. ஸ்ரீனிவாசன் என்பவரும், பாட்டுகளை வி. சீதாராமனும்எழுதியிருக்கின்றனர். தந்தையும் மகனும் சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று இப்படத்திற்கென சமீபத்தில் படமாகியது. தந்தையாக நாட் அண்ணாஜி ராவும், தநயனாக ஜெமினி கணேசனும் நடித்தார்கள். மற்றும் அஞ்சலிதேவி, லூஸ் ஆறுமுகம், பிரண்ட் ராமசாமி ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். படத்தை டி. ஆர். ரகுநாத் டைரெக்ட் செய்து வருகிருர். இப் படத்திற்கு தாற்காலிகமாக "கணவனே கண் கண்ட தெய்வம்" என்ற பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

எதிர்பாராதது

சரவணபவா-யூனிட்டி பிக்சர்ஸின் கூட்டுத் தயாரிப்பான "எதிர்பாராதது" தமிழ்ப் படம் கிட்டத்தட்ட பாதிப் படம் முடிவடைந்து விட்டதாம். ஸ்ரீதர் எழுதியுள்ள இக் கதையின் வசனங்களை அவரும் ஜி. உமாபதியும் சேர்ந்து எழுதியுள்ளனர். சி. நாராயணமூர்த்தி டைரெக்ஷனில் இப்படம் நெப்டியூன் ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. நாகய்யா, சிவாஜி கணேசன், ஸஹஸ்ரநாமம், பிரண்ட் ராமசாமி, துரைஸ்வாமி, பத்மினி, எஸ். வரலக்ஷ்மி ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

மறுமலர்ச்சி

சீக்கிரமே திரையில் எதிர்பார்க்கக்கூடிய படங்களில் "மறுமலர்ச்சி" தமிழ்ப் படமும் ஒன்று. ஆனந்தா புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாகும் இது. ஜி.வரலக்ஷ்மி, ஸ்ரீராம் பிரதம பாத்திரங்களாக வருகின்றனர். மற்றும் நம்பியார், ஸி. எஸ். ஆர்., இ. வி. சரோஜா, ஜமுனா ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தின் டைரெக்ஷனை கே. எஸ். பிரகாஷ் ராவ் கவனித்து வருகிருர்.

மிஸ்ஸி அம்மா

விஜயா புரொடக்ஷன்ஸின் "மிஸ்ஸி அம்மா" என்ற சமூகப் படம் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் வளரத் தொடங்கி விட்டது. படத்தில் பானுமதி, சாவித்திரி, ஜெமினி கணேசன், எம். என். நம்பியார், கே. ஏ. தங்கவேலு, ருஷ்யேந்திரமணி ஆகியோர் முக்கிய பாத்திரங்களாக நடித்து வருகின்றனர். படம் வாஹினி ஸ்டுடியோவில், பிரஸாத் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது.

மதியும் மமதையும்

கோவை, சந்திர மோகன் — சலீம் பிக்சர்ஸின் கூட்டுத் தயாரிப்பான "மதியும் மமதையும்" படப் பிடிப்பு முடிவடைந்து நகாசு வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. படம் அநேகமாக இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் திரைக்கு வந்துவிடும் என்று தெரிகிறது. படத்தின் டைரெக்டர் ஜி.எம். பஷீர் முக்கியமானதொரு பாத்திரத்தில் நடித்திருக்கிருர். மற்றும் மோஹன், ராஜேஸ்வரி, விஜய குமாரி, குல்ஜார் பேகம், 'காமெடியன் ராஜு' ஆகப் பலர் நடித்துள்ளனர். குல்ஜார் பேகம், மீனு, சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் பின்னணியில் பாடியிருக்கிருர்கள இப் படத்தில்.

போன மச்சான் திரும்பி வந்தான்

மெர்க்குரி பில்ம்ஸின் "போன மச்சான் திரும்பி வந்தான்" படத்திற்கென, திருச்சிக்குச் சென்று சில காட்சிகளை சென்ற மாதம் படமாக்கி வந்தார்களாம். திருச்சி ஜங்ஷனிலும், திருச்சியில் உள்ள ஒரு காலேஜிலும் சில காட்சிகள் தயாரிக்கப் பட்டனவாம். இக் காட்சிகளில் குசலகுமாரியும் ஸ்ரீராமும் பங்கெடுத்துக் கொண்டார்களாம். படத்தில் வரக்கூடிய நடனக் காட்சிகள் அனைத்தும் படமாக்கப்பட்டு விட்டனவாம்.

நல்லவன்

சீக்கிரமே திரையிடப் படக் கூடிய படங்களில் "நல்லவன்" ஒன்ருக இருக்கும். இதுஸன்ரைஸ் புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாகும். ஒ. கே. துரையின் திரைக்கதைக்கு வச

னங்களை ஏ. எல். நாராயணன் என்பவர் எழுதியிருக்கிறார். பாட்டுகளை தஞ்சை ராமய்ய தாஸ் எழுதி யிருக்கிறார். சங்கீத டைரெக்ஷன் பொறுப்பு எம். எஸ். ஞானமணியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மனோஹர், நம்பியார், செருகளத்தூர் சாமா, முஸ்தாபா, நந்தாராம், ஸாயிராம், பி. கே. சரஸ்வதி, எஸ். ரேவதி, எஸ். ஆர். லக்ஷ்மி ஆகப் பலர் நடித்து வரும் இப் படத்தை எம். திருவேங்கிடம் டைரெக்ட் செய்து வருகிறார்.

13414

வைரமாலை

வைத்தியா பிலிம்ஸின் "வைரமாலை" படமாக உருப்பெற்று வரும் வேகத்தைப் பார்த்தால் படம் நிச்சயமாக அடுத்த மாத ஆரம்பத்தில் திரைக்கு வந்து விடுமெனத் தெரிகிறது. ஒரு பைத்தியத்திடம் கதாநாயகன் சிக்கிக் கொண்டு அவதிப் படும் தமாஷ் கட்டம் இப் படத்தில் இடம்பெற்றுள்ளது. பைத்தியமாக கே. ஆர். செல்லமும், கதாநாயகனாக மனோஹரும் இக்காட்சியில் நடித்துள்ளனர். மனோஹர், பத்மினி, ராகினி, தங்கவேலு போன்ற நக்ஷத்திர நடிகர்களுடன் மாலி, வாதிராஜன், ராகவன் என்ற புது முகங்களையும் இப் படத்தில் முக்கிய பாத்திரங்களில் காணலாம். கதை-வசனம் எழுதியுள்ள விஸ்வநாதனும் சிறு பாகம் ஒன்றில் நடித்து வருகிறார். ஜகன்னாதன் டைரெக்ஷனில் வாஹினியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது வைத்தியா பிலிம்ஸாரின் இப் படத்தின் படப் பிடிப்பு வேலைகள்.

வாடாமலர்

மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் உருவாகிக் கொண்டிருக்கும் "வாடாமலர்" தமிழ்ப் படம், மல்லிகா புரொடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்பாகும். ஒரு விதவையின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமாம் திரைக்கதை. வசனங்களையும் பாடல்களையும் டி. எம். வி. சாமி என்பவர் எழுதியிருக்கிறார். இதில் "கலைஞன்" என்ற உப நாடகம் ஒன்று வருகிறதாம். சி. எஸ். எம். நாயுடு என்பவர் டைரெக்ஷனில் உருவாகும் இப்படத்தில் நடிப்பவர்கள் அனைவருமே புது முகங்கள் தானாம்.



Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

இலங்கை ஏஜண்ட் :

M. C. A. ஹுதா அண்ட் கோ.,

20, டாம் தெரு :: கொழும்பு

Registered as a News Paper in Ceylon.